www.gnanam.info
www.gnanam.lk

ஜூன் 2023

ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

277

09 JUN 2023



24 ஆவது அகவையில் ஞானம்

விலை :
ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

பேசும் நாணயங்கள்... 6

ஞா.பா.

இலங்கையின் நாணய வரலாற்றிலே நாணயங்களில் அதிகமாகப் பொறிக்கப்பெற்ற உருவமாக பொலனறுவையில் காணப்படும் முதலாம் பராக்கிரமபாகு காலத்துக்குரிய கற்சிலை அமைகின்றது. முனிவர் தோற்றத்திலே கையிலே ஏடு ஏந்தி நிற்கும் அமைப்பிலே இருக்கும் இந்தத் தோற்றமானது முதலாம் பராக்கிரமபாகுவின் உருவம் என்ற பரவலான புரிதல் மக்கள் மத்தியிலே உள்ளது.

(12) இரண்டாம் எலிசபெத் ராணி – 5 ரூபாய் தாள் நாணயம்

ஆறாம் ஜோர்ஜ் மன்னனின் மறைவிற்குப் பின்னர் 1952ஆம் ஆண்டு தமது 25ஆவது வயதிலே ஐக்கிய இராஜ்ஜியத்தின் ராணியாக முடிசூடிய இரண்டாம் எலிசபெத் ராணி 70ஆண்டுகள் ராணியாக இருந்தார். இவரின் முகவுருவம் பதித்த ஒரு ரூபாய், 2 ரூபாய், 10 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் நாணயத் தாள்கள் 1952ஆம் ஆண்டு தொடங்கி இலங்கையிலே வெளியிடப்பட்டன. இந்த நாணயத்தாளின் பின்புறத்திலே பொலனறுவையின் பொத்துவில் விகாரையிலுள்ள சிலையின் உருவத்தைக் காணமுடிகிறது.


CENTRAL BANK OF CEYLON
040647
FIVE RUPEES
3RD JUNE 1952
ஐந்து ரூபாய்
5


CENTRAL BANK OF CEYLON
FIVE RUPEES
ஐந்து ரூபாய்
5

(13) 1956ஆம் ஆண்டு – 5 ரூபாய் தாள் நாணயம்

1956ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தாள் நாணயத்திலே முதன்முதலாக நாணய வரலாற்றிலே 'வாளேந்திய சிங்கத்தின் உருவம்' இலங்கையின் சின்னமாக (Emblem or Coat of Arms) பயன்பாட்டில் உள்வாங்கப்பட்டது. இந்த தொடரில் வெளிவந்த நாணய தாள்களிலும் முன்னர் வெளிவந்த 5 ரூபாய் நாணயத் தாளின் அதே சிலை உருவம் மீண்டும் பொறிக்கப்பட்டுள்ளது.


FIVE RUPEES
000644
1956-7-30
ஐந்து ரூபாய்
5


FIVE RUPEES
ஐந்து ரூபாய்
5

(14) பண்டாரநாயக்க – 5 ரூபாய் தாள் நாணயம்

1961ஆம் ஆண்டு தொடங்கி வெளியிடப்பட்ட பண்டாரநாயக்க தாள் நாணயத் தொடரிலும் 5 ரூபாய் நாணயத்தாளிலே, முன்னர் வெளிவந்த 5 ரூபாய் நாணயத்தாள்களில் பொறிக்கப்பட்ட அதே உருவம் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.


FIVE RUPEES
277059
1964-6-12
ஐந்து ரூபாய்
5


FIVE RUPEES
ஐந்து ரூபாய்
5

இங்கு காட்டப்பட்ட மூன்று 5 ரூபாய் நாணயத்தாள்களிலும் ஒரே விதமாக பொலன்னறுவையிலுள்ள கற்சிலையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

(குறிப்பு: இத்தொடரில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

...சன நூலகம்
யாழ்ப்பாணம்

ஒளி: 24
சுடர்: 01
277

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

	ஒரு வருடம்
Australia (AU$)	50
Europe (€)	40
India (Indian Rs.)	1250
Malaysia (RM)	100
Canada ($)	50
UK (£)	40
Singapore (Sin. $)	50
Other (US $)	50

- ⊙ *ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
- ⊙ *புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
- ⊙ *பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
- ⊙ *படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

இதழினுள்ளே.....

யாழ். ... சபை
31 MAY 2023
தாபனப்பகுதி

09 JUN 2023

⊙ **கவிதைகள்**

சி. அபினுஷா 08
நிலவூர்ச்சித்திரவேல் 11
ச. முருகானந்தன் 16
வதிரி. சி. ரவீந்திரன் 20
செல்லையா சுப்ரமணியம் 24
செ. சுதர்சன் 28

⊙ **சிறுகதைகள்**

தேவகி கருணாகரன் 03
யே. கிறித்துறாஜா 12
கீ. த. மாப்பஸான் / மலரன்பன் 21
(மொழிபெயர்ப்புச் சிறுகதை)
திக்குவல்லை கமால் 32

⊙ **கட்டுரைகள்**

பேராசிரியர் யோகராசா 09
வாகரைவாணன் 17
இரண்டாம் விசுவாமித்திரன் 25
வசந்தி தயாபரன் 29
செங்கதிரோன் 35
ஞா.பா.

விமர்சனம்

கோகிலா மகேந்திரன் 39
ஸ்ரீரஞ்சனி 44

⊙ **பத்தி**

பேராசிரியர் துரை மனோகரன் 42

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**

கே. பொன்னுத்துரை 47

⊙ **வாசகர் பேசுகிறார்** 48

ஆசிரியர் பக்கம்

மலையகம் 200

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகின்றன.

1823ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தின் கம்பளை அருகில் உள்ள சின்னப்பிட்டி என்ற இடத்தில் 150ஏக்கர் அளவிலான கோப்பித் (Coffee) தோட்டமொன்றை ஹென்றி பேர்ட் (Henrdy Bird) மற்றும் அவரது சகோதரர் ஜோர்ஜ்பேட் (Jeorge Bird) ஆகியோர் உருவாக்கினர்.

சுமார் பத்து வருடங்களில் இலட்சக்கணக்கான ஏக்கர்களாக கோப்பித் தோட்டங்கள் பெருகின. இந்தத் தோட்டங்களுக்கு கூலி வேலைகளுக்கு உள்நாட்டு சிங்களவர் வர மறுத்ததால், தமிழ்நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களைக் கொண்டு வந்தனர்.

கோப்பி பெருந்தோட்டங்கள் ஏமியா வஸ்டரிக்ஸ் (Hemileia vastatrix) என்ற நுண்மத்தாக்குதலுக்கு உள்ளாகி அழிவுற்றதன் பின்னர் பெருந்தோட்டத்துக்கு வந்திருந்த ஜேம்ஸ் டெய்ளர் என்பவர் 1867ஆம் ஆண்டு லூல்கந்தர தோட்டத்தில் தேயிலையைப் பயிரிட்டார். மொத்தம் 19 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டது. இது இலங்கையில் தேயிலை உற்பத்தியை ஊக்கமூட்டியது.

இந்தியாவில் இருந்த சாதிக் கொடுமைகளும், ஏழ்மையும் மக்கள் கூலிகளாக வரக்காரணங்களாய் இருந்தன. சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏழைத் தமிழ்த் தொழிலாளர்கள் கங்காணிகள் மூலம் சேகரிக்கப்பட்டு படகுகள் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். தலைமன்னார் கரையில் இறங்கிய பின்னர் அங்குள்ள முகாம் ஒன்றில் பல நாட்கள் தங்க வைக்கப்பட்டனர். அங்கிருந்து 131 மைல்கள் கால்நடையாகவே மாத்தளைவரை அழைத்து வரப்பட்டனர். வரும்வழியில் அட்டைக்கடி, கொசுக்கடி, தேள்கடி, பாம்புக்கடியுடன், கொடிய காட்டு விலங்குகளுக்கு இரையாகினர். காலரா, மலேரியா, அம்மை போன்ற கொடிய நோய்களால் மடிந்தனர். கொண்டு வரப்பட்ட தமிழ்க் கூலித் தொழிலாளர்களில் பாதிப் பேர் மடிந்தனர்.

அதனைத் தொடர்ந்து பத்து லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் ஆகின்றன. இந்த 200 ஆண்டு நிறைவு குறித்த நிகழ்வுகள் உலகெங்கும் பரந்தளவில் கொண்டாடப்படுகின்றன. மலையக மக்களின் 200வருட வரலாற்றினை நினைவு கூறும் நிகழ்வுகள் பல்வேறு தரப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமையும்.

இவ்வருடம் முழுவதும் 200 வருட நிறைவு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், அரசியல் கட்சிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புகள், மத நிறுவனங்கள், தனிநபர்கள் என பலரும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளனர். குறிப்பாக தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் வரும் செப்டெம்பர் மாதம் பெரிய அளவில் மலையகம் 200 நிகழ்வு கொண்டாடப்படவிருக்கிறது.

இந்நிலையில் 200 வருடங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வளமூட்டிக் கொண்டிருக்கும் மலையக மக்களை தனித்தேசிய இனமாகப் பிரகடனப்படுத்தி அவர்களை தேசிய நீரோட்டத்துக்குள் உள்வாங்கவேண்டும். அத்துடன் ஏனைய சமூகங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சகல அந்தஸ்த்துகளும் மலையக மக்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

* * *

அதே கதி!

தேவகி கருணாகரன்

"இஞ்சாருங்கோ எந்த துணிவிலே எங்கட மகளின்ட கர்ப்பப்பை குழாயை, (ஃப்லோபியன் டியுப்) கட்டிப்போட்டு வந்தால்தான் இந்தக் கல்யாணம் நடக்கும் என்று சொல்லுவினம்," என மன ஆதங்கத்தோடு கேட்டாள் மகாலக்ஷ்மி.

"மகா, எங்கட மகள் சித்ராவுக்கு முப்பத் திரண்டு வயதாகிவிட்டது. அவளுக்கு ஏழாம் வீட்டிலே சனி. அவளின்ட சாதகத்தோடு, அருமையாக ஒன்று இரண்டு சாதகம் தான் பொருந்தும். இந்த மாப்பிள்ளையின் சாதகத்தோடு எங்கள் மகளின்ட சாதகம் நல்லா பொருந்துதாம் என்கிறார் தரகர் சங்கரன். அதுவும் சும்மாவா! அவுஸ்திரேலியா மாப்பிள்ளை அல்லவோ. அங்கே நல்ல உத்தியோகம், கைநிறைய சம்பாதிக்கிறார். மனைவி இறந்து மூன்று வயதுக் குழந்தை இருப்பதால், அந்த பிள்ளைக்கு ஒரு தாயும். தனக்கும் ஒரு துணையும் வேணுமென்றுதான் இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணைக் கட்ட விரும்புகிறார் என்று தரகர் சொல்லுறார்," என்றார் அவள் கணவர் மகாலிங்கம்.

"அதற்காக ஏன் தன்னை கட்டப்போற பெண்ணை இப்படி கர்ப்பப்பை குழாயை கட்டிப்போட்டுத்தான் கல்யாண மேடைக்கு வரவேணுமெண்டு ஒரே பிடியாக இருக்கிறார்? கல்யாணம் கட்டுறது பிள்ளை குட்டிகள் பிறந்து வம்சம் பெருகிறதுக்கு தானே?"

"புதுசா வாற பெண்டாட்டிக்குப் பிள்ளை பிறந்தால், மூத்த தாரத்து பிள்ளையை நல்லா பார்த்துக் கொள்ள மாட்டாள், ஓர வஞ்சனையாக இருந்துவிடுவாளோ என்ற பயம்தான்," என தனக்குத் தெரிந்த உண்மை எல்லாவற்றையும் கொட்டினார் மகாலிங்கம்.

"அதற்காக இப்படி ஒரு நியாயமற்ற நிபந்தனையைப் போடலாமா?" எங்கள் மகளும் படித்து நல்ல வேலையிலே இருக்கிறாள். என்ன அவள் நிறமாகயில்லை, அதைவிட அவளுக்கு என்ன குறை?" இந்த அநியாயத்தை தாங்கமுடியாமல் கேட்டாள் மகாலக்ஷ்மி.

தந்தையும் தாயும் பேசியதைப் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள் சித்ரா. ஒரு வாரமாக இந்த சிட்னி மாப்பிள்ளை பற்றிய கதைதான் வீட்டில். சித்ராவுக்கும் எல்லா விவரமும் பெற்றோர் சொல்லியிருந்தார்கள். அறையிலிருந்த நிலைக் கண்ணாடி முன் போய் நின்று சித்ரா தன் உருவத்தை நுணுக்கமாகவே ஆராய்ந்தாள். முகத்தில் கண், மூக்கு, உதடுகள் அந்தந்த இடத்திலிருந்தன. ஆனால் அந்த முக அம்சங்களில் ஒரு கவர்ச்சியுமில்லை வெறும் சாதாரண முகமாகவே அவளுக்கு பிரதிபலித்தது. முப்பத்திரண்டு வயதைத் தாண்டிய தன் உடம்பை இடம், வலம் எனத் திருப்பித் திருப்பி நிலைக் கண்ணாடியில் பார்த்தாள். ஒரு இளம் வயது கல்யாண யுவதியின் உடல் கட்டுக்கும் அவள் உடல் கட்டுக்கும் எவ்வளவு வித்தியாசம். இடையிலும் நாரியிலும் தாராளமாகச் சதைப் போட்டு, இரண்டு பிள்ளை பெற்ற உடம்புப் போல அவளுக்கு தெரிந்தது.

ஆறுதல் பரிசு

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி 2022

'அப்பாவும் அம்மாவும் தங்களுடைய ஒரே மகளைக் கட்டிக் கொடுத்து பேரப்பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். என் வயதை ஒத்த சினேகிதிகள் எல்லோரும் கல்யாணம் கட்டி கணவர் குழந்தைகள் என வாழ்கிறார்கள், எங்கட மகள் மட்டும் தனி மரமாக நிற்கிறாள். நாளைக்கு, நாங்களும் போய்விட்டால் அவளுடைய கதி என்ன? என அம்மா அப்பாவிடம் சொல்லி அழுவதை பல தடவை கேட்டிருக்கிறேன்.' என நினைத்துக் கொண்டிருக்க முன் தாழ்வராத்திலிருந்த தாயும் தந்தையும் சிட்னி மாப்பிள்ளையைப் பற்றித் திரும்பவும் பேசத் தொடங்கவும் கவனமாக கேட்டாள்.

"இந்த மாப்பிள்ளையிண்ட சாதகமும் எங்கட சித்ராவின் ஏழுச் செவ்வாய் சாதகத்தோடு நல்லா பொருந்துது. தவிர மாப்பிள்ளைன்ட பெற்றோர் இங்கேதான் இருக்கிறார்கள், அதனாலே அங்கே மாமா மாமி என்று எந்த பிச்சல் பிடுங்கலும் இருக்காது" என மகாலிங்கம் தன் கருத்தைச் சொன்னார்

"கல்யாணத்திற்கு முன் கர்ப்பப்பைக்குப் போகிற குழாயை கட்டிப்போட்டுத்தான் பெண் மணவறைக்கு வரவேணும் என்று சொல்லுவது, பிச்சல் பிடுங்கல் இல்லையா? இதனாலே அவளுக்கென்று ஒரு பிள்ளையும் எங்களுக்கும் ஒரு பேரப்பிள்ளை ஒன்றுமே கிடையாமல் போயிடும்," எனச் சேலைத் தலைப்பை உதறி இடுப்பில் செருகியபடி உள்ளே செல்ல எழுந்தாள் மகாலக்ஷ்மி.

"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் எப்படி? இப்படி எல்லாம் பார்த்தா எங்கள் மகள் சித்ராவுக்குக் கல்யாணமே நடக்காது. அவள் கன்னியாகத் தனித்து வாழவேண்டியது தான்." என்றார் மகாலிங்கம்.

மகாலிங்கம் சொல்லி முடிக்கவும் அவரது கைபேசி "அன்பே சிவம்" என ஒலித்தது. மறு முனையில் தரகர் சங்கரன் தான் பேசினார்.

"ஐயா நாளைக்குப் புதன் கிழமை நல்ல நாளாம். உங்களையும் சந்தித்து பெண்ணையும் பார்த்து மற்ற விசயங்களையும் பேசலாமா என்று மாப்பிள்ளை கேட்கிறார். அவருக்கு லீவு இன்னும் இருபது நாளில் முடிந்துவிடும். சிட்னி போகவேணும். அதற்கிடையில் ஆகவேண்டியதை செய்து கல்யாணத்தையும் வைக்கவேணும் தானே?" என்றார் தரகர்.

"ஒருக்கா எண்ட..........மகளிண்ட மு..........டிவை கேட்டு.........விட்டுச் சொல்லுறேன்" என இழுத்தார் மகாலிங்கம்.

"ஓம் ஓம் மகளிண்ட முடிவு முக்கியம். ஆனால் நாளைக்குப் பின்னேரம் ஐந்து மணிக்குள்ளே முடிவை சொல்லிவிடுங்கோ. இன்னுமொரு பகுதிக்கும் இந்த மாப்பிள்ளையை பிடித்திருக்கு. சும்மாவா சிட்னி மாப்பிள்ளை அல்லவா?" என்றார் தரகர்.

கைபேசியில் தகப்பன் தரகருக்குச் சொன்ன பதிலை பக்கத்து அறையிலிருந்த சித்ராவுக்கும் கேட்டது.

"அடுத்து அப்பா என்னிடம் வந்து உன் முடிவு என்னம்மா என கேட்கப்போறாரே? எத்தனை கல்யாண தரகர்கள், எத்தனை மாப்பிள்ளைகள் என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்? பெண் சுமாராகவும், நிறமாகவுமில்லை எனவும் சீதனத்தை ஒரு ஐந்து லட்சம் கூட்டிக் குடுத்தால் மாப்பிள்ளை வீட்டாருக்கு சம்மதமாம் என்றும் தரகரிடமிருந்து அடுத்த நாள் பதில் வரும். ஏன்? கல்யாண திகதியும் முடிவான பின் சீதனம் கூட்டிக்கேட்டு என் கல்யாணம் நின்று போகவில்லையா? எந்த சீதனமும் வேண்டாம் படித்திருந்தால் போதும். என் மகனுக்கு தாயாகவிருந்து பாசத்தோடு பார்த்துக் கொண்டால் போதும் என இந்த வெளியூர் மாப்பிள்ளை கேட்கிறார். எனக்கும் வயது ஏறிக் கொண்டு போகுது. பேசாமல் இவரையே கட்டிக்

கொண்டு சிட்னி போய் வாழலாம். அப்பா அம்மாவுக்கு திருப்தியாக இருக்கும்.' என தன் மனதுக்குள்ளே முடிவெடுத்து கொண்டாள்.

“அம்மா! சித்ரா இங்கே வாம்மா?” எனத் தந்தை அழைக்கவும், சித்ரா பதட்டப் படாமல் அவர் அமர்ந்திருந்த முன் தாழ்வாரத்திற்குப் போனாள்.

“சிட்னியிலிருந்து வந்திருக்கும் மாப்பிள்ளை மாதவனுக்கு நாளை ஐந்து மணிக்கு முன் எங்கள் முடிவை சொல்லவேணும் என்று தரகர் சொல்லுகிறார். உனக்கு மாப்பிள்ளை போட்டிருக்கும் நிபந்தனைகள் சொல்லியிருக்கிறோம் தானே. அவனோடு வாழப் போறது நீ, ஆகையால் அவரை கட்ட உனக்கு விருப்பமா இல்லையா? நீயே முடிவெடு. நாங்கள் உன்னைக் கட்டாயப் படுத்தமாட்டோம்,” என்றார் மகாலிங்கத்தார். ஏற்கனவே சித்ரா தன் மனதில் முடிவெடுத்திருந்தபடியால்,

“அப்பா எனக்கு சிட்னி மாப்பிள்ளையைக் கட்ட சம்மதம்,” எனப் பட்டென்று பதிலளித்தாள்.

திகைப்பில் ஒரு கனம் வாயைத் திறந்த படியிருந்த மகாலக்ஷ்மி, ”ஏண்டி! இவரைக் கட்டினால் உனக்கென்று ஒரு பிள்ளை பிறக்காதே,” என்றாள் கீச்சிட்ட குரலில்.

“முப்பத்திரெண்டு வயதைத் தாண்டிய எனக்கு இனி பிள்ளை பிறக்கும் என்று என்ன உத்தரவாதம். ஒரு பிள்ளைக்குத் தாயாக இருக்கிற வாய்ப்பு கிடைக்குதே, அதுவே போதும்.” முகத்திலோ குரலிலோ எந்த உணர்ச்சியுமின்றி சாதாரணமாக பதிலளித்தாள் சித்ரா.

இருதய நோயாளியான மகாலிங்கத்துக்கு மனதிலிருந்த வேதனையோடு சித்ராவின் பதிலால் இருதயம் வலித்தது, அந்த வலி நெஞ்சிலே பரவத்தொடங்கியது. சட்டென்று சேர்ட் பொக்கட்டிலிருந்த சிறு மருந்து புட்டியை எடுத்து நாக்கிற்கு கீழ் தெளித்து விட்டுச் சாய்ந்து அமர்ந்து கொண்டார். நெஞ்சு வலி முற்றாய் போனபின் ஒரு இரண்டு மணித்தியாலம் கழித்து தரகரைக் கைபேசியில் அழைத்து, “எங்கள் எல்லோருக்கும் சம்மதம், மாப்பிள்ளையிடம் நாளைக்கே வந்து எல்லா விசயங்களையும் பேசி முடிவெடுக்கலாம் என சொல்லிவிடுங்கோ,” என்றார்.

அடுத்த நாள் காலை பத்து மணிக்கு மேல் நல்ல நேரம் ஆகையால் மாதவன் தன் பெற்றோருடனும் தன் மூன்று வயதுக் குழந்தை றோசானுடனும் கூடவே தரகரும் வெள்ளவத்தையின் ஃபசல்ஸ் லேனில் இருந்த மகாலிங்கத்தின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை மகாலிங்கமும் அவர் மனைவியும் வாசலுக்கு வந்து வரவேற்றார்கள். உள்ளே வந்தவர்கள் அந்தச் சிறு வரவேற்பறையில் நெருக்கமாக அமர்ந்து கொண்டனர்.

மாப்பிள்ளையின் பெற்றோர், மகாலிங்கத்திடம் எப்படியிருக்கிறீர்கள் எனச் சுகம் விசாரித்தபின் வாயே திறக்கவில்லை.

குழந்தை றோசானை தன் மடியில் இருத்திக் கொண்டு அமர்ந்திருந்த மாதவன், “அங்கில்! அன்டி! தரகர் எல்லா விவரமும் சொல்லியிருப்பார் தானே,” எனக் கல்யாணப் பேச்சைத் தொடக்கினான்.

“ஓம் ஓம், மகளுக்கும் எல்லாம் தெரியும்.”

“அது நல்லம்......என்றாலும் அவவுக்கு முன்னாலே எல்லாத்தையும் கதைத்து முடிவெடுக்கிறது முக்கியம் தானே,”

“அம்மா சித்ரா, சித்ரா! மாப்பிள்ளை உன்னையும் வைத்து கொண்டுதான் கல்யாண விசயங்கள் கதைக்க விரும்புகிறார். இங்கே வாம்மா?” என அழைத்தார்.

இளம் சிவப்பு நிறத்தில் ஒரு பட்டுப் புடவையும் அதற்கு ஒத்துப் போகிற அதே நிறத்தில் கோடிட்ட ரவிக்கையும் அணிந்து, எப்போதும் போல் தனது அலை அலையான கூந்தலை வாரி இளைத்த ஒற்றைப் பின்னல் மார்பில் தவழ மெல்ல நடந்து வந்து எல்லோருக்கும் கோப்பி கொடுத்துவிட்டு காலியாக இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். மாதவன் சித்ராவின் தோற்றத்தை கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் தன் மகனிடம், அவளைச் சுட்டிக்காட்டி

“அங்கே பார் உனக்கு அந்த ஆன்டியைப் பிடித்திருக்கா? என மகனிடம் கேட்க அவனும் ‘ஓம்’ எனத் தலையை ஆட்டினான்.

“அப்ப நீ கொண்டு வந்த சொக்கலட்டை ஆன்டிக்கு குடுக்கிறியா?” எனக் கேட்டார். குழந்தை மாதவனின் மடியை விட்டு இறங்கி, சித்ராவை அணுகி சொக்கலட் பெட்டியைக் கொடுத்தான். பெட்டியை வாங்காமல் சித்ரா குழந்தையைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு

“உன் பெயர் என்ன?”எனக் கேட்டாள்.

“றோசான்”

"உனக்கு சொக்கலட் பிடிக்குமா?"

"ஓம், இது உங்களுக்காக அப்பாவும் நானும் சிட்னியிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தனாங்கள்," என்றான்.

"அப்படியா?" என்றவள் சொக்கலட் பெட்டியை திறந்து ஒரு சொக்கலட்டை எடுத்து றோசானின் வாயில் வைத்துவிட்டாள்.

"குழந்தை உங்கள் மகளோடு ஒட்டிக் கொண்டான். பிறகு என்ன? மிகுதியை பேசி முடிக்கவேண்டியதுதான்," என்றார் தரகர்.

"ஓம் பேசலாமே. எங்கள் சித்ரா பள்ளிப் படிப்பு முடிந்ததும், ஒரு வருடம் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் படித்து முன் பள்ளி கற்பித்தல் மேம்பட்ட சான்றிதழ் பெற்று, இப்போது கொழும்பிலே புனித பிரிஜெட்ஸ் கல்லுரியில் முன்பள்ளி ஆசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு பிள்ளைகளென்றால் கொள்ளைப் பாசம்." என்றார்," மகாலிங்கம்.

"அப்படியா?" என்ற மாதவன் எல்லோர் முன்னாலும், "சித்ரா! நான் கேட்டிருக்கும் சிறிய ஒபரேசனின் பின் விளைவுகள் தாக்கங்கள் பற்றி சரியாகப் புரிந்து கொண்டு, என்னைக் கல்யாணம் கட்ட சம்மதமா எனச் சொல்லுங்கோ?" என நேரடியாகவே கேட்டான்.

சித்ராவும், "எல்லாத்தையும் தெரிந்து, யோசித்து தான் நான் சம்மதிக்கிறேன்," என பதிலளித்தாள்.

"எனக்கு சித்ராவை நல்லா பிடித்திருக்கு. என் மகனுக்கு நல்ல தாயாக இருப்பாள் என நம்புகிறேன். எனக்குச் சீதனமா பணமோ வீடோ வேண்டாம். உங்கள் மகளை மட்டும் எனக்குக் கட்டித்தந்தால் போதும். ஸ்பெசல் லைசன்ஸ் எடுத்து கல்யாணத்தைக் கச்சேரியில் பதிவு செய்திடலாம். மற்ற விசயத்தைப் பற்றி நான் டொக்டருடன் எல்லா ஒழுங்கும் செய்திருக்கிறேன். இன்னும் இரண்டு நாளில் அந்த ஒபரேசனை செய்திடலாம்", என்றான் மாதவன். மகாலக்ஷ்மிக்கோ அவன் ஒரு வியாபார ஒப்பந்தம் பேசும் தோரணையில் பேசுவதாக பட்டது.

"எல்லோருக்கும் சந்தோசம் தானே? இன்னும் இரண்டு வாரத்திலே 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு நல்ல முகூர்த்தம் அண்டைக்குக் கலியாணத்தை வைத்திடலாம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்ற தரகர், தனக்குக் கிடைக்கப் போகின்ற கனமான தரகை நினைத்து வாயெல்லாம் பல்லாக இளித்தார்.

மாதவனும் அவன் பெற்றோரும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். சித்ராவின் பக்கத்திலிருந்து தந்தை மகாலிங்கம் சம்மதம் தெரிவித்தார்.

மகாலக்ஷ்மியோ "மாப்பிள்ளைக்கு எது நடக்காவிட்டாலும் பரவாயில்லை அந்தக் கர்ப்பத்தடை மட்டும் நடந்திட வேணுமெண்ட முடிவோடு தானிருக்கிறார். இதோடு எங்கள் பரவணியே இல்லாமல் போயிடுமே, இது என்ட மனுசனுக்கு புரியுதில்லையே" என மனதுக்குள் புழுங்கினாள்.

மகாலிங்கம் தனது தகுதிக்கு ஏற்ப செலவு செய்து மகளின் கல்யாணத்தை நடத்தினார். மாதவனும் இது இரண்டாவது கல்யாணம் என்றபடியால் பணமிருந்தும் அமர்க்களப் படுத்தாமல் கல்யாணத்தை எளிமையாக நடத்துவதையே விரும்பினான்.

கல்யாணம் நடந்து மூன்றாம் நாளே மாதவன் தன் மகனோடு சிட்னி போய்விட்டான். இரண்டு மாதத்தில் சித்ராவுக்கு மாதவனின் மனைவி என்ற அடிப்படையில் அவுஸ்திரேலியா வீசா கிடைத்தது. மாதவன் அனுப்பிய சிங்கப்பூர் விமான டிக்கட்டில் ஆர்வத்தோடும் ஒரு வித கிளர்ச்சியோடும் சிட்னியில் போய் இறங்கினாள். சித்ராவை ஆவலோடு அன்போடும் மாதவன், குழந்தை றோசான் மற்றும் மாதவனின் நண்பர்களும், அவர்களது குடும்பங்களும் வரவேற்றனர்.

வெள்ளவத்தை ஃபசெல்ஸ் லேனில் இரண்டு அறை வீட்டில் நினைவு தெரிந்த நாள் முதல் குடியிருந்த சித்ரா, கணவர் மாதவனின் இரண்டு அடுக்கு வீட்டைப் பார்த்து வியந்தாள். வீட்டுக்குள் போனதும் வரவேற்பறை, அதை ஒட்டினாற் போலச் சாப்பிடும் அறை அதற்கு பின்னால் குடும்ப அறை. படிக்கட்டில் ஏறிப் போகவும் மேல் மாடியில் நான்கு படுக்கை அறைகள் என விசாலமான வீடாகவிருந்தது. சித்ரா படிக்கட்டில் ஏறிப்போன போது சுவரில் மாதவனினதும் அவர் முதல் மனைவி ரேவதியினினதும் கல்யாணப் போட்டோவும்

அதற்கு அடுத்தாற்போல, மாலை அணிந்திருந்த ரேவதியின் போட்டோ தொங்குவதையும் கவனித்தாள். ரேவதி நல்ல நிறமாகவும் சினிமா நடிகை போல் அழகாகவுமிருந்தாள். ‘இவ்வளவு அழகான மனைவியை அவர் ஆழமாகக் காதலித்திருப்பார் போலும். எனினும் அவள் இழப்பிற்குப் பின் தன் மகனுக்கு ஒரு தாய் வேணுமென்பதற்காக என்னைக் கல்யாணம் செய்திருக்கிறார்,’ என்பதையும் உணர்ந்தாள்.

சிட்னி வாழ்க்கையும் சிட்னி குளிரும் எல்லாமே சித்ராவுக்குப் புதிதாகவிருந்தது. மாதவன் பொறுமையாக சிட்னி வாழ்க்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு அறிமுகப் படுத்தி சித்ராவை அன்போடு அவளது விருப்பு வெறுப்புகளை மதித்து நடந்து கொண்டான். அவளுக்குக் கல்யாண சுகத்தையும் கொடுத்து தானும் அந்த சுகத்தை அனுபவித்தான். சித்ராவுக்கும் மாதவன் மேல் அன்பும் பாசமும் வளர்ந்தது. றோசானை தன் சொந்த மகனாகவே பாசத்தோடு பார்த்துக் கொண்டாள். குழந்தை றோசானும் அம்மா என்ற உணர்வோடு அவளோடு ஒட்டிக் கொண்டான்.

இப்படியே இரண்டு வருடங்கள் உருண்டோடின. குழந்தை றோசான் முதலாம் வகுப்பு பள்ளிக்குப் போகத் தொடங்கியபின்,

“சித்ரா, விருப்பமென்றால் நீ உனக்குப் பிடித்த வேலை ஒன்றைத் தேடிக் கொள்,” என மாதவன் சொன்னான். சித்ராவும் தனது முன்பள்ளி கற்பித்தல் சான்றிதழையும் பத்து வருடமாகப் படிப்பித்த அனுபவத்தையும் காட்டி ஒரு பள்ளிக்கூடத்தில் முன்பள்ளி ஆசிரியர் ஆனாள்.

மாதவன், சித்ரா, றோசான் குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோசமாக ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் மகன் றோசானுக்கு பதினேழு வயது முடிந்திருந்தது. சமீபத்திலே றோசான் தனது கைகளிலும் கால்களிலும் உணர்வு இல்லாத போலவும் உடம்பும் ஒரே சோர்வாகவும் இருக்கிறது எனப் பெற்றோரிடம் சொன்னான். அவர்கள் ஃப்லு காய்ச்சல் என நினைத்து பனடோல் மாத்திரை கொடுத்தார்கள். ஒரு மாதம் கழித்து, தன் பார்வையும் மங்கலாக தெரிகிறது என்றான். உடனே மாதவனும் சித்ராவும் தங்கள் குடும்ப வைத்தியரிடம் றோசானைக் கூட்டிக் கொண்டு போய் காட்டினார்கள். றோசானைச் சோதித்த வைத்தியர் அவனை நரம்பியல் நிபுணரிடம் அனுப்பிவைத்தார். நரம்பியல் நிபுணர் பல சோதனைகள் செய்துவிட்டு இரண்டு நாள் கழித்து நிபுணர் மாதவனையும் சித்ராவையும் வரவழைத்து,

“உங்கள் மகனுக்கு எம் எஸ் அதாவது மல்டிபில் ஸ்களீரோசிஸ் என்கிற நரம்பியல் நோயாக இருக்கலாம். இந்த வியாதிலே இரண்டு வகை இருக்கிறது இது தீங்கற்றது போல் தெரிகிறது. உங்கள் குடும்பத்தில் உங்கள் தாத்தா பாட்டி சகோதர்கள் யாருக்காவது இந்த வியாதி வந்திருக்கா?”

“இப்படி இந்த வியாதியாலே எனது குடும்பத்திலே எவராவது பாதிக்கப்பட்டதாக கேள்விப் படவில்லை.” என்றான் மாதவன்.

“உங்கள் மனைவி?” என அருகில் நின்ற சித்ராவைப் பார்த்தார் டொக்டர்

“றோசான் என் முதல் தாரமான ரேவதியின் மகன். றோசானின் அம்மா இறந்து பதிநாலு வருசமாகிறது.”

“முதல் மனைவியின் உடன் பிறந்தோர் யாராவது இருந்தால் அவர்களுடைய டி. என். ஏ (மரபணு) உங்கள் டி. என் ஏ யும் வைத்து இது தீங்கற்ற எம் எஸ்ஸா அல்லது வேறு வியாதியா என அறிந்திடலாம்.” என்றார் நிபுணர்.

மாதவனும் சித்ராவும் றோசானுக்கு என்ன வருத்தமோ? பெரிய வருத்தமாக இருக்கக்கூடாது என கவலைப்பட்டு ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதல் சொன்னார்கள்.

ஒரு வாரம் கழித்து டி. என் ஏ பரிசோதனை முடிவுகள் வந்ததும் நரம்பியல் நிபுணரைச் சந்திக்கும்படி அழைப்பு வர மாதவன் மட்டும் போனான்.

“மாதவன் இந்த வியாதி உங்கள் இறந்து போன மனைவி ரேவதியின் பரம்பரையிலிருந்து தான் றோசானுக்கு வந்திருக்கிறது. இது நிச்சயமாகத் தீங்கற்ற அதாவது பினைன் மல்டிபில் ஸ்களீரோசிஸ் (Benign Multiple Scoloris) மிகவும் சாதுவானது என்பது உங்களுக்கு ஒரு ஆறுதலாக

இருக்கும். ஒழுங்கா மருந்துகள் எடுத்தால் அவனால் சாதாரண வாழ்க்கை வாழலாம்" என்றார் நிபுணர்

"தாங்க் கோர்ட், சந்தோசம் டொக்டர். உங்கள் ஆலோசனைப்படி நடக்கிறோம்," என்றான் மாதவன்.

தொடர்ந்து நிபுணர், "மாதவன்….. இந்தச்சோதனைகளால் இன்னுமொரு விசயமும் தெரிய வந்திருக்கு, உங்களுக்கு அதிர்ச்சியாக விருக்கும். உங்கள் மகன் றோசானின் டி என் ஏ உங்கள் டி.என்.ஏ உடன் ஒத்து போகவேயில்லை. அதாவது றோசான் உங்கள் மகனில்லை."

"டொக்டர் விளையாடுகிறீர்களா?" எனக் கேட்டபடி மாதவன் எழுந்து நின்றுவிட்டான்

"மாதவன் எனக்கும் இது அதிர்ச்சியாக விருந்தது, ஆகையால் இரண்டாம் முறை சோதனையைச் செய்வித்தேன். ஆயினும், மன்னிக்க வேணும் மாதவன், றோசான் உங்கள் மகனேயில்லை. இது தான் உண்மை.

இதைக் கேட்டதும் மாதவன் கதிகலங்கிப் போனான்.

'ரேவதியும் நானும் ஒருவரை ஒருவர் காதலித்துத்தானே சிட்னியில் கல்யாணம் கட்டினோம். கல்யாணமாகி சரியாக ஒன்பது மாதத்தில் தானே றோசான் பிறந்தான். அப்போ! ரேவதி என்னை கல்யாணம் கட்டும்……. போது கர்…ப்பமாக இருந்தாளோ? எனக்கு….எ…..ன…க்கு என் ரத்தமும் சதையுமான ஒரு பிள்ளையில்லயா?'

"ஐயோ!" எனத் தலையில் கையை வைத்துக் கொண்டு, அங்கேயே அமர்ந்துவிட்டான்.

○○○

மாதரே

மங்கையின் மான்விழி மருட்சியிலே பலர்
மதியிழந்து தான்மறந்து நிற்கையிலே
அன்றொருவன் கவியொன்று பாடினனே
அக்கினிப் பிளம்பாக்கிக் கூறினனே
வீரத்தைக் காட்டிட
விவேகமாய் நடந்திட
பாரத்தை நீக்கிடப்
பட்டங்கள் பெற்றிடப்
பகடையாய் வாழாமல்
பார் போற்ற வாழ
பாக்களால் உமக்குப் பரிசளித்தான் பாரயே!

காலங்கள் உருண்டிட கனவுகள் உயர்ந்திட
காரிகை நீவிரும் கற்றுயர்ந்திட்டீர்
நவநாகரிகப் பெண்ணென்று
நாணம் நீங்கி
நாடகக் கணிகைபோல்
ஆடம்பர மோகத்தில் ஆர்ப்பரித்து
புரட்சிப் பெண்ணென்ற பெயரைப்
புரட்டியே விட்டீர் நவயுகப் பெண்களே!

மதியிழந்து செயற்பட மதிதான் காரணமே?
மாதராய்ப் பிறந்திடல் மாதவமாம்
மதிப்பிழந்து போயின இவ்வரிகள்
புகைப்பட மோகமும் புகழ்ச்சியும்
டிக்டொக் மோகமும் ரீல்சும்
முகநூல் மோகமும் லைக்சும்
முழுவதுமாய் மாற்றி இகழ்ச்சிக்குத் தள்ளினவே

நாகரிகம் வளர்ந்தாலும் நவயுகம் பிறந்தாலும்
நல்லவள் என்று நற்பெயருடனே
சாதனைப் பெண்ணாய் வலம்வந்தாலும்
பணிவுடன் நாணமும்
அமைதியும் சாந்தமும்
அடக்கமும் அன்பும்
கர்வமுமின்றித் தன்னடக்கத்துடனே கற்று
உலகையே வென்று உயர்ந்திடுவீர் மாதரே!

சி.அபினுஷா
பேராதனைப் பல்கலைக்கழகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாடநூல்வரிசையில் தி. த. கனக சுந்தரம்பிள்ளையின் இல்லாண்மை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து தமிழ்நாடு சென்று தமிழ்ப்பணி புரிந்தோர் வரிசையில் தி. த. கனகசுந்தரம் பிள்ளைக்கும் முக்கிய இடமுள்ளது. எனினும் அவரெழுதியதாக அறிஞர்கள் சிலர்மட்டும் குறிப்பிடும் இல்லாண்மை *(1898)* என்ற பாடநூல்பற்றி அது ஒரு உரைநடைநூல் என்பது தவிர வேறெதுவும் அறிய முடியாத சூழலே நிலவிவந்தது. அண்மையில் அதுபற்றி விரிவாக அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் தி. த. கனகசுந்தரம்பிள்ளையின் செயற்பாடுகள் பற்றியும் புதிதாக அறிந்து கொள்ள முடிகின்றது.

'இல்லாண்மை' என்பது நிறுவன மயப்பட்ட பாடசாலைகள் உருவான காலப் பின்னணியில் ஆங்கிலத்திலிருந்து தி. த. கனகசுந்தரம் பிள்ளையால் மொழிபெயர்க்கப்படுகின்றது DOMESTIC ECONOMY FOR INDIAN HOUSEHOLD என்பதன் தமிழாக்கமே 'இல்லாண்மை' என்பது. அதை ஆங்கிலத்தில எழுதியவர் ISABEL BRANDER என்பவர். அவர் அவ்வேளை (1898)SENIOR INSPECTTRESS OF GIRLS SCHOOLS' ஆகக் கடமையாற்றுகின்றார். MADRAS SCHOOLBOOK AND LITERATURE OF SOCIETY (NUNGAMBALIKUM) அந்த நூலை வெளியிட்டுள்ளது.

பேராசிரியர்
செ. யோகராசா

ஈழத்தில் அன்றைய காலகட்டத்தில் அமெரிக்க மிஷன் சார்பில் சிறந்த பணி புரிந்த வட்டுக்கோட்டை செமினறி சார்ந்த (வைத்தியர்) கிறீனும் அவரது குழுவினரும் மருத்துவம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் முதலியன சார்ந்த பாடநூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டனரே தவிர DOMESTIC ECONOMY முதலான துறைசார்ந்த பாடநூல்கள் வெளியிடுவதில் கவனஞ் செலுத்த வில்லை என்பதும் தமிழ்நாட்டுக் கல்வித்துறை அதில் கவனஞ் செலுத்தியிருந்தது என்பதும் கவனத்துக்குரியது.

நவீன தமிழ்க்கல்வியுலகிற்கு புதிய கற்கை நெறி என்ற விதத்திலும் ஈழத்தில் கற்கைநெறி தற்போது நடைமுறையில் இல்லை என்ற விதத்திலும் இப்பாடநூலின் பொருளடக்கத்தைப்பற்றி அறிவது பயனுடையது.

பொருளடக்க அட்டவணை

முகவுரை

அதிகாரம் – 1
வீடமைத்துக்கொள்ளல்

வீட்டினிருப்பிடம் - வீட்டின் சுற்றுப்புறம்- விட்டின் அளவு – வீட்டின் பார்வை – வீடுகட்டல் - வீட்டின் சாக்கடை – வீட்டுச் செலவுக்கு வேண்டிய நீர்.

அதிகாரம் – 11
வீட்டுக்கு வேண்டும் சாமான்கள் சேர்த்தல்

வீட்டுச்சாமான்களின் தன்மையும் தொகையும்- சாமான்களைப் பழுதுபார்த்தல்.

அதிகாரம் – 111
வீட்டினையும் வீட்டினுள்ளாரையும் ஆளுந்தன்மை

விளக்கல் வீடு பழுதுபார்த்தல் - வேலைகாரர் - உணவு- குடிப்பன – சமையலிலக்ஷணம்- நெருப்பும் வெளிச்சமும் - உடுப்பு- உடைகளுவல் - நகை சுத்திசெய்தல்- வாகனம் - பசுக்காத்தல் -

தோட்டச் செய்கை – விருந்தினரை உபசரித்தல் - தருமம்.

அதிகாரம் –1V

குழந்தைகளை வளர்த்தல்

உடனே பிறந்த குழந்தை – குழந்தையைக் குளிப்பாட்டல்- குழந்தைக்குணவூட்டல் - குழந்தையைப்பற்றிய மற்ற விஷயங்கள் - தொழிற்பாடு – தவழ்தலும் நிற்றலும்- நித்திரை – குழந்தையைக் குளிப்பாட்டல்- மயிரைப்பேணல் - அம்மை குத்தல்- குழந்தைகளின் சுகம்

அதிகாரம் - V

நோயாளியைப்பேணல்

நோய்வராமற்றடுத்தல் – நோயாளியிருக்கு மறை -மருந்தியற்றுபவன் -நோயாளியின் படுக்கை- நோயாளியைத்தூக்குவது – நோயாளியைப் படுக்கையில் பெயர்த்துவிடல்- நோயாளிபடுத்திருக்கு மறையுட் சாமான்- நோயாளி படுத்திருக்கு மறையைச் சுத்தி செய்தல்- நோயாளியைக்கழுவி உடுப்புடுத்தல் - நோயாளிக் குணவூட்டல் - மருந்து – வெப்புங் குளிரும் - இராப்பார்வை- தொற்று வியாதியும் தொற்று மாற்றியும்- விஷ பேதிக்கு வைத்தியம் - சம்பவங்களும் சிறு நோய்களும் - குழந்தைகளின் நோய்க்குச் சுலபமான மருந்து- பிலாஸ்திரி.

அதிகாரம் - v1

வருவாயாட்சி

செலவு – வரவு – செலவைப்பகுத்தல் - மிச்சம் பணந்தொகுத்தல்- கணக்கெழுதல்.

அதிகாரம் - V11

வழிச்செலவு

சத்திரம் -சாப்பாட்டு வீடு – உடை – பெட்டி- திருநாளுக்குப் போதல்.

அதிகாரம் - v111

குழந்ததைகட்கு கல்வி கற்பித்தல்

குழந்தைப்பருவம் - புலன்களின் கூர்மை- முயற்சி – வழியொழுகல் - பஞ்சப்புலன்களைப் பயிற்றுதல்- நாற்றப்புலன் - சுவைப்புலன் - ஊற்றுப் புலன் - செவிப்புலன் -கட்புலன் - இயக்க வன்மையின் பயிற்சி- குழந்தை செய்யக் கண்டபடி செய்தலின் பலன்- விளையாட்டின் வழியாகக் கல்வி பயிற்றல். நினைவு – கற்பனா சக்தி -கருதல்- வியப்பு அல்லது அற்புதமானவற்றின் மேலாசை-களிப்பு – அச்சம் - கோபம் - அன்பு- அழகின்மேலாசை -சங்கற்பப் பயிற்சி- பழக்கத்தின் பெருமை- சொற்கேட்டல் - மெய்ம்மை- பொறுமை – விருப்பம் - பணிவுடமை- நெறியுடமை

மேலுள்ள இறுதி அதிகாரம் குறித்துச் சில பகுதிகளை முன்பள்ளி ஆசிரியர்களுக்காக இன்று எழுதப்படும் பாட நூல்களில் கூட இடம்பெறாதவை., இடம்பெறவேண்டியவை.!

இனி இந்நூலின் மொழிபெயர்ப்பாசிரியரான தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் மொழி பெயர்ப்புச் சிறப்பு கற்பித்தல் முறையில் பாடசாலை ஆசிரியர்கள்காட்டவேண்டியது பற்றிய அவரது கரிசனை குறித்த விடயங்கள் பற்றிக் கவனிப்பது வேண்டப்படுமொன்றாகிறது.

மொழிபெயர்ப்பு முறை என்ற அடிப்படையில் பின்வருவன கவனத்திற் கொள்ளத்தக்கன: புதிய கலைச்சொல்லாக்கம். எ-டு :DOMESTIC EGONOMY -இல்லாண்மை. 11. மருந்தியற்றுபவன் (ஆங்கில மூலம்பற்றி அறிவதற்கில்லை) 111 வருவாயாட்சி- (விளங்கிக் கொள்ள முன்னர் தரப்பட்ட அதிகாரம் V1 இன் தலைப்பினைப் பாருங்கள்

(ஆ) மொழிநடைச்சிறப்புகளுக்கு விரிவஞ்சி உதாரணங்கள் தரப்படவில்லை.

மேலே குறிப்பிட்டவாறு தி.த. கனகசுந்தரம் பிள்ளை கற்பித்தல் முறைமீது கொண்டுள்ள கரிசனை பற்றி அவதானிப்பது அவசியமானது. முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுவார்: “இந்தப் புத்தகம் பயன்தருவது இதிலுள்ள பொருள்களைக் கற்கும் விதத்திலும் கற்பிக்கும் விதத்திற்கும் தக்கபடியாகும்.

ஒருகாலும் அவற்றை நெட்டுருப் பண்ண லாகாது. உபாத்தியாயர்கள் இதிற் சொல்லப் பட்ட எளிதான பரீஷைகளையும் வரிகளையும் பிள்ளைகளோடு கைசெய்து பார்த்தல் வேண்டும் அவர்கள் இயன்றபோதெல்லாம் பிள்ளைகளோடு இதிற் சொல்லியிருக்கும் துணிகள், கொட்டைகள் , மருந்துகள் முதலிய பொருள்களைச் சோதித்துப் பார்த்து இதில் சொல்லப்பட்ட விதிகளின்படி வீடுகளில் பிள்ளைகளை நடக்குமாறு செய்தல்வேண்டும்.

உபாத்தியாயருதவியின்றி தாமாகவே இந்தப் புத்தகத்தைப் படிப்பவர்களும் அப்படியே செய்தல்வேண்டும்”

11- உள்ளடக்கப்பகுதிகளில் தேவைப் படுமிடத்து அடிக்குறிப்பில் தி. த. கனக

சுந்தரம்பிள்ளை மேலதிக விளக்கம் தருவார்
எ-டு: உளஅடக்கப்பகுதியும் அடிக்குறிப்பும்

"முட்டைகளை சட்டிக்குள் ஐந்து நிமிஷம் இருக்கவிட்டு பின்பு வெளியே எடு. கொதிக்கின்ற நீரில்போய் பட்டபோதும் முட்டை குளிர்ந்திருந்தபடியால் நீரின் வெப்பத்தை 212 டிக்கிறியிலிருந்து 180 டிக்கிறிக்கு குறைத்து விட்டது.

இதைப்பிள்ளைகளின் முன் செய்து காட்டி வெப்பத்தின் குறைவை வெப்பளவு கருவியினால் அளந்து காட்ட வேண்டும்".

1பேசு பொருளை இலகுபடுத்துவதற்காகவும் வாசிப்பில் ஆர்வம் ஏற்படுத்துவதற்காகவும் வேண்டிய விடங்களில் அதிகாரம் ஆரம்பிக்குமிடத்தில், பொருத்தமான பழமொழிகளைக் குறிப்பிடுதல்: அதிகாரம் 1 வீடமைத்துக் கொள்ளல் 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்'

சுருங்கக் கூறில் சமகாலத்தில் கிறீன் குழுவால் மொழிபெயர்க்கப்பட்ட பாடநூல்களுடன் ஒப்பிட்டு அவதானிப்பின் தி. த. கனக சுந்தரம்பிள்ளையின் மொழிபெயர்ப்புத் திறன் கற்பித்தல் மீதான அவரது கரிசனை பற்றி மேலும் விளக்கமாக அறிய முடியும். தமிழ்நாட்டில் புலமையாளர் பலர் இருப்பினும் இவரிடம் நூல் மொழிபெயர்ப்பு ஒப்படைக்கப்பட்டதன் ஏற்புடமை பற்றியும் ஊகித்துணர முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலகட்ட நவீன கல்வி முறைகள் பாடநூல்கள் எழுது முயற்சியில் வைத்தியர் கிறீன் தலைமையில் நடந்தேறிய பாடநூல் மொழிபெயர்ப்பு முயற்சிகளும் அது காரணமாக நவீன கல்வியை அளிப்பதில் ஈழம் தமிழ் நாட்டிற்கு முன்னோடியாக இருந்தமையும் ஆர்வலர் அறிந்த விடயமே. இவ்விதத்தில் கிறீனின் அடிச்சுவட்டில் இவ்வாண்மையூடாக தி. த. கனகசுந்தரம் பிள்ளையும் தனது தடங்களைப் பதித்திருப்பது மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து புலப்படுகிறது. இவ்வரிய நூல் காலங் கடந்தாயினும் பார்வைக்குக் கிடைத்திருப்பது பயனுடையது. (இந்நூலினை பார்வைக்குத் தந்த திருகோணமலை சார்ந்த புதிய தலைமுறை ஆய்வாளர் திரு. சத்தியநாதன் அவர்களை இக்கட்டுரையாளர் நினைவு கூர்கிறார்)

இத்தகைய அறிஞரது நூற்றாண்டு பற்றி நினைவு கூர்ந்த ஞானம் சஞ்சிகையின் அக்கறையும் பாராட்டப்படவேண்டிதேயாம்)

* * *

டெங்கு - வருமுன் காப்போம்

டெங்கு டெங்கு டெங்கென்றே
நாடெங்கும் பேச்சு
தொடர்மழையால் நோய்த் தொற்று
கட்டுமீறிப் போச்சு.
கட்டுப்பாட்டில் கொண்டுவரும்
மருந்துவகை கூடத்
தட்டுப்பாட்டில் போகுமென்றால்
நிலைமை மோசமாகும்.

அரசெடுக்கும் டெங்கொழிப்புத்
திட்டத்துக்கு மேலால்
நாமெடுக்கும் விழிப்புணர்வே
டெங்குநோய் தடுக்கும்.

டெங்கு நுளம்புக் குடம்பி வாழும்
இடங்கள் சில கேளீர்.
குடித்தவுடன் தூக்கிவீசும்
இள நீர்க் கோம்பை
வைபவத்தில் குடித்தெறியும்
'ஒருநாள் கோப்பை' (*)
வெற்றுப் போத்தல்
பொலித்தீன் பைகள்
வீட்டுப் பீலிகள்
வெட்டிவிட்ட வாழைமரத்
தண்டின் அடிகள்
தேங்காய்ச் சிரட்டை பூச் சாடி
நண்டுக் கோதுகள்
தேங்கிநின்றால் தண்ணீர் இங்கே
குடம்பி பெருகுமாம்
இடங்கொடாமல்
இவற்றையெல்லாம்
இல்லாதொழித்தே
இந்த நோயை வருமுன் காத்து
இன்புறுவோம் நாம்.

(*) One Day Cup

நிலவூர்ச் சித்திரவேல்
திருகோணமலை

சிறுகதை

கடலும் அவளும்

யே. கிறித்துறாஜா

2ம் வருட மாணவன்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கடற்கரையிலிருந்து ஓடி வந்த செபஸ்ரியான் சொன்ன கதையைக் கேட்ட மணியும் அவளது புதல்வியரும் “எங்கட கடவுளே நீரே காப்பாத்தணும்” என்றவாறு கண்களில் நீர் ததும்ப கடற்கரையை நோக்கி விரைந்தனர். அவளது கண்கள் கடற்கரை ஓரமாக ஒத்திக் கொண்டிருந்த கட்டுமரத்தை உற்று நோக்கின. கண்களில் கண்ணீர் கனத்தது. அனைத்து அயற்குடியிருப்பினரும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். ஆண்கள் பிளாஸ்ரிக் வோட்டுகளைத் தள்ளி இன்ஜின்களை சரிப்படுத்தினர். பல வோட்டுகள் ஏற்கனவே கடலுக்குள் சென்றுவிட்டன. இன்னும் பல வோட்டுக்கள் செல்வதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தன. கடற்கரை முழுவதும் மக்கள் கூட்டத்தாலும் கடல் சார்ச்சர் லைட்டுக்களது வெளிச்சத்தாலும் நிரம்பியிருந்தது. ஒரே பரபரப்பு. ஏனைய துறைகளைச் சேர்ந்த மீனவர்களும் விரைந்து வந்துசேர்ந்தனர்.

மணியின் கண்ணீரை நிறுத்த ஆட்களில்லை. புதல்வியர் இருவரதும் கண்களும் கண்ணீர் மழையில் நனைந்திருந்தன. ஆயிரம் பேர் ஆறுதல் கூறக் காத்திருப்பினும் ஆறுதல் அடையும் நிலையில் மணி இல்லை. தாசனைப் பற்றிய பல கேள்விகள் மணியிடம் கேட்கப்பட்டன. கேள்விகள் அதிகமாக அதிகமாக மணி நேற்றைய பொழுதை நினைவுக்கு கொண்டுவரல் ஆனாள். நேற்றிலிருந்து இன்று வரை என்ன நடந்தது என்பதை அவளது மனம் சொல்ல விருப்பம் கொள்ளவில்லை. என்ன ஆகிவிட்டது. அப்படி என்னதான் நடந்தது?

வழமையாக வீசுகின்ற அளவிற்கு மாறாக சோழகக் காற்று பலமாகவே வீசிக்கொண்டிருந்தது. மணி வீட்டுப் படலைக்கு வெளியே இருந்த வீதியைக் கூட்டிக் கொண்டிருந்தாள். அவளது நினைவு பூராகவும் தாசனைப் பற்றியதாகவே இருந்தது. கடைக்குச் சென்று திரும்பியிருந்த இசபெல்லா மணியிடம் ஒரு விடயத்தைப் பரப்பினாள். அதைக் கேட்டு மனம் தளர்ந்தவளாய் வேலிக் கற்களின் மீது சாய்ந்து எதையோ யோசிக்கலானாள்.

அப்பக்கமாக வந்த சேவியர் மணியின் வாட்டமான முகத்தை அவதானித்தவனாய் இசபெல்லாவிடம் “ஏய் என்னத்த சொல்லித் துலச்சாய் நீ, பாரு அக்கா முகம் சோந்துபோச்சு, அப்புடி என்ன விசயம் தான் சொன்னாய் நீ” எனக் கேட்டான்.

“நான் என்னத்த வேணுமெண்டு சொன்னேன். நடந்ததத்தாஞ் சொன்னேன். மதியம் போல துறை முகத்துக்குப் போன நம்ம சதீஸ் அண்ணேன்ர வோட்டு நிமிர்தடிக்கிற இந்த ஆடிச் சோழகக் காத்துக்கு இன்ஜின் பழுதாகி இடையில நிண்டுச்சுதாம், அதுல போன சரவணணோட கூட்டாளி ஒருத்தன் கடலில விழுந்திட்டானாம். நல்லவேள உயிருக்கு ஆபத்தில்லையாம். இப்ப அந்த வோட்டத் தொடுத்தின்ரு வந்த வேதநாயகம் அண்ணன்தா விசயத்தச் சொன்னாரு, இதச் சொன்னது தப்பா, நடந்தத்தானே நா சொன்னேன். இதுல என்ன இருக்கு” என்றபடி புறப்பட்டாள் இசபெல்லா.

“அக்கா, நீர் ஒண்ணும் கவலப்படாதேயும் தாசண்ணே சூடைக்குத்தானே போயிருக்காரு.

அவர் வந்திடுவர்,'' என்று கூறியபடி புறப்பட்டான் சேவியர்.

இவளது மனம் சஞ்சலத்தில் நின்று மீளவில்லை. மனதில் சிறிய நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு "நிலா, மெற்றலின் இஞ்ச வாங்கம்மா'' என்றாள். பிள்ளைகளும் வந்து நிற்க "ஒருக்கா வாடிக்குப் போய் ஐயா வந்திட்டாரா எண்டு பாத்தின்ரு வாங்க'' என்றாள்.

பின்னர் அவசரமாக சமயலறைக்குச் சென்று அடுப்பிலிருந்த ஒடியல் பிட்டை இறக்கி சுளகில் ஆறப்போட்டாள். திரிகேணியில் இருந்த அவித்த மீன்துண்டுகளை எடுத்து கறியொன்றையும் சமைத்து முடித்தாள். தாசனுக்கு ஒடியல் பிட்டு என்றால் மிகவும் விருப்பம். அவன் உணவே மருந்து என்ற கோட்பாட்டின்படி வாழ்பவன். கசப்பு என்றால் உடலுக்கு நல்லது என்று அடிக்கடி கூறுவான்.

கடற்கரையிலிருந்து திரும்பிய நிலாவும் மெற்றலீனும் "அம்மோய் ஐயா வந்துட்டாரு. இப்பான் மரமிழுக்கினம். சூட கொஞ்சம் கிடக்குதாம் அதால வரேக்க திரேசா அன்ரியையும் கூட்டின்ரு வரட்டாம்'' என்றபடி வீட்டிற்குள் நுழைந்து ஆடைகளை மாற்றிவிட்டு தொங்கவிடப்பட்டிருந்த சாச்சர் லைட்டினையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். மணி பெருமூச்சு விட்டவளாய் "திரேசா அன்ரிய கூட்டீன்ரு போங்கம்மா நா வாறன்'' என்றாள். கொதித்துக் கொண்டிருந்த சுடுநீரை இறக்கி தேநீரைத் தயாரித்தாள். கதவை அடைத்துவிட்டு கடற்கரைக்கு விரைந்தாள்.

கடற்கரை எங்கும் நிலவொளியால் அழகூட்டப்பட்டிருந்தது. கடலில் இருந்து பத்தடி தூரத்திற்கு அப்பால் கட்டுமரம் இழுக்கப்பட்டிருந்தது. நடுவில் இரு தடிகள் நாட்டப்பட்டு குறுக்காக கம்பிட்டு இழுத்துப்போட இருவர் எடுத்துக் கொடுக்க இருவர் என நாலாபுறமும் வலையை அலங்கரித்திருந்தனர். மணி தூரத்தில் வரும்போது நிலவொளியால் சூடைகள் மின்னும் விதத்தை வைத்தே இன்றைய சூடை மீன்களின் பிடிபாட்டை அறிந்துகொண்டாள். நேற்றைப்போல் ஐந்தாறு கிலோ அல்லாமல் இன்று கனதியாக மீன்கள் பிடிபட்டிருப்பதில் மணிக்கு மகிழ்ச்சியே. வலைகளை இழுத்து மீன்களை கழற்றியவாறு இடப்பக்கத்தில் நின்றிருந்த தாசனை நோக்கி "அப்போய் வந்து தேத்தண்ணிய குடியண.... வலைய நான் இழுக்கிறன்'' என்றவாறு மணி வலைகளை இழுக்க ஆரம்பித்தாள்.

தாசனுக்கு வயது ஐம்பத்திரண்டு இருக்கும். மொட்டை விழுந்த தலை. கட்டையன்தான் ஆனால் பலசாலி. அவனது குலத்தொழிலே கடற்றொழில் தான். இருபது வருடமாக சூடை மீன் தொழிலுக்கு மட்டுமே செல்கிறான். தனித்தே கடலுக்கு சென்று வருகிறான்.

மணி தந்த தேநீரை கையில் ஏந்தியவனாய் வலையின் அருகே அமர்ந்தான்.

"அப்போய்.. இண்ணைக்கு காத்துக் கொஞ்சம் உரத்துத்தான் நிக்குது என.. நம்ம சதீஸ் அண்ணாட வோட்டு காத்துக்குப் பிரளப் பாத்திச்சாம்.. இதக்கேட்டு நாங்கொஞ்சம் பயந்துதா போனேன்'' என மணி கூறினாள்.

"அப்பிடிப் பெரிய காத்தில்ல'' எனக்கூறிய தாசன், தேநீர்க் கோப்பையை அருகில் வைத்துவிட்டு மணியிடம் இருந்த வலையை வாங்கினான். ஐந்து வலைகளில் இருந்த மீன்கள் கழற்றி எடுக்கப்பட்டன. இன்னும் பத்து வலைகள் உள்ளன.

மணி, நிலா நின்றிருந்த பக்கத்திற்குச் சென்று வலையைப் பிடித்து சூடைகளை உதற ஆரம்பித்தாள்.

அப்போது நிலா தந்தையைப்பார்த்து, "அப்பா இப்ப கிடக்கிற சூடைகள நிங்க நனையப்போட்டு செதில் உழக்கித் தந்தா நா இருந்து வெட்டிக் கொண்டிருப்பனே'' என்றாள் சிறிது நேரம் மீன்களை வெட்டிவிட்டு நேரத்துக்கு வீடு செல்ல அவள் யோசித்திருந்தாள். சில கணிப்பீட்டு வேலைகள் அவளுக்காக காத்திருந்தன. அவள் அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற இருக்கிறாள். நன்றாகப் படிக்கக் கூடியவள் என்றாலும் அவளுக்கு படிப்பதற்கு நேரம் போதுமானதாக இல்லை.

கழற்றப்பட்ட மீன்களை மாலில் இட்டு கடலுக்குள் நனையுமாறு கட்டிவிட்டு வலையை மீண்டும் பிடித்தான் தாசன்.

"கோயில் பெருநாள் வேறு அடுத்தமாதம் வருகுது. அதுக்கு உடுப்புவேற எடுக்கணும்'' என்று கதையைத் தொடக்கினாள் திரேசா.

"இருக்கிற கஷ்டத்தில உடுப்பு ஒண்ணுதா இப்ப குறையாக் கிடக்கு'' என்று நொந்தாள் மணி.

இதற்கிடையில் "என்ர மூத்தவள் இந்தப் பெருநாளுக்காவது கூறைச் சாறியோட காணிக்க குடுக்கிறத பாக்கணும் எண்டு நினச்சன்

அதுவும் கைகூடலயே" என்று தாசன் கூற மெற்றலின் வெட்கப்பட்டவளாக தலையைக் குனிந்து கொண்டாள்.

"நம்ம ராசன் அண்ண இந்தமுற கோயில் போட்டிக்கோவுக்கு மாபிள் பதிச்சுத்தாறெண்டு சொல்லியிருக்காராம். மாபிள் வாங்கிற வேலையெல்லாம் நடந்தின்றிருக்காம். நடுவில பதிக்கிற கலர் மாபிள்கள் ஒவ்வொண்ணும் பதினையாயிரம் ரூபாயாம். வேற எந்தக் கோயில்களிலயும் பதிக்காத மாதிரி மாபிள் வேல செய்யணும் எண்டு சொல்லியிருக்கார்" என்று ஊர்க்கதை அளந்தாள் திரேசா.

"ராசன் அண்ணாட்ட காசா இல்ல. அந்தாளுக்கு எல்லாப் பக்கத்தாலயும் உழைப்புத்தானே" பேச்சு வாக்கில் நக்கல் செய்தான் தாசன்.

ராசன் சம்மாட்டி என்றால் ஊருக்கே தெரியும். அந்த இடத்திலயே பெரிய சம்மாட்டி அவர் தான். ஐந்து கண்ணாடி இழைப் படகுகள், ஐந்து இன்ஜின்கள், அனைத்து வகையான வலைகள் என அவரது வாடியே அவரின் செல்வாக்கை எடுத்துக் காட்டும். இந்த உழைப்பிற்கும் மேலாக கடற்கடத்தல் வேலையாலும் இலாபம் காண்பதால் பணபலத்தில் ராசன் முதலிடம் பெறுவார். கடத்தல் தொழிலால் கிடைக்கின்ற பணத்தில் கோயிலுக்கு உதவி செய்தால் கடவுள் மன்னித்துவிடுவார் என்ற மூடநம்பிக்கைதான் இங்கு அதிகம். இதுக்கு ராசன் மட்டும் விதிவிலக்கா என்ன. இதையெல்லாம் தெரிந்ததால்தான் தாசன் கேலி செய்தான்.

தாசன் பாவம். இந்த பதினைந்து சூடை வலையும், கட்டுமரமும்தான் இவனின் சொத்து. இதில் என்ன வருமானம் வருகிறதோ அதை வைத்தே பிழைப்பை நடத்துகிறான். ஒரு சதமும் தப்பான வழியில சம்பாதிக்க அவனுக்கு மனம் விடுவதில்லை.

கதையோடு கதையாய் வலையை இழுத்து முடித்தனர்.

"அப்போய் ஒரு மடி சூடை வெட்டிட்டன். நா வீட்ட போறன். கொஞ்சம் எழுதக்கிடக்கு" என்று புறப்படத் தயாரானாள் நிலா.

"நீ கவனமாப் போ பிள்ள. நாங்க வந்திர்றம்" என்று அனுப்பி வைத்தாள் மணி.

முழு வலைகளையும் இழுத்து வலைகளை சீர்ப்படுத்தி முடிக்க நேரம் இரவு ஒன்பதைத் தாண்டியிருந்தது. சந்திரனின் முழு ஒளியால் கடற்கரை எங்கும் ஒளிமயமாகக் காட்சி தந்தது. வெள்ளி நாணயங்களை குவித்துவிட்டதைப் போல் கரையில் சூடை மீன்களை குவித்து அவற்றின் தலைகளை வெட்ட ஆரம்பித்தனர். கடலில் நனைய விடப்பட்டிருந்த மால் உழவனின் காலால் மிதிபடும் மண் போன்று தாசனின் கால்களால் இடையிடையே மிதிக்கப்பட்டது.

சூடைகளை வெட்டும்போது காற்றின் போக்கை உணர்ந்த மணி, "அப்போய் ராத்திரிக்கு கச்சான் காத்து வாறமாதிரி இருக்கே.. வருமோ? காத்து வந்தா பாசிப்பண்ணையில வளந்திருக்கிற ஒரு பாசியும் கையில கிடைக்காது. அதுகளும் நல்லா வளந்து நிக்குது. கைக் கெட்டினது வாய்க்கெட்டாமப் போயிடும்" என்றாள் மணி.

இதைக் கேட்டிருந்த தாசன் "காத்து மாறாது. இப்பிடியே நிக்கும்" என்றான்.

சூடை முழுவதும் வெட்டப்பட்டு தலைகள் அகற்றப்பட்டன. இன்று அகப்பட்டவை ஒரு அந்தர் சேரும். மணியும் தாசனும் மெற்றலின் மற்றும் திரேசாவை அனுப்பிவிட்டு சூடைகளுக்கு உப்பிட்டு அவற்றை இறுகக் கட்டிவிட்டு வீடு திரும்பும்போது நேரம் பதினொன்று முப்பதாகி இருந்தது.

சற்று முன்னராக வீட்டிற்கு சென்றிருந்த மெற்றலீன் குளித்து விட்டு, எழுதிக்கொண்டிருந்த தங்கையுடன் சாப்பிட்டுவிட்டு படுக்க ஆயத்தமானாள்.

தாசனும் மணியும் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு சாப்பிடுவதற்காக சமயலறைக்கு வந்து சேர்ந்தனர். ஒடியல் பிட்டும் மீன் கறியும் அந்த நாளை மேலும் சுவையாக மாற்றியது. உணவு உண்டு கொண்டிருந்த இருவரது



கண்களும் கண்ணெதிரே படுத்திருக்கும் மெற்றலீனை அவதானித்தன. இருவர் கண்பாசையிலும் இருப்பது ஒரே ஏக்கம்தான். அவளது வயது இருபத்தைந்தை தாண்டி விட்டது. நேர காலத்தோடு கல்யாணம் செய்ய வேண்டும் என்பதே இருவரதும் ஏக்கம்.

காலை ஆறு மணிக்கே பூவரசம் மரத்தி லிருந்து இறங்கியது சேவல். ஏற்கனவே ஐந்து மணிக்கே எழுந்து சமைத்து முடித்துவிட்டு கடற்கரைக்குச் செல்ல ஆயத்தமான மணி, “அப்போய் வாரும் நம்ம பாசிப் பண்ணையை ஒருக்கா பாத்தின்ரு வந்திடலாம்” என்றாள். மணியின் சமயல் வேலைக்கு அடுத்து அவள் விரும்பும் வேலை பாசி வளர்பே. ஏனெனில் பாசி வளர்ப்பின் ஊடாக அவள் தனது குடும்பத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்துகொள்ளமுடிந்தது.

பண்ணை வேலைகளை முடித்துக்கொண்டு இருவரும் வீடு திரும்பும் வழியில். மெற்றலீன் பற்றியே தாசன் பேசிக்கொண்டான். தந்தையாக இருவரையும் கரையேற்ற வேண்டியது தாசனின் கடமையே.

“அப்போய் நேற்ரு சூட மீன்கூட அவிச்சு வைக்கல, இண்னைக்கு கறியும் இல்ல, வீச்சு வலைக்குப்போய் கறியேதும் பாத்தின்ரு வாங்களன்” என மணி கூறிக்கொண்டே நடந்தாள்.

வீட்டுக்கு வந்து மூவரும் சாப்பிட்ட கையுடனே “மணி அந்த வீச்சு வலைய எடு. அந்தச் சொந்தையக் கொண்டு நீயும் வா உப்புக்க கிடக்கிற சூடைய காயப்போடனும் எல்லோ” என்றான் தாசன். சொந்தையை ஏந்தியவாறு மணியும் சென்றாள்.

தென்னோலைகளை சரியாகப் பரப்பி உப்புக்குள் இருந்த சூடைகளை எடுத்துக் கழுவி அதன்மேல் காயவிட்ட பின்னர் மணி வீடு திரும்பினாள்.

காலையில் மீன் வீசச் சென்ற தாசன் மீனோடு வீடுவந்து சேர மதியமானது. அவன் எடுத்துவந்த மீன்களை வேகமாக கழுவி கறியாக்கி முடித்தாள் மணி.

சாப்பிட்ட பின்னர் சற்றே நாரி நிமிருமாறு வேப்பமரத்தின் கீழே படுத்திருந்த தாசன் நேரம் மாலை நான்கு முப்பது ஆவதை அறிந்து எழுந்து “மணி தேத்தண்ணிய வைச்சுத்தா, நா வெளிக்கிடப்போறன்” என்றான்.

“நேற்ரைக்கே சரியான காத்தாக்கிடந்தது, இண்ணைக்கு காத்து மாறி மாறி அடிக்குது, கச்சான் காத்து வாற மாதிரிக்கு கிடக்கு இண்ணைக்கு கடலுக்கு போக வேணா அப்பா”

“காத்தெண்டா அப்பிடித்தான்டி. இந்த சின்னப்பிரச்சினைக்கு கடலுக்கு போகாமலோ விடுற. காத்தப்பாத்து பயந்தா கறி கிடைக்குமா? நீ தேத்தண்ணிய கொண்டுவா”

தேநீரை தாசனுக்கு கொடுத்துவிட்டு மாலைநேர சமயல் வேலைகளை ஆரம்பித்தாள் மணி.

“மணி நா போய்ற்று வாறன்” என்று வெளிக்கிட்ட தாசனை “கவனமாய் போய்ற்று வாரும்” என படலை மட்டும் வழியனுப்பினாள் அவள். அதுதான் தாசனை அவள் இறுதியாகக் காணும் தருணம் என யார் அறிவார். இதுதான் நேற்று மாலையிலிருந்து இன்றுவரை இடம்பெற்ற சங்கதி. இவற்றை தன் மனதுள் மட்டும் எண்ணியவளாக கண்ணீர் சிந்தினாள் மணி.

இப்போது அவன் சென்ற கட்டுமரம் மட்டும்தான் அவள் கண்முன் தெரிகிறது. தாசனைக் காணவில்லை. அவன் சம்மந்தப்பட்ட எந்த தகவலும் இல்லை. இரவு முழுவதும் தேடுதல் பணிகள் இடம்பெற்றாலும் எந்த தகவலும் இல்லை. அவன் உயிரோடு இருக்கிறானா? இல்லையா? என்பதைக் கூட தீர்மானிக்க முடியவில்லை. அதிகாலை ஒரு மணிவரை ஒரு தகவலும் தெரியவில்லை. அதன் பின்னரே தாசன் கொண்டு சென்ற வலைகள் யாவும் வீசப்படாமல் ஒரு இடத்தே கவிழ்ந்து கிடப்பதை மீனவர்கள் கண்டுபிடித்தனர். வலைகளைக் கைப்பற்றி வோட்டுகளில் ஏற்றினர் எனினும் தாசன் பற்றிய எந்தத் தகவலும் இல்லை.

அதிகாலை அவனது இறப்பை உறுதி செய்யுமாறு கதைகள் எழுந்தன. எப்படியும் ஆறு மணிபோல கடலில விழுந்திருந்தா அது எழும்ப இன்னும் நேரமிருக்கு என்றார்கள். அது என்றால் வேறேதுமில்லை. தாசனின் பூதவுடல் பற்றிய கதையே அது. கடலில் விழுந்து இறப்பவர்கள் பற்றி அவர்கள் நன்கறிந்தவர்கள். கடலில் விழுந்தவர்கள் மூச்சுத் திணறி இறந்து விட்டால் அந்த உடல் கீழே அமிழ்ந்துவிடும். அவனது வயிற்றில் வெட்டுக்காயமோ உடற்கிழிவோ இருந்தால் அந்த உடல் கீழே அமிழ்ந்துவிடும். எந்த வெட்டுக்காயமில்லாதபோது உடல் ஊதி

மேலே மிதக்கும் இதனைக் கண்டுகொள்ளவே ஒரு நாள் அவசியமானது.

. மறுநாள் காலையிலும் தேடுதல் பணிகள் இடம்பெற்றன. கண் எட்டும் தூரம் வரை முழுக் கடற்பரப்பும் அலசி ஆராயப்பட்டது. வலைகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் சுழியோடும் நபர்கள் ஆராய்ந்தும் எந்தத் தகவலும் இல்லை. அவனும் இல்லை. அவனது உடலும் இல்லை. கடற்கரை முழுவதும் சன நடமாட்டம் அதிகரித்தது. மணியும் புதல்வியரும் சாப்பிடாமல் விடியும்வரை அதே கடற்கரையில் இருந்தனர். கடலை மட்டுமே பார்த்திருந்த மணியின் கண்கள் வேறு எதையும் பார்க்க விரும்பவில்லை. இரண்டாம் நாள், மூன்றாம் நாள், நான்காம் நாள் என நாட்கள் கடந்தும் அவனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இறுதியாக தாசன் இறந்து போனதை அனைவரும் ஏற்றனர். ஆனால் மணியின் மனமானது அவன் இறந்ததை ஏற்க மறுத்தது.

தாசனின் இறந்த உடலைப் பற்றி பலவாறு கதைத்தனர். உடல் சேற்றில் புதைந்திருக்கும், பாறைகளிடையே சிக்கியிருக்கும், நீரோட்டத்திற்கு வேறு தீவுகளை நோக்கி சென்றதோ? பெரிய மீன்கள் ஏதும் இரையாக்கி விட்டதோ? என ஊர் முழுவதும் கதைகள் பல எழுந்தன. ஒரு மாதமாகியும் அவன் திரும்பி வரவில்லை.

தனக்கு இரு புதல்வியர் உள்ளனர் என்பதையும் அவர்களின் வாழ்வை தானே பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதையும் மணி நன்குணர்ந்தவள். அதனால் மீண்டும் திரும்ப நடந்தாள் பாசிப் பண்ணைக்கு. ஒரு மாதத்தில் நன்கே வளர்ந்திருந்த பாசிப் பண்ணையை அறுவடை செய்து மீண்டும் மூன்று பண்ணைகளை அமைத்துக் கொண்டு கடலோடு வாழலானாள். ஆனால் அவனது நினைவுகளை அக் கடலும் கரையும் தந்தவண்ணமே இருந்தன. இருப்பினும் அதை மனமுவந்து ஏற்றவளாக கடலோடு வாழ ஆரம்பித்தாள்.

அவளுக்கு அந்த இறைவன்தான் கூறவேண்டும் அவனது ஆன்மா இறைவனிடமும் உடல் கடல் மீன்களிடமும் கையளிக்கப்பட்டது என்பதை. அதுவரை தன் புதல்வியருக்காக கடலோடு வாழும் அந்தப் பெண்தான் மணி.....

* * *

வாசனையும் சுவையும்

-ச. முருகானந்தன்

பூக்களின் வாசத்தை
முகர்ந்து பார்த்து சொல்லும்படி
வண்டுகளிடம் கேட்டேன்
அங்கு தேன் இருப்பதாக மட்டுமே
அவை கூறிச் சென்றன

தெவிட்டாத தேனின் சுவை
கனவுகளிலும் நினைவுகளிலும்
மட்டுமே உணரப்படுகின்றன.
வாசமில்லா ரோஜாப்பூவாக
என் விண்ணப்பங்கள்.
திறந்து விடப்பட்ட
வாய்க்கால் நீர் போல வற்றாது
திகட்டாமல் ஓடும் நினைவுகள்
இளமை இன்ப நினைவுகளின் சுகத்தில்
பாடப்புத்தகங்களின் பக்கங்கள்
நனைந்து கரைகின்றன.
புடிப்பை விரட்டியபடி.
எனக்கு புரியாமலிருக்கிறது
இப்போது தேவைப்படுவது
பூக்களின் வாசமா
தேனின் தெவிட்டாத சுவையா?
இரண்டுமல்ல உறக்கம்!

தீர்வு

தொலைவே தெரிகிறது
பசுமை வயல்கள் நம்பிக்கை யூட்டியபடி
நெருங்கிச் செல்கையில் தெரிகிறது
பசுமையல்ல அவை காய்ந்த சருகு
உரமும் இல்லை பசளையும் இல்லை
மனங்கள் இன்னமும் மாறவில்லை
ஏணியும் பாம்புமாய் தொடர்கிறது
எமக்கான விடியல்.

இலங்கையின் முன்னோர் (Ancient People)

நாகர் - ஒரு வரலாற்றுத் தேடல்

வாகரை வாணன்

தென் இந்தியாவும் இலங்கையும் உலகில் முதல் முதலில் தரைப்பகுதி தோன்றிய காலத்திலேயே உருவானவை என்று நிலவியல் அறிஞர்கள் கூறுகின்றனர் என்பார் பேராசிரியர் வி.ஆர். இராமச்சந்திரன் தீட்சிதர். (தமிழரின் தோற்றமும் பரவலும் - பக்கம் 54) பேராசிரியரின் மேற்படி வரலாற்றுக் குறிப்பு, தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் (ஈழத்திற்கும்) இடையே நிலவிய தரைவழி ஒன்றிப்பை வெளிப்படுத்தும் அதேவேளை மற்றுமொரு பேராசிரியர் கா. இந்திராபாலாவின் ‘இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கை துணைக் கண்டத்தில் இருந்து பிரிந்தது’ என்னும் ஆய்வுரை (இலங்கையில் தமிழர் - பக்கம் 75) இலங்கைத் தீவு தென் இந்தியாவின் ஒரு சிறு பகுதியாக விளங்கியது என்னும் உண்மையை வெட்டை வெளிச்சமாக்கும்.

தென் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்து ஈழம் என்னும் இலங்கை நீரால் துண்டிக்கப்பட்டமையை கி.பி. 2ம் நூற்றாண்டில் வெளிவந்ததாகக் கொள்ளப்படும் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காவியம் ‘ப.்.றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள’ (காடு காண்காதை) என்று உறுதி செய்யும்.

தெளிவானதும் தொன்மை மிக்கதுமான இவ்வரலாற்றைத் தனது அடித்தளமாகக் கொண்டுள்ள இலங்கையின் பழங்குடிகளாகத் திகழ்ந்த நாகர், வேட்டுவர் என்னும் இரு பெரும் சமூகத்தினரில் நாகர் என்போரையே இக்கட்டுரை தற்போது ஆய்வுக் கெடுத்துக்கொள்ளுகின்றது. எனினும் இவ்விரு சமூகத்தையும் விட கம்பராமாயணம் (கி.பி. 12ம் நூற்றாண்டு) சுந்தரகாண்டம் காட்சிப்படலத்தின் ‘அங்கயற் கருங்கண்ணியக்கியர் துயக்கி’ என்னும் பாவில் இடம்பெற்றிருக்கும் ‘இயக்கியர், அரக்கியர்’ என்னும் சொற்களுக்கு வித்துவான் க. வேந்தனார் அளித்துள்ள விளக்கம், அச்சொற்கள் யக்ஸ, ராட்ஸஸ என்னும் வட மொழிச் சொற்களின் திரிபு என்பதையே உணர்த்தும். இதிலிருந்து அவ்விரு பெயர்களும் இலங்கையின் வேட்டுவரைக் குறித்துத் தரப்பட்ட வடமொழிப் பெயர்கள் என்பது தெளிவாகின்றது.

இப்பெயர் (இயக்கர்) தொடர்பாக பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதுகையில் (ஈழத்து இலக்கியமும் வரலாறும் - பக்கம் 91) இயக்கர் பற்றி நூல்களில் சொல்லப்படுபவை புனை கதைகள், அவை ஆதாரமற்றவை என்று தெளிவுபடத் தெரிவிப்பார். பேராசிரியரும் மொழியியலாளருமான க. கணபதிப்பிள்ளை அவர்களின் ‘அசுரர்’ பற்றிய கருத்துக்களும் (இலங்கைவாழ் தமிழர் வரலாறு – பக்கம் 17) இயக்கர் அரக்கருக்கும் அப்படியே பொருந்திவரக் காண்கின்றோம்.

நம் நாட்டுப் பேராசிரியர்கள் அத்தகைய கருத்துக்களை முன்வைக்கும் முன்பே (கி.பி 1859 ல்) இங்கிலாந்து நாட்டின் அறிஞர்களில் ஒருவரான Sir James Emerson Tenant அவர்கள் தமது CEYLON எனும் நூலில் (Vol, 2, Page 437) THE PROOFS ARE STATED ELSEWHERE WHICH SHOWS THE VEDDAS TO BE REMNANT OF THE YAKKAS – THE ABORIGINAL INHABITANTS OF CEYLON என்று மறுக்க முடியாத ஓர் வரலாற்றுண்மையை வெளிப்படுத்துவார். இயக்கரும் வேட்டுவரும் ஓர் இனத்தவரே என்னும் Sir James அவர்களின் அறிவுபூர்வமான வாசகத்தை வாசகர்களுக்கு அளித்துவிட்டு இக்கட்டுரை நாகர் பக்கம் தன் பார்வையைத் திருப்புகின்றது.

இம்மக்கள் (நாகர்) பேராசிரியர் கா. இந்திராபாலாவின் ஆய்வின்படி (இலங்கையில் தமிழர் - பக்கம் 199-200) தென் இந்தியாவையே

சேர்ந்தவர்கள் என்பதால் அதன் தென் புறமாகவுள்ள தொன்மைமிகு தமிழ்நாட்டின் மலையில் (நாகம்) தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தமையை அக்காரணப் பெயர் (நாகர்) தெளிவாகக் காட்டும். இம்மனிதர் முன்பாக ஓரளவு கரிய நிறமான அதேமலையில் ஊர்ந்து திரிந்த பாம்பு ஒன்று கரு நாகம் என்ற காரணப் பெயரைப் பெற்றதுபோல மற்றுமொரு பாம்பு அதன் பெருத்த உருவத்தால் 'மலைப்பாம்பு' என்ற காரணப் பெயரையும் பெற்றது.

இப்படி ஒரு இயல்பை நீண்ட நெடுங் காலமாகக் கொண்டுள்ள அம்மலையின் மீது மனிதர் வாழ்வதை அறியாதவர்போல 'மணிமேகலை' ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார் (இவரை ஒரு பௌத்தர் என்பர்) அம்மனிதரை 'நக்கசாரணர் நயமிலர்' (ஆதிரை பிச்சை இட்டகாதை) என்று அநாகரிகமாகச் சித்தரிப்பது நூலைப் படிப்பவர்களுக்கு வியப்பை மட்டுமல்ல வெறுப்பையும் தரும். ஆயினும் இக்காவியத்திற்கு முன், தோற்றம் பெற்றதாகக் கொள்ளப்படும் சிலப்பதிகாரம் என்னும் சீரிய காவியத்தில் நாகருக்கென்று அங்கு நாடு இருந்தமையை 'நாக நீள் நகரொடு நாக நாடு" (மங்கல வாழ்த்துப் பாடல்) என்னும் கூற்று வெளிப்படுத்தும்.

'இரட்டைக் காவியங்கள்' என்று தமிழ் அறிஞர்கள் பலராலும் அடையாளப்படுத்தப்படும் அக்காவியங்களில் ஒன்று நாகரை இகழ்ந்தும் மற்றது பண்போடு பேசுகின்றமைக்கும் அவரவர் தன்மை (Character) மட்டுமன்றி பேராசிரியர் பத்மநாதனின் 'பல சமூகப் பிரிவுகளைக் கொண்ட ஓர் இனக் குழுவாகவே நாகர் பிராகிருத மொழிச் சாசனங்களில் காணப்படுகின்றனர்' (கிழக்கிலங்கைத் தமிழர் வரலாறு – பக்கம் 25) என்னும் வரலாற்றுப் பூர்வமான உரையும் தக்க காரணங்களாக அமையும்.

நாகர்கள் இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன் (சங்க காலம்) அறிவார்ந்த சமூகமாக சங்கப்புலவர் அவையில் வீற்றிருந்தமையை முரஞ்சியூர் முடிநாகராயர், மதுரைப்பூதன் இளநாகனார், மருதன் இளநாகனார் என்னும் பெயர்கள் எடுத்துக் காட்டும் (புறநானூறு எனும் நூலைப் பார்க்குக) இப்புலவர்கள் போல் தென்னிலங்கையில் நாகர்கள் சிலர் (கி.மு., கி.பி) அரசர்களாக வீற்றிருந்தமைக்கு மகாகுலநாகன், சோர நாகன், சிறீநாகன் என்னும் பெயர்கள் உகந்த சான்றுகளாகும். (ஆதாரம் : பேராசிரியர் செ. கிருஸ்ணராசாவின் இலங்கை வரலாறு – பாகம் 1, பக்கம் 290-291)

மேலும் கி.மு. 5ம் நூற்றாண்டில் நாகர்கள் இலங்கை குருநாகலில் வாழ்ந்தார்கள் என்பதற்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப்பிராமி சாசனமொன்றில் காணப்படும் 'குறுநாகர்' என்னும் பெயர் ஆதாரமாக அமையும். (மேற்படி வரலாற்று நூல் - பக்கம் 64) அவ்வரலாற்றுச் செய்தி நாகர் மிக நீண்ட காலமாக இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்ந்தமையை நிரூபிப்பதோடு அம்மக்கள் குறுகிய தோற்றம் உடையவர்கள் என்பதையும் நிலைநிறுத்தும். அத்தோற்றம் பெரும்பாலும் தமிழரையே நினைவூட்டுவதாக அமையும். "குருநாகல்" என்னும் ஊர்ப்பெயரும் "குறுநாகர்" என்னும் பெயரின் திரிபாகவும் இருக்கலாம். இவ்வரலாற்றுச் செய்தியும் இன்றும் நம்மிடையே வழங்கும் நாகராஜன், நாகலிங்கம், நாகையா, நாகம்மை முதலான பெயர்களும் நாகர் யார் என்னும் கேள்விக்குத் தக்க பதிலைத்தரும்.

நாகர்கள் தென் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டின் நாகர் கோயில், நாகப்பட்டினம், வட இந்தியாவின் நாப்பூர் (நாகர் ஊர்) நேபாள நாட்டின் லும்பினி (புத்தரின் பிறப்பிடம்) ஆகிய இடங்களிலும் வாழ்ந்து சில இடங்களில் ஆட்சி செய்தமையையும் வரலாறு சொல்லும். ஈழமும் தமிழ்நாடும் தரை வழியாக ஒன்றாக இணைந்திருந்த காலத்தில் நாகரின் ஆட்சி தமிழ்நாடு வரை பரவியிருக்கலாம் என்றும் கூறும் பேராசிரியர் கே.கே. பிள்ளை (South India and Sri Lanka எனும் நூலைப் பார்க்குக) அதன் அடையாளமாக நாகர் கோயில், நாகபட்டினம் என்னும் ஊர்ப் பெயர்களைச் சுட்டிக்காட்டுவார். இவ்வாய்வுரை நாகர் ஈழத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கலாம்.

நாகர் என்னும் சொல்லும் சில நாடுகளில் ஆழமாகப் பதிந்துள்ளமையை அறியும்போது அது பேர் பெற்ற இனம் என்பது தெளிவாகின்றது. இவ்வினத்திற்கு மேலும், ஒரு சிறப்பைத்தருவது கௌதம புத்தர் நாகர் இனத்தவர் என்னும் ஆய்வாளர் 'ஒல்ட்காம்' அவர்களின் கருத்து எனக் கூறும் அறிஞர் பொ. சங்கரப்பிள்ளை (நாம் தமிழர் - நூல் - பக்கம் 21) நாகரைத் தமிழர் எனக் கூறுவார். அறிஞரின் இக்கருத்து ஆய்வுக்குட்படுத்த வேண்டியதொன்று.

ஏனெனில் நேபாள நாடு ஒரு மலைப் பிரதேசம். அத்தகைய மலைப் பிரதேசமே அக்காலத்தில் நாகர், வேட்டுவர் என்போரின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இதனைக் கேரள மாநிலத்தின் 'சபரிமலை' எடுத்துக்காட்டும். இதில் உள்ள 'சபரி' என்னும் சொல்லுக்கு வேட்டுவப் பெண் என்று பொருள். இதன் ஆண்பால் சொல் சபரன் (வேட்டுவன்) என்பதாகும். இதிலிருந்து வேட்டுவ இனம் அக்காலத்தின் காடு, மலை சூழ்ந்த பகுதிகளைத் தம் கைகளிலேயே வைத்திருந்தமை அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

நாகர்கள் மலைவளம் மிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை ஆய்வாளர் H. Parker அவர்களின் நாகரின் பூர்வீக இடம் பழைய சேர நாடு என்னும் ஆய்வுரை வெளிப்படுத்தும். பழைய சேர நாடு என்பது மலைவளம் மிக்க இன்றைய கேரள மா நிலம் ஆகும். இச்சொல் 'கேரளம்' அறிஞர் மு. வரதராசனாரின் ஆய்வின்படி சேரம் என்னும் சொல்லின் திரிபாகும். (மொழியியற் கட்டுரைகள் - பக்கம் 31) இம் மாநிலம் மலையாளம் (மலை ஆளும் நாடு) என்றும் குறிப்பிடப்படும். இம் மலை வளமே பண்டையத் தமிழ் நாட்டின் குறிஞ்சி நிலமாகும். இதுவே தமிழரின் முதல் நிலமும் பழம் பெரும் வரலாற்றின் தொடக்கப் புள்ளியுமாகும்.

இப்பெரும் சிறப்பைக் கொண்டுள்ள கேரள மண்ணில் வாழும் நாயர் என்னும் சமூகத்தினரின் வழித்தோன்றல்களே நாகர் என்று கூறும் Parker இன் ஆய்வுரையை மானிடவியலாளரும் ஆய்வாளரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பார் நிலவியலாளர் சு.கி. ஜெயகரன் (குமரிநில நீட்சி – பக்கம் 102) இவ்வரலாற்றுச் செய்தியை அறிகையில் நாகர் என்னும் சொல்லின் உருவாக்கத்திற்கு மலையைக் குறிக்கும் நாகம் என்னும் சொல்லே ஏது என்பது மீண்டும் உறுதி செய்வதைக் காணலாம். இதனைத் தமிழ் இலக்கணம் இடவாகுபெயர் என்று கூறும்.

'இலங்கைத் தமிழர்' வரலாறு என்னும் ஆய்வு நூலில் (பக்கம் 01) நாகர்களின் உருவ அமைப்புப்பற்றி பேராசிரியர் சி. பத்மநாதன் விபரிக்கையில் கட்டையான, மெலிந்த, கவர்ச்சியான கட்டமைப்பும் மஞ்சள் நிறமும் அவர்களின் அங்க இலட்சணம் என்பார். மேலும் அம்மக்கள் மங்கோலியர் இனக் குடும்பத்தவரின் உடற்கூறு அமைப்பினையும் கொண்டவர்கள் என்பதும் பேராசிரியரின் கருத்தாகும்.

நாகரின் உடல் அமைப்புப்பற்றிய பேராசிரியரின் விவரணம் தமிழருக்குப் பெரிதும் பொருந்தும். அதேநேரம், நாகர் மங்கோலிய இனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் மற்றொரு ஆய்வுரை தமிழர்கள் மங்கோலியாவில் இருந்து தமிழ் நாட்டிற்கு இடம்பெயர்ந்தவர்கள் என்னும் முந்தைய ஆய்வுரையை நினைவூட்டும். 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்தில் புலவர் அவையில் தமிழ்ப் புலவர்களுக்கு இணையாக நாகர் எனும் புலவர் சிலர் அமர்ந்திருந்தமை அவர்களைத் தமிழர் என்று சொல்லும். மனித நிறம் என்பது காலநிலையைப் பொறுத்து மாற்றம் அடையக் கூடியது என்பது அனுபவம் கற்பிக்கும் பாடம். எனவே இந்தியாவின் மலைவளம்மிக்க நாகலாந்து என்னும் ஊரில் வாழும் நாகர்கள் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது அதிசயம் அல்ல. அதே நாகர், தமிழ் நாட்டின் தென் பகுதியிலோ அல்லது இலங்கையின் வடக்குக் கிழக்கிலோ வாழ்ந்திருந்தால் நிச்சயம் கறுப்புத்தான். இதற்குச் சுவாத்திய நிலையே (Climate) சுத்தமான காரணம் ஆகும்.

புத்தர் பிறந்த பூமி என்று போற்றப்படுவதும் மலைவளம் மிக்கதுமான நேபாளம் எனும் நாடு நாகர் பூமியாகவும் விளங்கியதை 1941ம் ஆண்டில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை எழுதி வெளியிட்ட 'ஆசியஜோதி' என்னும் குறுங்காவியத்தில் இடம்பெற்றுள்ள

செக்கச் சிவந்த குதிரையேறி உயர்
செம்மணிக்கேடகம் கையிலேந்தி பக்கமதிலே
நாகர்கள் சூழ வருணனும்
பள்ளிச் சிவிகையாளனாக வந்தான்.

என்னும் கவிதை எடுத்துக்காட்டும்.

இந்திய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் என்பனவற்றிலும் நாகர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளமையைக் (இராமனின் மகன் குசன் நாககன்னி குமுதவல்லியையும் அருச்சுனன் தென்னாட்டின் நாககன்னியையும் திருமணம் செய்தமை) கவனிக்கையில் நாகர் என்னும் தமிழருக்கு சங்ககாலத்திற்கு முன்பே (3500 ஆண்டுகள்) பரத கண்டத்தின் வட பகுதியில் கிடைத்த மதிப்பு, மரியாதை, அக்கண்டம் தமிழர் கையில் இருந்த வரலாற்றை வெளிப்படுத்தும்.

சொல் ஆய்வில் சிறந்து விளங்கிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நாயர் (மலையாளத்தில் வாழும் ஒரு சமூகத்தினர்) என்னும் சொல் நாகர் என்னும் சொல்லின் திரிபென்பார். (ஈழத்து வாழ்வும் வளமும் - பக்கம் 60) மேலும் நாகர் இனத்தினரையே அசுரர் (நரகாசூரன்) என்றும் தாசர் (அடிமை) என்றும் ஆரியர் குறிப்பிட்டனர் என்பதும் பேராசிரியரின் ஆழமான கருத்து. இதிலிருந்து ஆரியர்கள் அப்பாவித் தமிழருக்குத் தம் விருப்பம் போல் புதுப்புது புராணப் பெயர்கள் சூட்டி பூரித்தமை தெரிகிறது.

நாகபாம்பின் கொடிய நச்சுத்தன்மையை உணர்ந்த மக்கள் அதனால் ஏற்பட்ட அச்சத்தால் அதனை வழிபாட்டிற்குரியதாக்கியதோடு அதற்கு 'நாகபூஷணி' என்ற பட்டமும் சூட்டி 'நாகலோகம்' (கந்தர்வம்போல) என்ற கற்பனை உலகத்தையும் படைத்தனர். இவ்வுலகம் கிறிஸ்தவர்கள் நம்பும் மோட்சம், நரகம், உத்தரிப்பு ஸ்தலம் போன்றது. பக்திக்குப் பேர்போன பல்லவர் காலத்தில் (கி.பி. 6ம், 7ம், 8ம் நூற்றாண்டுகள்) ஆரம்பமான தெய்வ வணக்கங்களில் ஒன்றாகிய இந்தப் பாம்பு வணக்கம் சங்க காலத்தமிழரின் இயற்கை வணக்கத்திற்குப் பிரியாவிடை தந்தது. இதனால் யாழ்குடா, நாட்டைக் குறிக்கும் நாகநாடு என்ற பெயரும் மங்கி, மறைந்தாலும் இன்றும் தமிழ்நாடு தூத்துக்குடியில் உள்ள நாகர் கோயில் என்ற ஊரும் பேரும் யாழ்குடா நாட்டில் நீடித்திருக்கும் அதே பெயரும் நாகர் என்ற இனத்தை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். இதுபோன்று நாக நாட்டிற்கு அண்மையில் இருந்த நாகதீவு (மணிபல்லவம்) நயினாதீவு எனத் திரிந்து இன்று பாம்பு வழிபாட்டை வெளிப்படுத்தும் நாகபூஷணி அம்மாளின் உறைவிடமாகவும் திகழ்கின்றது.

○○○

ஐயாவும் ஐந்து ஆட்டுக்குட்டிகளும்!

ஐயா என்றே எல்லோரும் அவரை
அழைப்பார்கள்.
அதனால் அவர் எல்லோர்க்கும்
நிரந்தரமாய் ஐயாவானார்.
ஐயம் தீர்க்கும் ஐயா இவர்!
ஆடு வளர்ப்பு ஐயாவுக்கு
ஒரு கை வந்த கலை.!

தேடித் தேடி ஆடுகளுக்கு
உணவு கொடுப்பவர்.
மழை வெயில் பாராது
மனம் தளராது
உணவு சேகரிப்பவர்.
ஆட்டுக் கொட்டில்
அதற்கு மின் விளக்கு!

ஆடு வளர்ப்பிலும்
அதன் விற்பனையிலும்
அலாதிப் பிரியம் கொண்டவர்.
ஆடுகளை விற்பனை செய்யும்
போது
அவர் மனதும் அழும்.

இழப்பொன்றிலும்
ஆட்டுக் குட்டிகளை இழந்து
காயம்பட்டவர்.
கனத்த துன்பம்
கால ஓட்டத்தில்
கண்ணீர் சொரிந்தவர்.
கதையாலும் பேச்சாலும்
தன்னைத் தேற்றியவர்.

மனதைத் திடமாக்கி
மீண்டு எழுந்து
விழித்து
உழைப்போடு உணர்வு
கொண்டவர்

ஆடுகளை வளர்த்து
எழுந்து நிற்க முயன்றவர்.
சினைப்படுத்துதலும்
சிறப்பான உருவாக்கமுமாய்
இன்று

ஐந்து ஆட்டுக்குட்டிகள்
ஒரே நிறத்தினில்
அவரது ஆடுகள் பெற்றன.

ஐயா
மனஞ் சோராது
திடம் கொண்டு இன்னும்
உழைப்பதனால்
இறைவன் இவருக்கு
அளித்த பரிசு இது!

ஐயா உயர்ந்து விட்டார்.
உயரத்தால் அல்ல
உழைப்பால்!

வதிரி.சி.ரவீந்திரன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மொழிபெயர்ப்புச் சிறுகதை

சித்தம் கலங்கிய மாது

கீ. த. மாப்பஸான்

“பிரான்ஸ் ஜெர்மன் யுத்தத்தின்போது நிகழ்ந்த, என்னால் என்றுமே மறக்க முடியாத கதையைத்தான் இப்போது சொல்லப் போகிறேன்..”

டீ றுவாட் பிரபுவின் ஆடம்பரமான வீட்டில் புகைப்பிடிப்பதற்கான ஒதுக்கப்பட்டுள்ள தனி அறையில் கூடியிருந்த நண்பர்கள் மத்தியில் திரு டி. என்டோலின் சொல்கிறார்

“ உங்களுக்கு ∴போக் டி கொமெய்லிஸ் என்ற எனது ஊரிலிருந்த வீட்டைப்பற்றி நன்றாகத் தெரியுந்தானே. ஜேர்மன் இராணுவம் எங்கள் ஊரைக் கைப்பற்றியபோது நான் எனது வீட்டில்தான் தங்கியிருந்தேன். மிகவும் துரதிஸ்டம் பிடித்த பெண்மணியொருத்தி எனது அண்டை வீட்டிலிருந்தாள். துக்ககரமான சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்ததால் மனம் மிகவும் ஆழமாக பாதிக்கப்பட்டு சித்தம் கலங்கிய நிலைக்கு ஆளானாள் அவள்.

அவளுக்கு ஏழு வயதாகவிருந்தபோது தந்தை மரணமானார். இருபதாவது வயதில் அவளது கணவனும் பிள்ளையும் இறந்து விட்டனர்.

ஏதாவது ஒரு வீட்டிற்கு எமன் ஒரு முறை வந்துவிட்டான் என்றால், அடுத்தடுத்து வருவது நிச்சயம், ஏதோ எமனுக்கு பாதை நன்றாகப் பழகிவிட்டது போல.

தொடர்ச்சியாக ஆறேழு வாரங்கள் ஆடாமல் அசையாமல் சுய நினைவில்லாமல் கட்டிலிலே கிடந்தாள். நாட்கள் செல்லச் செல்ல அவளது மௌனம் நீடித்தது. சரியாக நேரத்துக்கு சாப்பிடுவதோ குடிப்பதுகூட இல்லை. கண்கள் இமைப்பதனால்தான் உயிரோடிருக்கிறாள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது.

அவளைக் கவனித்துக் கொள்வதற்கு வயோதிப வேலைக்காரியொருத்தி இருந்தாள். வேலைக்காரி அவளை கட்டிலை விட்டு எழுப்ப முயற்சிக்கும்போது, காது செவிடாகும் வண்ணம் தொண்டைகிழியக் கத்துவாள் அந்தமாது, யாரோ அவளைக் கொல்ல முயற்சிப்பது போல. அதனால் அவள் கட்டிலிலேயே இருக்கும்படி ஆகிவிட்டது. உடலைக் கழுவுவதற்கும் ஆடைகளை மாற்றுவதற்கும் விநயமாகப் பேசி வெளியில் கொண்டுவருவாள் வேலைக்காரி.

சாப்பிடுவதற்குக் குளிரூட்டப் பெற்ற சில இறைச்சித் துண்டங்களும் கடிப்பதற்கும் ஏதாவது அவ்வப்போது பரிவுடன் கொடுப்பதை வேலைக்காரி வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

எதிர்பாராத நிகழ்வுகளால் பாதிக்கப் பட்டிருந்த அவளது மனநிலை என்னவாக இருக்கும், அவள் எதனை மூடிவைத்துக் குமைந்து கொண்டிருக்கிறாள் என்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. யாரிடமும் ஒரு வார்த்தையேனும் பேசுவதில்லை. மரணத்தைப்பற்றி யோசிக்கின்றாளா! முடிந்து போன சம்பவத்தை எண்ணி எண்ணி சரியான தெளிவில்லாத கனவுகளில் ஆழ்ந்து போயிருக்கிறாளா! அலையெழுப்பாத தடாகத்து நீர்போல நினைவுகள் உறைந்து விட்டனவா. பதினைந்த ஆண்டுகள் இதே நிலையில்..

உலக மகாயுத்த. ஆரம்பமான டிசம்பர் மாத முற்பகுதியில்தான் ஜெர்மன் இராணுவம் கொமெய்லிஸ் என்ற எங்கள் ஊரைக் கைப்பற்றியது. எனக்கு இன்று நடந்தது போல நன்றாக ஞாபகமிருக்கிறது. உடம்பெல்லாம்

சிங்கள மொழியில்:

சாலிய குணவர்தனா

தமிழில்:

மலரன்பன்

விறைத்துப் போகுமளவுக்கு பனி பொழிந்த காலம். இரத்தவாத நோயினால் பீடிக்கப்பட்ட கால்கள் இரண்டையும் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் நான் அவஸத்தைப்பட்டு சக்கர நாற்காலியே கதியென கடந்த மோசமான நாட்கள் அவை.

சப்பாத்துக் காலடிகளின் ஓசை பெரிதாக ஒலிக்க ஒருவர்பின் ஒருவராய் சீரான வரிசையில் இராணுவத்தினர் அணிவகுத்து வருவது ஜன்னலுக்கூடாகத் தெரிகின்றது. இராணுவத்தினரை ஊரில் மக்கள் குடியிருந்த வீடுகளிலெல்லாம் பலவந்தமாகத் தங்க வைத்தனர் இராணுவ அதிகாரிகள். என்னுடைய வீட்டிலும் பதினேழு பேர்கள் இடம்பிடித்துக் கொண்டார்கள். குடியிருந்தவர்கள் தமது சொந்த வீடுகளில் அடங்கியொடுங்கி வாழ்ந்த கொடுமை. வீட்டுக்காரர்களின் அசௌகரியங்கள் பற்றி இராணுவத்தினர் எதுவித அக்கறையும் கொள்வதில்லை.

சித்தம் கலங்கிய நிலையிலிருந்த பெண்ணின் வீட்டில் ஒரு டசினுக்கு மேல் கல் நெஞ்சமும் அருவருப்பான தோற்றமும் கொண்ட கொடூரமான வலுவான அதிகாரி அதிலொருவன்.

ஆரம்பத்தில் எல்லாம் வழக்கம்போல நடைபெற்றது. இராணுவம் இடம் பிடித்துக் கொண்ட வீட்டு மாடியில் ஓர் அறையில் நோய்வாய்ப்பட்டு பெண்ணொருத்தி இருப்பது தெரிய வந்தது சில நாட்களுக்குப்பின்னரே. நோயாளி ஒருவர்பற்றிய எந்த அனுதாபமோ அக்கறையோ இராணுவத்தினருக்கு இருக்கவில்லை. இராணுவம் தனது வீட்டில் கீழ்அறைகளில் தங்கியிருப்பதை அறிந்த அந்த மாது மிகவும் கவலையடைந்தாள். அறையிலிருந்த அந்தப் பெண் ஏன் வெளியில் வருவதில்லை என வேலைக்காரியிடம் விசாரித்தனர். அவளை ஒருநாளும் கண்டிராதபடியால் மிகவும் கலவரமடைந்தார்கள். தனக்கு நடந்த துக்ககரமான சம்பவத்தின் பாதிப்பினால் பதினைந்து வருடங்களாக அவள் வெளியே வருவதில்லையென்று வேலைக்காரி விபரமாகச் சொன்னதை அவர்கள் நம்பவில்லை. இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்கலாம் என அவர்கள் தீர்மானித்தார்கள்.. ஜெர்மன்காரர்கள் கொடுமைக்காரர்கள் பலாத்காரமாகத் தனது வீட்டைக்கைப்பற்றிக் கொண்ட கொடியவர்கள் அவர்களைப்பார்க்கவே கூடாது என்று அகங்காரத்தினால்தான் அவள் இவர்கள்மேல் வெறுப்படைந்து பார்க்க மறுக்கின்றாள் என நினைத்துக் கொள்கிறார்கள் “அவளை வெளியே இழுத்தக் கொண்டு வந்து என்முன்னே நிறுத்துங்கள்” அறையினுள் எட்டிப்பார்த்த அதிகாரி தனது சிப்பாய்களுக்கு கட்டளையிட்டான் கடூரமான தொனியில்.

“சீமாட்டியே வெளியே வாருங்கள் தங்களை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்” ஏளனமான தொனியில் சிரித்தவாறு அதிகாரி

இருளடைந்த கண்களைத் திறந்து ஒரு முறை பார்த்தவள் ஒன்றும் பேசவில்லை.

“எனக்கு இந்த அகங்காரம் மட்டும் பிடிக்கவே பிடிக்காது. தானாக வராவிட்டால் உன்னைத் தனியாக நடந்து வர வைக்க அதிக நேரம் போகாது” மீண்டும் கர்ஜனை.

அதிகாரி என்ன சொன்னான் என்பது அவளுக்கு விளங்கவில்லை. அதற்கான ஒரு சமிக்ஞைகூட அவளிடமிருந்து தெரியவில்லை. அவளது அகங்காரமும் பிடிவாதமும் குறையவில்லை என எண்ணிக் கொண்டான்.

“நாளை காலையில் கீழே இறங்கி வராவிட்டால் என்ன நடக்கும் என்று பார்த்துக் கொள்” சப்தமிட்டவாறு வெளியேறுகிறான்.

பயத்தில் நடுநடுங்கிப்போன வேலைக்காரி மறுநாள் காலையில் தனது எஜமானியின் ஆடைகளை மாற்ற முயற்சித்தாள். ஆனால் அவளோ வீடே அதிரும்படி கூச்சலிட்டாள். தனது முழுப்பலத்தையும் கொண்டு வேலைக்காரியைத் தரையில் தள்ளிவிட்டாள்.

இராணுவ அதிகாரி திடு திடுவென மாடிக்கு ஓடிவந்தான். வேலைக்காரி மண்டியிட்டு அதிகாரியின் பாதங்களை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுகின்றாள்.

“அந்த மாதரசி கீழே வரமாட்டாள். வரவே



மாட்டாள். அவள்தாங்க முடியாத துயரத்தில் சித்தம் கலங்கி தவிக்கிறாள். ஐயா எஜமானே கருணை கூர்ந்து அவளை மன்னித்து விடுங்கள்''

கோபமடைந்த அதிகாரிக்கு வெட்கம் ஒரு பக்கம்.

அதிகாரிக்கு சிப்பாய்களுக்கு கட்டளை யிடுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. அவன் பெரிதாக வாய்விட்டுச் சிரிக்கிறான்.

ஜேர்மனிய மொழியில் சிப்பாய்களுக்கு கட்டளையிடுகிறான். காயங்கள் ஏற்பட்ட நோயாளிகளை தூக்கிகொண்டு போகும் மெத்தையொன்றினை கொண்டு வந்தார்கள். மெலிந்து போயிருந்த அந்தப் பெண்ணை மெத்தையில் கிடத்தினார்கள். கண்களை மூடிக் கொண்டவள் வாய்திறந்து எதுவுமே பேசவில்லை. அவள் தனது வசதிக்கேற்றவாறு நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொள்ள அனுமதித்தார்கள். அவளது ஆடைகளையெல்லாம் சுருட்டி எடுத்துப் பொதியாக கட்டிக்கொண்ட சிப்பாய் ஒருவன் அவளுக்குப்பின்னால் நிற்கிறான்

“உனக்கு உனது உடுப்புகளை தானாகவே உடுத்திகொள்ள முடியுமா என்று நாங்கள் கொஞ்சம் பார்ப்போமே'' ஜெர்மனி அதிகாரி.

சிறிது நேரத்தின் பின்னர் மெத்தையோடு அவளை சுமந்து கொண்டு சிப்பாய்கள் இபோவில் வனாந்திரத்தை நோக்கி ஊர்வலம் போல நடக்கின்றனனர். சில மணித்தியா லங்களுக்குப்பின்னர் அவர்கள் மீண்டும் திரும்பி வருகின்றனர். அவர்கள் அவளை எங்கே விட்டு விட்டு வந்தார்கள், அவளுக்கு என்ன நடந்தது என்ன செய்தார்கள் என்பது ஊரில் யாருக்கும் தெரியாது.

பகலில் பனி பொழியத் தொடங்கிவிட்டது. தோட்டங்களும் காடுகளும் உறைபனியில் மூடிக்கிடந்தது. நாய்கள் எனது வீட்டு வாசலுக்கு வந்து ஊளையிட்டன.

காணாமலாக்கப்பட்ட அந்தப் பெண்ணைப் பற்றிய நினைவு என் மனதை அலைக்கழித்துக் கொண்டேயிருந்தது. அவளைப்பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள விண்ணப்பங்கள் பல பிரஸியன் நகர அதிகாரிகளுக்கு நான் அனுப்பினேன். குறைந்த பட்சம் ஒரு முயற்சியாவது செய்யும்படி குறிப்பிட்டிருந்தேன்.

வசந்தம் பிறந்தபோது ஜேர்மன் இராணுவம் ஊரைவிட்டு வெளியேறியது. அடுத்த வீடு பூட்டியே கிடந்தது. வீட்டைச் சுற்றியும் முன்னா லுள்ள மைதானம், நடைபாதை, எல்லாம் செடிகொடிகள் வளர்ந்து புதர்போல ஆகிவிட்டது,

பனிவிழும் குளிர்காலத்தில் வேலைக்காரி இறந்துவிட்டாள். அந்தப் பெண்மணி என்ன வானாள் என்பதைத் தெரிந்து கொள்ள எவரும் முயற்சிக்கவில்லை. நான்மட்டுமே அவளைப்பற்றி நினைத்துக் கொண்டேயிருந்தேன். சிப்பாய்கள் அந்தப் பெண்ணை என்ன செய்தார்கள். நடுக்காட்டிலிருந்து அவள் தப்பித்துச் சென்று விட்டாளா?

யாராவது கண்டு அவளை வைத்திய சாலைக்கு கொண்டுபோய்ச் சேர்த்தார்களா? எப்படியாவது என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள முடியுமா? சந்தேகம் எனது மனதை அரித்துக் கொண்டே இருந்தது. ஒன்றுமே அறிந்து கொள்ள முடியவில்லை. காலம் செல்லச்செல்ல அந்த நினைவுகள் மெல்ல மறைந்து விட்டது.

அடுத்த சரத் காலத்தில் சிட்டுக்குருவிகள் ஏராளமாகப் பெருகியிருந்தன. எனது கால்களின் இரத்தவாத நோய் கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாகியிருந்தது. நான் காட்டுக்குப் போனேன். காட்டில் வெகு தூரம் நடந்தேன். நீண்ட சொண்டுகளையுடைய பறவைகள் நாலைந்தை வேட்டையாடினேன். பறவைகளில் ஒன்று புல்மண்டியிருந்த புதர் ஒன்றில் விழுந்தது. அதனை எடுப்பதற்காகச் சென்ற இடத்தில் மனித எலும்புக்கூடு ஒன்று கிடக்கக்கண்டேன். எனது நெஞ்சில் யாரோ ஓங்கி அறைந்தது போல திடுக்கிட்டுப் போனேன். எனக்கு அடுத்த வீட்டுப் பெண்ணின் ஞாபகம் வந்தது. போர்க் காலத்தில் காடுகளில் பலர் இறந்து போனார்கள். என்ன காரணமோதெரியாது அந்த எலும்புக் கூடு அந்தத் துரதிஷ்டம் பிடித்த பெண்ணுடைய தாகத்தான் இருக்கவேண்டு மென என்மனம் சொல்கிறது.

உடனடியாக நான் அனுமானிக்கிறேன் அவளது மனதை அவர்களால் எவ்வளவு முயற்சித்தும் மாற்ற முடியாமல் போயிருக்கலாம். அதனால் அவர்கள் அவளை மெத்தையோடு போட்டு விட்டுப் போயிருக்கலாம். உறை பனியில் உடலை அசைக்க முடியாமல் கிடந்திருக்கக் கூடும். மிருகங்கள் அவளது உடலை சாப்பிட்டிருக்கலாம். மெத்தையின் தும்புகளில் பறவைகள் கூடுகள் கட்டியிருக்கலாம். நான் அவளது எலும்புகளை அடையாளம் கண்டு கொள்கிறேன் எங்கள் பிள்ளைகளுக்கு இது போன்ற கொடூரமான யுத்தம் ஒன்றை காணும் நிலை வரவேண்டாம் எனப் பிரார்த்தனையை மட்டுமே என்னால் செய்ய முடிந்தது.

○○○

அநித்தியமே நித்தியம்

பிறப்பன எல்லாம் இறப்பனவென்னும்
இயற்கையின் சித்துவிளை யாட்டில்
புரிந்தது கொஞ்சம் புரியாதது எஞ்சும்
இடைப்பட்ட காலம் வாழ்வு என்றாகும்
வாழ்வும் சாவும் வல்லவன் வகுத்தது
வாழ்வாங்கு வாழ எல்லைகள் வகுத்திடு

நூலிழை போன்றது உயிரென்றாகும்
அறுவதும் அறுபதும் எம் கையிலில்லை
ஆற்றிடும் அறநெறி அந்தியில் வருவது
போற்றிடு மனிதம் தேறுவாய் மனிதா
போகமும் மோகமும் முள்ளாய் உறுத்திடும்
பொறுப்புடன் வாழ்வது கடமையென்றாகும்

இன்றுனதானது நாளைக்கு வேறு
இயற்கையின் தத்துவம் இதுவெனக்கூறு
இறைவழி நடப்பதே நாம்பெறும் பேறு
அநித்தியம் வாழ்க்கையில் நித்தியம் என்றுணர்
ஆசானாய் அதுதரும் சத்தியம் தெரிந்திடு
அவசர வாழ்விது புத்தியில் தெளிந்திடு

எழில் பூத்த உலகம் சாஸ்வதம் என்றாய்
கொரனா வந்திங்கு வதம் புரியுமென்று
கனவிலும் நினைத்தாயா கணக்குத்தான் பார்த்தாயா
காரிருள் கவியுமென்று ஆரவெர் சொன்னாரன்று
இயற்கையும் இயங்குமொரு இயல்பான சூத்திரத்தை
குலைத்துவிட்டுக் குமைகின்றாய் குவலயத்தின்
ஆத்திரத்தால்

- 2 -

ஐம்பூத முகங்களுக்கும் முக்காடு போட்டுவிட்ட
ஆறாம் பெரும் பூதமிந்தக் கோவிட்டேயானதன்று
வல்லரசோ நல்லரசோ வலுவிழந்து நலமிழந்து
நாதியின்றி நடுங்கவைத்து நாட்டாமை செய்திட்ட
பெருந்தொற்று வந்தபின்னும் வாய்ச்சவடால் வீசுகின்ற
வீணரை எண்ணுகையில் வருத்தம்தான் மிஞ்சுதய்யோ

முகமிழந்தாய் முகத்தின்வரி யிழந்தாய்
சுகமிழந்தாய் சுற்றம்தனை மறந்தாய்
இகமதில் இந்தவொரு கொடுமைமிகு வைரஸை
எதிர்கொள்வோம் என்று எப்பதான் நினைத்திருந்தாய்
புதிரான வாழ்க்கையிது புரிவதில்லை மானிடர்க்கு
புரிந்த பாவம்தான் வாட்டுதிப்போ என் செய்வாய்

காலம் பல கணக்குகள் போடும்
கோலமிழந்த முதுமையொரு கணக்கு
சாலச்சிறந்த அனுபவக் கணக்கொன்று
சாவின் விளிம்பில் முடிவுரை ஒரு கணக்கு
சச்சரவென்றால் பிரிவுமொரு கணக்கு
இத்துயர் வாழ்வில் எல்லாமே கணக்குத்தான்

மாற்றமொன்றே மாறாதது போல்
அநித்தியமொன்றே நித்தியமாச்சு
தேற்றும் மனம் வேண்டும்
தேறும் நிலை வேண்டும்
ஆற்றும் கரம் வேண்டும்
ஆறாத்துயர் போக்க.

– செல்லையா சுப்ரமணியம் –

பொன்னியின் செல்வனும் வீரபாண்டியன் மனைவியும்

குயில் கூவும் வைகாசித் திங்களின் முதல் வாரம். இக்கட்டுரை வித்தாகிக் கொண்டிருக்கிறது. பொன்னியின் செல்வன் திரைப்படம் உலகெங்குமிருந்து இரண்டு பாகங்களிலும் மொத்தமாக கோடி கோடியாக வசூல் செய்யும் என்று ஊகிக்கிறேன்.

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் வரலாறா? கற்பனைப் புனைவா? வரலாற்றுக் காதல் புதினமா?

செழிப்புடன் விளங்கிய சோழர் காலத்து வரலாற்றின் மேல் நின்று கற்பனை புனைந்து கல்கி எழுதிய வரலாற்றுக் கதையே பொன்னியின் செல்வன் என்ற புதினமாகும்.

அதனை இயக்குநர் மணிரத்னம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் திரைப்படமாக்கி புகழும் பணமும் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

மறுபக்கத்தில் சமூக வலைத்தளங்களிலும் வெகுஜன ஊடகங்கள் சிலவற்றிலும் தங்களுக்குத் தோதுப்பட்ட வகையில் கல்கி மற்றும் மணிரத்னம் ஆகியோருக்கு ஆதரவாகவும் சமனான அளவில் எதிராகவும் கருத்துக்களை நிரப்பி வருகின்றனர்.

இதுபற்றியெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்து வீரபாண்டியன் மனைவி எட்டிப் பார்க்கிறாள்.

யார் இந்த வீரபாண்டியன் மனைவி?

கட்டுரையினூடே என்னுடன் சவாரி செய்யுங்கள். தெரிந்து கொள்ளலாம்.

கல்கி எழுதிய "பொன்னியின் செல்வன் என்ற வரலாற்றுப் புதினம் போலவே அரு.ராமநாதன் எழுதிய வரலாற்றுப் புதினமே வீரபாண்டியன் மனைவி ஆகும். பொன்னியின் செல்வன் ஐந்து பாகங்கள். வீரபாண்டியன் மனைவி மூன்று பாகங்கள்.

இரண்டாம் விசுவாமித்திரன்



அரு.ராமநாதன் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எழுத்தாளர். பதிப்பாளர்.பத்திரிகையாளர். திரைப்பட வசனகர்த்தா என்று பன்முகத் திறன் கொண்டவர். ஆனாலும் தன்னையும் தன் ஊழியத்தையும் எவ்வகையிலும் மலிவாக்க விரும்பாத அடக்க சுபாவத்தவர். அதன் காரணமாக கல்கி போன்றவர்கள் அடைந்த புகழை அவரால் அடைய முடியாமல் போனதுடன் 1974இல் தனது மரணத்தின் பின் விரைவாகவே இலக்கிய வெளியில் காணாமல் போய்விட்டார்.

தனது 17ஆவது வயதில் தொடங்கி 50 வயது வரையான காலகட்டத்தில் எழுதிக் குவித்தவர். அவரின் முதலாவது நூல் சம்சார சாகரம் என்பதாகும்.

முதலாவது சிறுகதையான கோழிப் பந்தயம் மற்றும் குண்டு மல்லிகை என்ற புதினம் ஆகியன கல்கியில் பிரசுரமானது.

டி. கே. சண்முகம் சகோதரர்களின் நாடகக் குழு 1945இல் நடத்திய போட்டியில் ராஜராஜ சோழன் என்ற அவரது நாடகம் முதல் பரிசு வென்றது. பின்னர் ஆயிரம் தடவைகள் அது மேடையேற்றம் கண்டது.

காதல் என்ற பத்திரிகை வெளியிட்டார். பெயரைக் கேட்டதும் வயது வந்தவர்களுக்கான மஞ்சள் பத்திரிகையோ என்று ஆரவாரப்பட்டார்கள். பெண்களுக்கும் தம்பதிகளுக்குமான ஆலோசனைகள் போன்றன மூன்று பக்கங்களுக்குள் அடக்கம்.

அவ்வளவு தான். இலக்கியம் அரசியல் தத்துவம் புனைவுகள் என்று ஏனைய பக்கங்கள் நிரம்பும்.

காதல் சஞ்சிகையில் வெளிவந்த பழந்தமிழ் இலக்கியச் செய்யுள் ஒன்றின் நகலாகவே பலே பாண்டியா என்ற படத்தில் கண்ணதாசன் எழுதிய அத்திக்காய் காய் காய் என்ற திரைப்படப் பாடல் மறுபிறவி எடுத்தது என்பதை பதச்சோறாகக் குறிப்பிடலாம்.

கல்கி தனது பொறுப்பில் இருந்த கல்கி வார இதழில் 1950களில் இருந்து தொடராக சுமார் ஐந்து வருடங்கள் பொன்னியின் செல்வனை எழுதி வெளியிட்டார். அரு.ராமநாதன் காதல் என்ற தனது மாதாந்த சஞ்சிகையில் வீரபாண்டியன் மனைவியை 1952 களிலிருந்து தொடராக ஏழு வருடங்கள் வெளியிட்டார்.

பொன்னியின் செல்வன் உலா வந்த அதே காலத்தில் வீரபாண்டியன் மனைவி மற்றொரு தெருவில் உலா வந்தாள்.

1952இல் பிரேமா பிரசுரம் என்ற நிறுவனம் தொடங்கினார். இன்றும் கூட அந்நிறுவனம் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் மகன் ரவியின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

பொன்னியின் செல்வனை திரைப்படமாக்க பல முயற்சிகள் இடம் பெற்றன. எம்.ஜி.ஆர் கமல்ஹாசன் போன்றவர்களால்கூட முடியாமல் போனது. மணிரத்னத்தினால் சாதிக்கமுடிந்தது.

வீரபாண்டியன் மனைவியை திரைப்படமாக்க ஆனந்த் தியேட்டர் உரிமையாளர் அமரர் உமாபதி முயன்றார். எம்.ஜி.ஆர். சிவாஜி ஜெமினி போன்றவர்களை நடிக்க வைக்க திட்டமிருந்தது.வீரபாண்டியன் மனைவி இன்றுவரை திரைப்படமாக வெளிவர வில்லை.

அமரர் உமாபதி ராஜ ராஜ சோழனை திரைப்படமாக்கி 70mm சினிமாஸ்கோப் திரையில் வெளிவந்த முதல் தமிழ் படம் என்ற சாதனையை நிலைநாட்டினார். திரைக்கதை வசனம் அரு.ராமநாதனே.

கட்டுரையின் நோக்கம் கருதியும் வாசகர்களின் வசதிக்காகவும் வீரபாண்டியன் மனைவியின் கதைச் சுருக்கத்தை இறுக்கமாகத் தருவது தகும்.

கி.பி. 1180இல் சோழ வேந்து மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டைத் தாக்கிய போது வீரபாண்டியன் மனைவியோடு தப்பியோடுகிறான். பின்னர் கோட்டை ஒன்றில் ஒளிந்து கொண்டிருந்தபோது மனைவி சிறை பிடிக்கப்பட்டு மதுரை கோட்டைக்குள் அடைக்கப்படுகிறாள்.

வீரபாண்டியன் மனைவியை மீட்டெடுக்கும் முயற்சிகள் தொடராக இடம் பெற்றபோது பாண்டியப் பெண் ஊர்மிளா என்பவளின் காதல் வலையில் மதுரையின் தளபதி வீரசேகரன் சிக்கிக் கொள்கிறான். அவன் மீட்பு நடவடிக்கையில் வீரபாண்டியனுக்கு உதவுகிறான்.

இவ்வாறு மீட்பு முயற்சியும் தோல்வியுமாக கதை விறுவிறுப்போடு நகர்கிறது.

முக்கிய பாத்திரங்களாக சோழ தேசத்து ஒற்றர் படைத் தலைவன் ஜெகநாத கச்சிராயன் மற்றும் மதுரையைக் கைப்பற்ற உதவுவதும் பின்னர் பாண்டியன் மனைவியை மீட்க துணையானவருமான சிவசேகரன் ஆகியோரைக் குறிப்பிடலாம். பாண்டிய மங்கை ஊர்மிளா மற்றும் வீரபாண்டியன் மனைவி புவன முழுதுடையாள் என வரும் பாத்திரங்கள் அதனை வாசித்தவர்கள் நெஞ்சில் இன்றும் வாழுகின்றன என்பதை வீரபாண்டியன் மனைவி பற்றிய குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சோழர் படைக்குச் சளைத்ததல்ல பாண்டியப் படை என்ற ஓங்காரத்துடன் தமிழ்க் காதலையல்ல மானிடக் காதலைப் பேசுவதே வீரபாண்டியன் மனைவி என்ற படைப்பு முயற்சியாகும்.

எனினும் வீரபாண்டியன் மனைவி திறன் நோக்குத் திமிர் கொண்ட சிலரால் வீட்டுக்குத் தூரமாக்கப்பட்ட நிலையிலும்,

தைக்கும் முள்ளாக அல்லாமல் தராசு முள்ளாக இயங்கும் சிலர் அப்பிரதிபற்றிய கனதிகளை இலக்கிய வெளியில் பேசியே வந்துள்ளனர்

எழுத்தாளரான ஞாநி வீரபாண்டியன் மனைவியை சிபார்சு செய்திருக்கிறார்

ஜெயமோகன் விமர்சகனின் சிபார்சு என 10 சிறந்த வரலாற்று மிகு கற்பனைப் புதினங்கள் எனப் பட்டியல் தயாரித்ததில் அப் பட்டியலில் பொன்னியின் செல்வனோடு வீரபாண்டியன் மனைவியையும் இணைத்துள்ளார்

எழுத்தாளர் சாரு நிவேதிதா பின்வருமாறு குறிப்பெழுதியுள்ளார்.

"காதல் பத்திரிகையில் 1953 ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்த வீரபாண்டியன் மனைவி எந்த வகையில் பார்த்தாலும் சர்வதேச தரம் வாய்ந்த சரித்திர நாவல் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை"

தொடர்ந்தும் அவர்

"பொன்னியின் செல்வனிலும் மற்ற எல்லா சரித்திர நாவல்களிலும் சொல்லப்படும் வரலாறு நம் மனதுக்கு இதமூட்டுவதாகவும் நமது ரொமாண்டிசக் கற்பனைகள் சிறகடித்துப் பறப்பதற்கு ஏதுவாகவும் கிளு கிளுப்பாகவும் இருப்பதையே கண்டு வந்திருக்கிறோம். ஆனால் வீரபாண்டியன் மனைவியில்தான் முதன்முதலாக ராமநாதன் ஒரு தேசத்தின் உண்மையான வரலாற்றை எழுதுகிறார்" என்று தினமணி இணைய இதழில் (07.06.2015) எழுதியுள்ளார்

வரலாற்று நாவல்களின் வரையறைகளை பெருமளவு உடைத்த தமிழின் முன்னுதாரணம் என்று தேவகாந்தன் என்பவர் தாய்வீடு என்ற இணையதள சஞ்சிகையில் 2022 மார்ச் இல் பதிவு செய்துள்ளார்

பிரபல எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை வரலாற்றில் வாழ்தல் என்ற தன்வரலாற்று நூலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"இந்தியாவில் பிரசுரமான என் முதல் சிறுகதை அரு. ராமநாதன் வெளியிட்ட காதல் சஞ்சிகையில்தான் வெளிவந்தது. வரலாற்று நாவல்கள் எழுதுவதிலே கல்கியும் பின்னர் சாண்டில்யனும் பெருவெற்றி பெற்றார்கள் என்கிற ஒரு பொதுவான எண்ணம் காலத்தை ஊடறுத்து தமிழ் வாசகர்கள் மத்தியிலே நிலவி வருகின்றது. இவ்விருவரிலும் பார்க்க வரலாற்றுக் கதைகளை கலை நயத்துடன் காதல் பத்திரிகை ஆசிரியர் ராமநாதனே எழுதினார் என்பது என் அபிப்பிராயம். வீரபாண்டியன் மனைவி தமிழில் எழுதப்பட்ட சுவையான வரலாற்று நாவல் என்பது இன்றளவும் என் ரசனைத் தளம். பின்னாளில் நான் வரலாற்று கதைகள் எழுத விழைந்த பொழுது அரு.ராமநாதனின் எழுத்துக்களே எனக்கு ஆதர்சமாக அமைந்தன என்பதை நன்றி விசுவாசித்துடன் குறிப்பிடுகிறேன்"

மேலுள்ள பிரபலங்களின் குறிப்புகளை உன்னி நோக்கும் பொழுது அரு.ராமநாதன் மிகச் சிறந்த வரலாற்றுப் புனைவுகளை எழுதும் வல்லமையுடன் இருந்தார் என்பதும் வரலாற்று புனைவுகளின் பிரம்மாண்டத்திற்கு தன்னைக் கட்டமைக்கும் தகுதி அவரிடம் இருந்தது என்பதும் ருசுப்படுத்தப்படுகின்றது.

பொன்னியின் செல்வன் திரைப்படம் உலகமெல்லாம் உலா வரும் இன்றைய பொழுதுகளில் அரு.ராமநாதனும் அவரின் வீரபாண்டியன் மனைவி என்ற படைப்பின் திணிவுகளும் நினைவுக்கு வருவது தமிழிலக்கிய வெளி இன்னும் பசுமையோடு இருக்கின்றது என்பதை உண்மைப்படுத்துகின்றது.

○○○

அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி – 2023

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு : ரூபா 10,000/= இரண்டாம் பரிசு: ரூபா 5,000/= மூன்றாம் பரிசு: ரூபா 3,000/=

ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான விதிகள்: சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி: ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

போட்டி முடிவுத் திகதி: 30.07.2023

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. – **ஆசிரியர்**

புத்தருக்குக் கவிதைத் தூது

— செ.சுதர்சன் —

மன்னவர் குலத்தே தோன்றி
மனங்களை ஆட்சி செய்யும்
பன்னரும் ஞான வானே!
பரமனே! புத்தா! போற்றி!
உன்னரும் உருவை எண்ணி
ஊறிடும் கவிதை மாலை,
என்னரும் சொல்லால் கோர்த்து
எடுத்தொரு தூது விட்டேன்...!

பூரணை தன்னில் பூத்து
புவனியை உய்க்க வந்த
ஆரணப் பொருளே! எங்கள்
அருந்தவ முனியே! கேளும்..!
காரணம் இன்றி எங்கள்
காணிகள் பறித்தார் உம் பேர்
பாராயணங்கள் பண்ணி
பலப்பல சிலைகள் வைத்தார்!

கௌதமி வளர்க்க உய்ந்த
கருணையின் வடிவே! அன்பே!
ஔடதம் ஆனாய்! கேள்... கேள்..!
அரசு உம்பேரைச் சொல்லி
கௌவிய நிலங்கள் நீங்கு..!
கைதடி மண்ணில் நீரும்
பௌவியமாகக் குந்தும்
பரிசிகேடேதுக்கையா...?

சாக்கிய முனியாய் உம்மைச்
சார்ந்தவர் போற்ற நேபோள்
ஆக்கினாய் புத்த தேசம்!
ஆயினும் கேளாய்! முன்னோர்
ஆக்கமும், அழிவும், இன்னும்
போக்கிலாச் சாம்பல்கூட
ஊக்கியாய் நிற்கும் மண்ணில்
உம் மதம் நாட்டல் ஏனோ?

பஞ்சமா சீலம் சொல்லிப்
பாரினைத் தூசி தட்டி
அஞ்சுமவ் வழிகள் சொன்னாய்!
ஆருயிர் உடைமை வெந்து
மிஞ்சியே போன மண்ணை
மீதி உன் சிலையும் தின்றால்
நஞ்சென நாளும் உன் பேர்
நலுவுறல் கண்டாய் நல்லோய்..!

தன்னிகர் இல்லாள் அந்த
யசோதரை நீக்கி நல்ல
தன்மகன் நீக்கி அன்று
தனியனாய்த் தவமே கொண்டீர்!

பின்னுமேன் "கன்னி"யாயின்
மேலொரு கண்ணை வைத்தீர்?
இன்னலாம் கள்ளக் காதல்
இதைவிடும் உமக்கு நன்று!

கூடுகள் கட்டி குதூகலக்
குமிழ்கள் பூட்டி அங்கு
நாடுவோர் தன்ஸல் பெற்றால்
நல்லது தானோ சொல்லும்?
வீடதைப் பறித்தார் போக
விளைநிலம் பறித்தார் இந்தப்
பாடுகள் பார்த்துக் கொண்டும்
படுத்து நீர் இருக்கலாமோ?

"சிலையிடல் வேண்டாம்! உள்ளே
சிந்தனை வேண்டும்!" என்றாய்
சிலையிலே வைத்து, உன்னைச்
சிங்களச் சூரனாக்கி
நிலையிலாப் புகழைச் சூட்டி
நின்னையே நிந்தை செய்தார்!
அலையெழு ஜம்புகோளம்
அடிமுதல் வைத்ததெண்ணு!

தங்கமாம் ஈழ நாட்டில்
தமிழ் நிலம் மீதில் சைவர்
அங்கமாய்ப் பதியம் வைத்து
அருந்தமிழ்ப் பௌத்தம் கண்டார்..!
பங்கமாய் அதற்கும் கேடு
பண்ணவும் கிளம்பிவிட்டார்
மங்கலாய் உன்னைக் கற்ற
மாமிசக் காவிமார்கள்...!

புத்தமா முனியே நீ செய்
புண்ணியம் உளது ஐயா!
இத்தரை மீதில் இப்போ
இன்னலே விளைத்து நாளும்
புத்தராய்ச் சிலைகள் குட்டி
போடுதல் தவிர்க்க வேண்டும்!
இத்தரை எந்தன் காணி
இதனையும் விட்டுப் போவீர்!

கவிதையில் காணி செய்து
கவின்பெறு தூபி கட்டி
பவித்திரமாக மக்கள்
பார்க்கவே கார்ணிவெல்லும்
செவிக்கினி பிரீத்தும் ஓதி
செப்பிய பலவும் செய்வேன்!
தவிப்புறு தமிழர் வாழத்
தக்கதோர் தீர்வு சொல்லும்...!

ஈழத்தமிழ்ச் சஞ்சிகை உலகில் சிரித்திரன் சுந்தர்

ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றிலே விதந்து பேசத்தக்க சிற்றிலக்கிய ஏடுகள் அறுபதுக்கும் எழுபதுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தோன்றின. அவை ஒவ்வொன்றும் தமக்கெனத் தனித்துவமான நோக்கையும் போக்கையும் கொண்டிருந்தன. அவ்வாறு வெளிவந்த சிரித்திரன் ஏடு, தனது பெயரிலேயே தனது இலட்சிய முத்திரையைக் குத்திக்கொண்டு, 'தமிழில் வெளிவந்த ஒரேயொரு காட்டூன் சஞ்சிகை' என்ற பெருமையுடன் உலா வந்தது.

முப்பதுகளின் முற்பகுதிகளில் 'இலங்கை விகடன்' என்ற நகைச்சுவை மாசிகை வெளிவந்தது. தமிழகத்தில் துரிதமாக வளர்ந்துகொண்டிருந்த ஆனந்தவிகடனின் தாக்கத்தால் தோன்றிய இச்சஞ்சிகை ஒரு சில இதழ்களின் பின்னர் நின்றுவிட்டது. அறுபதுகளில், தமிழகச் சஞ்சிகைகளின் வணிக இலக்கியத்துக்கு தமிழ் வாசகர்கள் படிப்படியாக வசப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் 1963இல் 'சிரித்திரன்' வெளிவரத் தொடங்கியது. தனக்கென ஒரு குறிக்கோளை முன்னெடுத்துக்கொண்டு அது வெளிவரலாயிற்று. சிரித்திரனின் பிதாவான எஸ். சிவஞானசுந்தரம் அவர்களுக்கு, நகைச்சுவையைத் தனது கொடியாக உயர்த்திக் கொண்டு தமிழ்ப்பத்திரிகை உலகில் நடை போடுவதற்கான திடமிக்க ஆளுமை இருந்தது. இலக்கிய ஆர்வலர்கள், அவரை அன்பும் மரியாதையும் இழைந்துவர, 'சுந்தர்' என அழைத்தனர்.

பம்பாய் நகரில் கட்டிடக்கலை பயின்ற காலத்தில் அன்றைய இந்தியாவின் அரசியல் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு அவர் வரைந்த 'காட்டூன்' என்ற கருத்துச் சித்திரங்கள் அங்குள்ள ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரமாகின. அந்த அனுபவமும் திறமையும் பிற்பாடு சிரித்திரனுக்கான மூலதனமாகின. அவரிடம் இயல்பாகவே காணப்பட்ட சிந்தனைக் கூர்மை, செயல்திறன், நிதானம், துணிச்சல் என்பனவும் இம்முயற்சிக்கு உரமாகி, சஞ்சிகையைச் செழுமைப்படுத்தின.

சிரித்திரன் 1963இல் கொழும்பில் தொடங்கப்பட்டு வெளிவந்தது. 1971இன் பின்னர் 1995 வரை யாழ் மண்ணிலிருந்து அது வெளிவந்தது. சிவஞானசுந்தரம் அவர்களே, சிரித்திரனின் ஆசிரியர், ஓவியர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் என்ற அனைத்துப் பொறுப்புகளையும் வகித்தார். எனவே, சிரித்திரன் சஞ்சிகை முற்றுமுழுக்க அவரது சிந்தனையின், இரசனையின், செயல்திறனின் வெளிப்பாடாகவே விளங்கியது.

சுந்தரது ஆளுமை

சுந்தர், மனிதநேயங் கொண்ட ஒரு பத்திரிகாசிரியர். கலைஞர். அவரது பேச்சில் கனிவு, அடக்கம், எளிமை. தெளிவு எல்லாம் இருக்கும். அவை அவருடன் பழகுபவர்களைக் கவரும் தன்மையுடையன. 'மிகப்பெரியதொரு கட்டிடக் கலைஞனாக வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்ற வாய்ப்பை உதறி, இலட்சியத்தாகத்துடன் எழுத்துப்பணி புரிந்த மேதாவிலாசம் அவருடையது' என செங்கை ஆழியான் பதிவு செய்கிறார்.

சிரித்திரன் ஆசிரியர் என்ற வகையில், சுந்தருடைய ஆளுமை இரண்டு துறைகளில் வெளிப்பட்டது. ஒன்று, பொருட்செறிவுடைய எழுத்து. மற்றது, சித்திரங்களின் தரச் சிறப்பு. காட்டூன் என்ற கருத்துச் சித்திரம் பற்றிய தெளிவு அவருக்கு இருந்தது.



வசந்தி தயாபரன்

தமிழகத்தில், முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் காட்டூன்களுக்கு முன்னோடியாக ‘மாலி’ விளங்கியதைப் போலவே, அச்சித்திரப்பயிரை ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத்துறையில் நாட்டி வளர்த்த முன்னோடி சுந்தர்!

சித்திரமே சுந்தரின் கருத்துப் பரிமாற்றத்துக்கு உரிய முதன்மை ஊடகமாகத் திகழ்ந்தது. சிவா, சிவாஜி, சுந்தர் முதலிய பெயர்களில் அவர் காட்டூன்களை வரைந்தார். அவை சுதந்திரன், தினகரன், வீரகேசரி உட்பட யாழிலிருந்து வெளிவந்த சில பத்திரிகைகளிலும் பிரசுரமாகின. சுந்தர், மாயன், பாணன், அதிமதுரம், ஜோக்கிரட்டீஸ், மகுடி எனப் பல்வேறு புனைபெயர்களில் அவர் எழுதினார். அன்றைய நாட்களில், தினகரன் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்த ‘சவாரித்தம்பர்’ காட்டூன், சுந்தருக்கென ஒரு வாசகர் கூட்டத்தை ஏற்கனவே உருவாக்கியிருந்தது,

அவர், தம்முடைய படைப்புகளுக்குப் பொருத்தமான பாத்திரங்களை, தாம் கண்ட, பழகிய மக்களிடையே இருந்தே வெளிக்கொணர்ந்தார். அவரது காட்டூன் நாயகர்களில் அதி உன்னதமான காவியத் தலைவனான ‘சவாரித்தம்பர்’, சுந்தருடைய சொந்த ஊரான நெல்லியடியில் வாழ்ந்த ஒருவரே. கிராமிய வாழ்வுக் கோலங்களைச் சித்திரிக்க சவாரித்தம்பர் பயன்பட்டதுபோலவே, நகரவாழ்வில் ஊறிக்கிடக்கும் தமிழரது போலித்தன்மையைக் கிண்டல் செய்ய, மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன் பாத்திரங்களை உருவாக்கினார். இவ்வாறே, “மைனர் மச்சான்”, “கலாச்சாரியார்”, “மெயில் வாகனத்தார்", “ஒய்யப் பங்கங்காணி” ஆகியோரையும் படைத்து உலவவிட்டார்.

‘மகுடியார் கேள்வி பதில்’ என்ற அங்கம் சிரித்திரன் சுந்தரின் சிந்தனையின் ஆழத்தையும் கூர்மையையும் புலப்படுத்துவது. அங்கதச்சுவை நிரம்பியதாக, வீச்சுள்ளதாக, பொருத்தமான சொற்களால் கேட்டவரின் உள்ளத்தில் பாய்ந்து சென்று தாக்கம் ஏற்படுத்துவதாக அப்பதில்கள் தனித்துவமானவையாக, இணையற்று விளங்கின. அவை, நமது நாட்டு இலக்கியத்துக்கு சுந்தர் அளித்த ஓர் உன்னதமான படையல்.

திரைப்படப் பாடல்களின் தேர்ந்தெடுத்த வரிகளுக்கு புதிய அர்த்தம் புலப்படும் வகையில், சுந்தர் வரைந்த ‘சித்திரகானம்’ என்ற சுவைச் சித்திரங்கள் அவரது சிந்தனை வளத்தின் இன்னொரு பரிமாணத்தைச் சுட்டுவன.

சிரித்திரனில் வரும் விடயங்களுக்கு, சுந்தர் சூட்டும் தலைப்புகள் மிகக் கவர்ச்சியானவை. அவற்றின் அங்கதச்சுவையும் இலக்கிய மணமும் வாசகனை ஈர்க்கும். சிரித்திரு, முத்துமொழி, கதைத்தேன், செய்திச்சோடி, சுவைத்தேன், முன்முறுவல், பின்சிரிப்பு, மாத்திரைக்கதை, திரைவாசகத்தேன் என்பன அவற்றில் சில.

சிரித்திரனின் தனித்துவம்

சுந்தர் அவர்கள் தனது சஞ்சிகையின் உருவாக்கத்தில் எப்பொழுதும் தெளிவான ஒரு நிலைப்பாடு உடையவராக இருந்தார். தமிழகத்துச் சஞ்சிகைகளின் சாயலைக் கொண்டதாக இல்லாமல், தனக்கென வகுத்துக் கொண்ட கோட்பாட்டின் தடத்தில், மண்ணின் மணம் கமழ நடைபோட்ட சஞ்சிகை சிரித்திரன். அது, ‘செய்தொழில் தெய்வம்: சிரிப்பே சீவியம்’ என்ற புதிய சிந்தனையோட்டத்துடன் எமது சொந்த மண்ணில் வேர்விட்டு வளர்ந்த ஒரு சஞ்சிகை!

சுந்தருக்கு மிக நுட்பமானதொரு சமூக நோக்கு வாய்த்திருந்தது. எனவேதான், இந்நாட்டின் தமிழ்மக்களது வாழ்க்கைக் கோலங்களைச் சித்திரித்து, அவர்தம் சிந்தனைப் போக்கைச் சீர்செய்ய முயன்ற ஒரு சஞ்சிகையாக சிரித்திரனை அவர் கட்டமைத்தார். அத்துடன், அவர் கிராமிய மக்களுடைய உணர்வோட்டங்களையும் அவர்களது அன்றாடப் பிரச்சினைகளையும் சம்பிரதாயங்களையும் நன்கு அறிந்தவர் என்பதால், தனது எளிமையான இயற்கையான மொழிநடையால், அவற்றைச் செழுமையாகச் சித்திரிப்பதில் வெற்றிகண்டார்.

சிரித்திரனில் வெளிவந்த படைப்புகள் வெறும் உதிரிகளாகச் சிந்தப்பட்டவை அல்ல. அவற்றுக்கு ஒரு பலமான அடித்தளம் இருந்தது. சிரித்திரனை நகைச்சுவை என்ற எல்லை கடந்து, ஓர் கனதியான இலக்கிய ஏடாக வளர்த்தெடுக்க சுந்தர் முயன்றார். 1971இன் பின்னர், சிறுகதை, குறுநாவல், புதுக்கவிதை என படைப்பிலக்கியங்களின் பிரசுரகளமாகவும் சிரித்திரன் விளங்கியது.

ஈழத்தில், புதுக்கவிதைகளைக் கேட்டு வாங்கிப் பிரசுரித்து பரவலடையச் செய்த முன்னோடிப் பத்திரிகையாக சிரித்திரன் விளங்கியது எனவும் அறியமுடிகிறது. இசைத்துறை, சிற்பத்துறை சார்ந்த கலைஞர்களுடனான செவ்விகளும் அவ்வப்போது வெளிவந்தன.

முதுநிலை எழுத்தாளர்களான, இளங்கீரன், செங்கை ஆழியான், தெணியான், கே.ஆர்.டேவிட், தெளிவத்தை ஜோசப், எஸ்.அகஸ்தியர், கனக செந்திநாதன், காசி ஆனந்தன், முதலியோர் சிரித்திரனில் எழுதினர். அவ்வாறே, சுதாராஜ், திக்குவல்லை கமால், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், கோப்பாய் சிவம், மருதூர் அலிகான், வடகோவை வரதராஜன், கீதபொன்கலன், இளவாலை விஜயேந்திரன், வ.ந.கிரிதரன், என ஏராளமான இளம் படைப்பாளிகளைத் தூக்கிவிட்ட ஒரு சஞ்சிகை என்ற பெருமையும் சிரித்திரனுக்கு உரியது.

தொடர்ந்து சிறுகதைப்போட்டிகளை நடத்தியதன் மூலம், வளரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளித்தமை சுந்தர் அவர்களது மற்றுமொரு நற்பணியாகும். 1971இல், சிரித்திரனின் எட்டாவது ஆண்டு நிறைவையொட்டிய போட்டியில் சிறுகதைக்கான முதற்பரிசை திக்குவல்லை கமால் பெற்றார். சிரித்திரன் கதைகள் 'தகவம்' அமைப்பின் சிறந்த சிறுகதைகளுக்கான பரிசை ஏழுதடவைகள் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிரித்திரன் ஈழத்துச்சிறுகதைத் துறைக்கு, பெரும்பணி ஆற்றியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை.

செங்கை ஆழியானின் 'பிரளயம்', 'வாழி நீ வழுக்கியாறு', முதலான பல படைப்புகள் சிரித்திரனில் வெளிவந்தன. அவரது 'ஆச்சி பயணம் போகிறாள்' 'கொத்தியின் காதல்' எனும் ஈழத்தின் முதல் இரண்டு நகைச்சுவை நாவல்களும் சிரித்திரனில் பிரசுரமாகின. அ.ந. கந்தசாமியின் 'நடுநிசிப் பிசாசு', செ.யோகநாதனின் 'காவியத்தின் மறுபக்கம்', கே. ஆர்.டேவிட்டின் 'பாலைவனப் பயணிகள்' முதலான நாவல்களும் குறுநாவல்களும் அதில் பிரசுரமான ஏனைய புகழ்பெற்ற படைப்புகளாகும். சிரிகதைகள் என்ற வரிசையில், திக்கவயல் தர்மகுலசிங்கம் கே. எஸ். பாலச்சந்திரன் முதலியோரது படைப்புகள் பல சிரித்திரனில் வெளிவந்தன.

நிறைவாக

சுந்தரது சித்திரங்கள், ஈழத்தமிழரது வாழ்வின் ஒரு காலகட்டத்துக்குரிய வாழ்வியல் பதிவேடுகள். குறிப்பாக, யாழ்ப்பாணத்து மக்களது பலங்கள் பலவீனங்கள் எல்லாம் அச்சித்திரங்களில் அங்கதச்சுவையுடன் மேடையேறியிருக்கின்றன. அவை, வாழ்வின் முடிச்சுகளையும் நெருடல்களையும் மொழியற்ற கருத்துச் சித்திரங்களாகக் காட்டி, எம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.

சிரித்திரன் சித்திரக்கொத்து என்ற தொகுப்பை, 1989இல் சிரித்திரன் வெளியிட்டது. கரணவாய் கரவெட்டி கூட்டுறவுச் சங்கமும் சுந்தரின் காட்டூன்களில் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டது. 'மகுடியார் பதில்கள்' நூல் வடிவில் வெளிவந்துள்ளது. 'சிந்தனைப் போராளி சிரித்திரன் சி. சிவஞானசுந்தரம்' என்ற தலைப்பிலான நூல் சுவைத்திரள் ஆசிரியர் திக்கவயல் தர்மகுலசிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

சுந்தரை உளமார நேசித்த இலக்கியவாதிகள் பலர். அமரர் தகவம் இராசையா அவர்கள், 'மைனர் மச்சான்', 'கலாச்சாரியார்' ஆகிய தொடர்கள் முழுவதையும் தேடியெடுத்துத் திரட்டி ஒப்படைத்தார். 'சிரித்திரன் சுந்தரின் படைப்புகள் தேடி எடுக்கப்பட்டு, தொகுத்து வெளியிடப்படாதவிடத்து, அதுவே அவருக்கு உண்மையான மரணம் ஆகிவிடும்.' என்று தகவம் இராசையா தனக்கு எழுதிய கடிதமே, 'காட்டுன் ஓவிய உலகில் நான் – சிரித்திரன் சுந்தர்' என்ற நூலை வெளியிடுவதற்கான உத்வேகத்தைத் தனக்குத் தந்தது, என செங்கை ஆழியான் பதிவு செய்துள்ளார். சுந்தரின் நண்பர்களது முயற்சியின் விளைவாக 'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக 2001இல் அந்நூல் வெளிவந்தது.

3.3.24இல் கரவெட்டியில் பிறந்த சுந்தர் 3.3.95 இல் தனது சொந்த ஊரில் மறைந்தார். அவர் 'ஈழத்தமிழுலகின் காட்டூன் உலகின் முடிசூடா மன்னன்' எனக் கொண்டாடப்படுகிறார். ஆயினும் சிரித்திரன் சஞ்சிகை வழியாக, அவர் ஆற்றியுள்ள பணிகள், அந்த ஒற்றைப் பரிமாணத்துள் அடக்கமுடியாதவை. ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றின் விரிந்த பரப்பில் அவர் விட்டுச்சென்ற தடங்கள் மிகவும் அழுத்தமானவை.

* * *

சிறுகதை

பாதை தவறாப் பயணம்

சுபஹ்" தொழுதுவிட்டு வந்ததிலிருந்து என்னதான் செய்வதென்ற மனப்போராட்டத்தோடு, நடப்பதும் கொஞ்சநேரம் அமர்வதுமாக வீட்டுக்குள் சுழன்று கொண்டிருந்தான் ஸக்கா.ஃ.ப்.

தொழிலுக்கு முழுக்குப் போட்டு ஒரு வாரமாகி விட்டது. அதுவும் தற்செயலாக நடந்துவிட்ட சங்கதிதான்.

உள்ளே குழந்தை அழும் சத்தம் கேட்டு மெல்ல எட்டிப் பார்த்தான். மனைவி குழந்தையைத் தூக்கியபடி முன்னே வருவது தெரிந்தது.அவள் ஏதோ சொல்லப்போகும் முகபாவமும் அவனுக்குப் புரிந்தது.

"புள்ளேட மாவும் இன்டக்கி முடீத.ஒரு பகேட் எடுத்து வெச்சிக் கொண்டா நல்லம்"- முன்கூட்டியே நினைவூட்டலாகச் சொல்லி வைத்தாள்.

அவள் விஷயம் புரியாதவள் அல்ல. கணவனும் மனைவியுமென்றால் இன்பத்தையும் துன்பத்தையும் பரஸ்பரம் பகிர்ந்துகொண்டு சமாளித்து வாழ்பவர்கள் என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள்.

"எப்பிடிச்சரி எல்லம் செய்யோணும்தானே சரீனா.கைல மடீல இல்லயென்டு தின்னாமக் குடிக்காம ஈக்கேலுமா.எப்பிடிச்சரி ஒரொரு வழியப் பாக்கோணும்."- அவனும் பதில் சொல்லத் தவறவில்லை.

அவன் இப்போதைக்கே பலபேருக்கு சின்னச் சின்னக் கடனாளிதான். இப்படி எடுப்பது மாத்திரமன்றி, அதையெல்லாம் மீண்டும் எப்போது எப்படிக் கொடுப்பதென்றும் அவன் சிந்திக்காமல் இல்லை.



திக்குவல்லை
கமால்

சுவர் மணிக்கூட்டு முட்கள் ஏழு மணியைக் காட்டி அவனை முள்ளாய்க் குத்தி வலியூட்டின.

ஸக்கா.ஃ.புக்கு தொழில் இல்லாவிட்டாலும் எளிய குடும்பத்தவனாக இருந்தாலும் மாப்பிள்ளைச் சந்தையில் அவனுக்கும் ஒரு மவுசு இருக்கவே செய்தது.

மனைவி...குழந்தை...குடும்பம்...என்று நினைக்கும் போதே அவனுக்கு மெல்லிய நடுக்கம் எடுத்துவிடும்.

"ரெண்டு வரிசம் ஸவுதிக்குப் பெய்த்திட்டு வாடா.எல்லம் சரிவரும் "- இப்படிச் சில கூட்டாளிமார்கள் ஆலோசனையாக அல்ல கிண்டலாகச் சொல்வதுண்டு.

"டேய் எனக்கிட்ட படிப்பும் இல்ல.சல்லீம் இல்ல.இதுரெண்டுமீந்தா இங்கயே ஸவுதி தான்டா"- என்று சொல்லிவிட்டு அதற்குமேல் கதைகொடுக்காமல் மாறிவிடுவான்.

மொத்தத்தில் கூலிவேலை அல்லது கடைச்சிப்பந்தி. இதைத்தவிர அவனுக்கு வேறு வழியில்லை.கல்யாண புரோகர்மார்களிடம் தெளிவாகவே அவன் இதைச் சொல்லிவிட்டான்.

இப்படித்தான் அவனுக்கு திருமணம் நடந்தேறியது ஒரு சாதாரண குடும்பத்தில்.

சரீனாவிடம் உள்ளது உள்ளபடியே முதல் நாளிலேயே எல்லாம் பேசித்தீர்த்துவிட்டான். நாளையை நோக்கி இன்றே அவன் பாதை அமைத்துக் கொண்டான்.

"கஷ்டப்பட்டு ஹலாலா சம்பரிச்சா அதுபோதும்.அல்லா பரக்கத்துச் செய்வான்" -எல்லாம் உள்வாங்கி அழகான பதிலொன்றைச் சொன்னாள் அவள்.

கல்யாணம் செய்து முதற் குழந்தை பிறக்கும்வரை அவனுக்கு நிலையான தொழிலென்று எதுவும் அமைய வில்லை.கொஞ்ச நாட்களாக பேமென்றில் டொய்ஸ் சாமான் போட்டுக் கொண்டிருந்தான்.இன்னும் சிலகாலம் சாரன் வியாபாரி ஒருவருக்கு உதவியாளனாக

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



ஓடியாடினான். அதன் பின்னர் பேக்கரி ஒன்றில் வேலை செய்தான்.இப்படியிப்படியே காலம் ஓடிக்கொண்டிருந்தது.

தன் கணவர் ஓயாதுழைத்து குறை வைக்காமல் குடும்ப வண்டியை நகர்த்திச் செல்கிறாரே என்ற வகையில் அவன் மனைவிக்கு மகிழ்ச்சிதான். ஆனால் நிலையான ஒரு தொழிலை வகுத்துக் கொள்ளாமல் காலத்திற்குக் காலம் அதையும் இதையும் செய்துகொண்டிருப்பதை அவளால் ஏற்றுக்கொள்ளக் கஷ்டமாக இருந்தது.அதை இதமாக வலியுறுத்த சரீனா தயங்கவில்லை.

“இங்க பாருங்க நீங்க கொஞ்சம் கஷ்டப் படுகியா. ஒன்டச் செஞ்சிட்டு கொஞ்ச நாள்ல இனுமொன்டுக்கு போற.ஒன்டே செஞ்சாத்தானே அதிலொரு புடிமானம் வர.”

அவள் மிக நிதானமாகச் சொன்ன பாங்கு அவனை வெகுவாக ஆகர்ஷித்தது. கணவனைத் தட்டிக் கேட்கும் தைரியம் ஒரு மனைவிக்கு இருக்கக் கூடாத ஒன்றல்லவே. அதைக்கூட இங்கிதமாகச் செய்யத் தெரிந்தவள்தானே உத்தம பத்தினியாகிறாள்.

“நீங்க செல்லியது மெய்தான் சரீனா. மனசிக்கு பட்டொன்ட புடிச்சிக்கொளப் பாக்கிய” -கொஞ்ச நேரம் தனியாகச் சிரித்துவிட்டுத் தொடர்ந்தான். “எத்தினயொ கலியாணம் பேசின.ஒங்களத்தான் மனசிக்குப் பட்ட.அன்ன அதப்போல”

இப்பொழுது இருவருமே சேர்ந்து சிரித்தனர்.

“எப்பிடிச்சரி வாழோணும்.எல்லாக் கஷ்டமும் படுகிய அதுக்குத்தானே.அல்லாஹ் தாரத்த எந்த வழிலசரி தந்திடுவான். சின்னச் சின்னத் தொழில் செஞ்சவங்க இன்டக்கி பெரியாக்களா வந்தீக்காங்க”- சரீனா எதைச் சொல்ல வேண்டுமென்று அவாவினாளோ அதை மனதில் படும்படியாக சொல்லித் திருப்பியடைந்தாள்.

ஸக்கா.ஃப் தீவிரமாக யோசித்தான். அவனது அடுத்த தெரிவு சற்று வித்தியாசமாக இருந்தது. அவனுக்குப் பெரிய முதலீடொன்று தேவைப் படவுமில்லை.

முதல் நாளன்று பத்துப் பதினைந்து அன்னாசிப்பழங்களையும் பெரிய பேசன், கத்தி, இதர சாமான்களையும் வாங்கிக் கொண்டான்.

அன்னாசிக் கீலங்களில் உப்பும் மிளகாய்த் தூளும் தூவி சொப்பிங் பேக்கில் இட்டுக் கொடுப்பான். காலை ஒன்பது மணிக்கெல்லாம் அன்னாசி பேசனைத் தலையில் சுமந்தபடி வெளிக்கிடுவான்.பாடசாலைகள்...விளையாட்டு மைதானம்...சனசந்தடி நிறைந்த இடங்கள் அங்கு இல்லையா என்ன!.

சிலநாட்களில் பகல் ஒரு மணியாகும் போதே எல்லாம் காலியாகிவிடும்.எப்படியும் மூன்று மணிக்குள் எல்லாம் தீர்ந்துவிடும்.

மாலையில் அன்னாசி வாங்கி வருவதும் காலையில் புறப்படுவதுமாக இரண்டரை வருடங்கள் உருண்டுவிட்டன.நல்ல பயிற்சியும் அனுபவமும் கைவரப்பெற்றதோடு போதில லாபமும் கிடைத்தவண்ணம் இருந்தது.குடும்பச் செலவும் தங்கு தடையின்றி ஓடியது.

ஒரு வாரத்திற்கு முன்பு எதிர்பாராத வகையில் இடைநடுவில் வீட்டுக்கு ஓடி வரவேண்டி ஏற்பட்டுவிட்டது அவனுக்கு. நாலு வயதுப் பிள்ளைக்கு சுகமில்லை என்ற செய்தி கிட்டியிருந்தது. ஏதோ அஜீரணமென்று தொடங்கி, வயிற்றோட்டமாக மாறி, இறுதியில் தொற்று என்று முடிவாகியிருந்தது. மூன்று நாட்களாக வைத்தியசாலையும் வீடுமாக ஓடியாடி அலைந்து பெரும் துன்பத்துக்குள்ளானான் ஸக்கா.ஃப்.

மருந்தில்லாத வைத்தியசாலைகள், பல மடங்காகிவிட்ட ஃபாமசி விலைகள், அடிக்கடி ஓடிய திரீவீலர்களென்று கையிலிருந்த முதலும் இலாபமும் வந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தது.

“எல்லாம் அல்லாட நாட்டந்தான். இப்பிடி யோசின பண்ணி மண்டய ஒடச்சிக்கொள வாண.”- மனைவியின் குரல்.

“இன்டக்கி சரியா ஒரு கெழம சரீனா. இப்பிடியே நின்டா எங்கட கதியேத்தியன்?”- அவன் விடை தெரியாத வினாக்குறியை அவள் முன்னே தூக்கிப் போட்டான்.

"உடவான.நீங்க ஒங்கட தொழிலச் செய்ங்கோ. தாருக்கிட்டேம் கடன்கிடன் கேக்கத் தேவில்ல. ஏன்ட காதுப்பூம் மோதிரங் குஞ்சி ரெண்டுமீக்கி"

"வாண" -அவன் தொடரவிடாமல் குறுக்கிட்டு நிறுத்தினான்." அது ஒங்கட வாப்ப ஒங்களுக்குத் தந்தது. அதில் நான் கை வெக்கியல்ல.எதுக்கும் இன்னும் ரெண்டுநாள் பொறுத்துக் கோங்கொ"

அதற்குமேல் அவன் ஒன்றும் சொல்ல வில்லை. பிள்ளையின் சிணுங்களே கேட்டது அவளுக்கு.

❖❖❖

"யாஅல்லாஹ் ...ஏன்ட மாப்பிளக்கு நல்லோரு பொழப்புக்கு வழிகாட்டு யாஅல்லாஹ்.தாருக்கும் நோவின செய்யாத மனிசன். தாருக்கிட்டேம் கைநீட்டாத மனிசன் யாஅல்லாஹ்"

தொழுகையைத் தொடர்ந்து துஆ செய்த கைகளை முகத்திலும் நெஞ்சிலும் தடவிக் கொண்டாள் சரீனா.

ஊரிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அந்த மார்பல் தட்டு உற்பத்தித் தொழிற்சாலை அமைந்திருந்தது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள அங்கே பல தராதரங்கில் தொழில் செய்கின்றனர்.

அதன் உரிமையாளர் அதானா பாயின் அலுவலகத்திற்கு நடுத்தர வயதான் நம்பிக்கை யான ஒருவர் தேவை என்றவகையில் அவரது சகாக்கள் ஸக்காஃபை இனம் கண்டு அழைத்துச் சென்றிருந்தனர்.

அதன் முடிவு என்னவென்று அறிய துஆக்களுடன் காத்திருந்தாள் சரீனா.

அவன் தனியே வரவில்லை. இன்னொரு களிசான் காரனும் கூடவே வந்திருந்தார். அவர் ஊரவர் என்பதில் ஐயப்பாடு இருக்கவில்லை. மாலைமங்கலிலும் ஸக்காஃபின் முகம் என்றுமில்லாதபடி ஸீனத்தாக இருந்தது.

அவள் மரியாதைக்காக கதவடியில் நின்று சிரித்தும் சிரிக்காமலும் பார்ந்தாள்.

"ஆ ஸக்காஃபட விஷயம் சரிபுள்ள. சும்மவல்ல நல்ல சம்பளம். அப்ப எட்டரக்கி முந்துப் பொகோணும்.சரி நான் வாரனே"

ருக்ஷான் துரை சென்றதும் தன் கையிலிருந்த கவரை மனைவிக்கு நீட்டினான்.

அவள் அதனுள்ளே இருந்த வெள்ளைத் தாளை எடுத்து விரித்தாள்.அதுஆங்கிலத்தில் எழுதப்பட்ட சிற்றூழியர் நியமனக் கடிதம் என்பதெல்லாம் அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் அதில் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த நாற்பதும் மேலும் மூன்று பூச்சியங்களும் அவளை மெய்குளிரச் செய்தது.

இரண்டு பெருநாட்களும் ஒன்றாக வந்த்துபோல் இருவருக்கும் மகிழ்ச்சி.

ஒரொவரை ஒரவர் புரிந்துகொண்டு, உள்ளதைக் கொண்டு நல்லது செய்யும் குடும்ப வாழ்வு எவ்வளவு அழகானதென்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை.

○○○

கண்ணீர் அஞ்சலி

ஈழத்தின் பெண் எழுத்தாளர் திருமதி யோகா பாலச்சந்திரன்

ஈழத்தின் பெண் எழுத்தாளர்களில் ஒருவரான திருமதி யோகா பாலச்சந்திரன் 18-05-2023 அன்று கனடாவில் காலமானார். இவர் ஓர் மும்மொழி ஊடக வியலாளர்., ஆக்க இலக்கிய எழுத்தாளர், ஒலிபரப்பாளர், சமூகசேவை ஆர்வலர்., சினிமா நாடக எழுத்தாளர்பேச்சாளர் என பன்முக ஆளுமையாளராக விளங்கியவர். 1938-02-07 அன்று கரவெட்டியில் முரகேசு வல்லிபுரம் செல்லம்மா தம்பதிக்கு மகளாகப்பிறந்த இவர், மாத்தளை பாக்கியா வித்தியாலயம், நீர்கொழும்பு நியூஸ்டெப் மெதடிஸ்ற் கல்லூரி, கொழும்பு சென்ற மத்தியூஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் ஆகியவற்றில் கல்விகற்றவர்.

இவரது கணவர் கே. பாலச்சந்திரன் 2000ஆம் ஆண்டில் காலமானபின் தனது புதல்வர்களுடன் கடனாவில் வாழ்ந்து வந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக.

கவிஞர் நீலாவணனின் "வடமீன்" காவியம்

கவிஞர் நீலாவணன் **"பட்டமரம்", "வடமீன்", "வேளாண்மை"** ஆகிய மூன்று நவீன காவியங்களை வடித்துள்ளார். இவற்றை நவீன காவியங்கள் எனக் கூறக் காரணம் வழமையான காவிய மரபுகளிலிருந்து தன்னைத் தளர்த்திக் கொண்டு சமகால வாழ்க்கைக் கோலங்களைச் சாதாரண வாசகனும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிமையான செய்யுள் வடிவங்களிலே அதாவது பண்டைத்தமிழ் இலக்கியங்களில் உள்ள செய்யுள்களில் காணப்படும் மொழி இறுக்கத்தைத் தளர்த்தி எளிமையான வடிவிலே யாக்கப்பட்டமையிலாகும்.

"நீலாவணன் காவியங்கள்" (2010) எனும் நூலுக்கு (அமரர்) சண்முகம் சிவலிங்கம் 'அண்ணன் நீலாவணனுக்கு' எனும் தலைப்பில் வழங்கியுள்ள முன்னுரையில் இத்தகைய நவீன காவியங்களை 'நெடும்பாடல்' அல்லது 'கதைப்பாடல்' என்றும் இவைபோன்ற கதைப் பாடல்களை மேனாட்டார் 'Long Poems' என்றே வழங்குவர் எனவும் குறிப்பிடுகின்றார்.

இந்த **"வடமீன்"** காவியம் தன் தந்தையாரால் எழுதப்பட்டு எந்த இதழ்களிலும் பிரசுரமாகாது கையெழுத்துப் பிரதியாகக் கிடந்ததைத் கண்டெடுத்துத் தான் பதிப்பித்த 'நீலாவணன் காவியங்கள்' நூலில் ஏனைய காவியங்களான 'பட்டமரம்' மன்றும் 'வேளாண்மை'க் காவியங்களுடன் சேர்த்து ஒரே தொகுப்பாக இம்மூன்று காவியங்களையும் பதிப்பித்ததாக நீலாவணனின் மகன் எழில்வேந்தன் மேற்படி நூலுக்கு அளித்துள்ள பதிப்புரையில் பதிவு செய்துள்ளார்.

இந்தப் பின்னணியில் இனி 'வடமீன்' காவியத்தினுள் நுழையலாம். காவியத்தின் கதைப்பின்னல் இதுதான்.

கொழும்பில் கந்தோரொன்றில் வேலை பார்க்கும்

"அரசியல் அலுவலாள், ஓர்
ஆண்பனை அனைய செம்மல்" ஆன மூர்த்தி தனது நாற்பத்தேழாவது வயதில் ஊரில் பட்டிக்காட்டாளான தனது

"அம்மாச்சி மகள், அனாதை
அருந்ததி..."யைத் திருமணம் செய்து கொழும்புக்குக்

"கொட்டஹேனாவின் சந்தில்
குகைபோன்ற மாளிகைக்கண்" (அனெக்ஸ்) குடித்தனம் வருகிறான்.

மூர்த்தி வேலைபார்க்கும்
"கந்தோரில் கணக்கில், ஏதோ
கவலையீனத்தால் நேர்ந்த"
பிரச்சினையால் சம்பளத்தில் வெட்டுவிழ அதைச் சரிகட்டுவதற்கு அவன் மனைவி அருந்ததி

"கோப்பியை ஆற்றிக் கொண்டே
கோபிக்க வேண்டாம் அத்தான்
காப்பினை ஈடுவைத்தால்"
என்று ஆலோசனை கூறுகிறாள்.

"அண்டைய அறையில் வாழும்
ஆனந்தன் இவற்றையெல்லாம்
கண்டானோ, கண்ட அந்தக்
கணத்திலே நடந்துவந்து
நின்றான் முன்கதவில்.... .

அண்டைய அறையில் வாழும் ஆனந்தன் மூர்த்திக்குப் பண உதவி செய்யத் தானாகவே முன்வருகின்றான்.

"காசெதுந் தேவையானால்
கைம்மாற்றுத்தரலாம் ஒன்றும்
யோசிக்க வேண்டாம்...." என்கிறான்.

"ஆனந்தன் இளைஞன் நல்ல
அழகான பையன். அன்பில்
தேனான குணத்தன்! என்னைத்
தெரிந்தவன். அதனாற் சொன்னான்."

என எடுத்துக்கொண்டு மூர்த்தியும் ஆனந்தனின் உதவியை ஏற்றுக் கொள்கிறான். அதனால் ஆனந்தன் மூர்த்தியின் குடும்ப நண்பனாகிறான். மூர்த்தி தன் மனைவி அருந்ததியிடம்



-செங்கதிரோன்-

"அடியந்தத் தம்பி எங்கே?
ஆனந்தன் நல்லபிள்ளை!
பிடிவாதமாயும் வந்து
பிறத்தியார்க் குதவுகின்றான்
பொடியனும் ஹோட்டல் சோறு
போய்விட்டான் போலும்! போடும்
நாளைக்கு, இறைச்சி காய்ச்சும்
ஞாயிற்றுக்கிழமைதானே
வேளைக்குச் சொல்லிச் சின்ன
விருந்தொன்று வைப்போம்....."
என்கிறான்.

அதன்படி,
"அடுத்தநாள் விசேடமாக
ஆக்கியவிருந்தை, மூர்த்தி
அடுத்தறை நண்பன் அந்த
ஆனந்தனோடும் பேசி
அடிக்கடி சிரித்தவாறே அருந்தினான்....

"அம்மா போய் வருடமாறு
அதற்குப் பின் இன்றைக்குத்தான்
உம்மாணை உண்மை எங்கள்
ஊர்ச் சாப்பா டுண்டேன்! என்றன்
அம்மாவும் இப்படித்தான்
அருமையாச் சமைப்பாள்!..."

ஆனந்தன் மூர்த்தியின் பக்கத்தூரான். 'இரயில்காட்' வேலை. ஹோட்டல் சாப்பாட்டோடு காலந்தள்ளிய அவனுக்குத் தமது வீட்டிலேயே சாப்பிடுவதற்கு மூர்த்தியும் ஆனந்தியும் வகை செய்கிறார்கள். தொடர்ந்து ஆனந்தனுக்கு மூர்த்தி வீட்டில்தான் சாப்பாடு. கிராமத்துப் பெண்ணான அருந்ததியும் வஞ்சகமில்லாது ஆனந்தனுக்கு உணவு பரிமாறுகிறாள்.

இங்கேதான் காவியத்தின் கதைச்சிக்கல் ஆரம்பமாகிறது.

ஒருநாள் அருந்ததி,
"அடுக்களை புகுந்தாள் ஆங்கே
குப்புறப்படுத்துக் கொண்டே
குறிவைக்கும் எலியைப், பூனை
அப்புறம் போகும் வண்ணம்
அதட்டினாள்...."

அடுக்களையிலிருந்த பூனை அடுத்திருந்த ஆனந்தனின் அறைக்குள் ஓடுகிறது.
"அடுப்பிலே நெருப்புப் பொங்கி
அணைந்தது ; சமையலாக
படுத்திருக்கின்ற ஆனந்
பக்கமாய்ச் சென்று, தண்ணீர்
பிடித்துளேன், குளித்துச் சாப்பிட
டானபின் தூங்கும்..."

என்று அருந்ததி ஆனந்தனுக்குச் சொல்லு கிறாள்.

அருந்ததியின் வீட்டு அறைக்குள் உண வுண்ணப் போன ஆனந்தன்
"..... அறைக்குள் தொங்கும்
கண்ணாடிப்படத்துக்குள் ஓர்
கடபுட சத்தம் கேட்க,
அண்ணார்ந்து பார்த்தான், வெள்ளை
ஆடையில்லாத பல்லி
பெண்ணொன்றை மருவல் கண்டு"
பேசாமற் கதவை அடைக்கிறான்.

கவிஞர் நீலாவணன் அவர்கள் கவிதையிலே காட்டும் **"குப்புறப்படுத்துக்கொண்டே எலியைக் குறிவைக்கும் பூனை", "அடுப்பிலே நெருப்புப்பொங்கி அணைதல்", "ஆடையில்லாத வெள்ளைப்பல்லி பெண்ணொன்றை மருவல்"** ஆகிய காட்சிப் படிமங்களால் வாசகர் மனதிலே ஆனந்தன் - அருந்ததி ஊடாட்டத்தின் மீது சந்தேக நெருப்பை மூட்டுகிறார். அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் வார்த்தைகளில் கூறுவ தானால் இப் படிமங்கள் வாசகனுடைய மனதில் பாலியல் முகிலைப்பரப்பத் தொடங்குகின்றன.

அடுத்தது என்ன என்ற ஆவலுடன் காவியத்தைத் தொடர்ந்து படிக்கையில்,
"அருந்ததி, என்றான் ஆகா
அற்புதம் கறிகள் இன்று
விருந்துதான் படைத்தாய்! உன்கை
வேகுமா நெருப்பில்! என்றான்
திருந்திழை மார்பின் சேலை
திருத்தினாள் திறவா வாயில்
பொருந்தினாள் நகையே! உள்ளம்
பூரித்தாள் புசித்தான்! போனான்!"

"பருப்பினைப் பிசைந்தான் ஆனந்
பசுநெய்யே வடிதல் கண்டான்
இறைச்சிக் கூட்டுள் அகப்பை
இட்டிட்டு ஈரல் தேடி
உருப்படியாக உண்டான்!
ஒண்ணாத மட்டில் விட்டு
அருப்பிடம் அகன்றான் அந்த
அம்புயம் ஆனந்தித்தாள்

எனும் காவிய வரிகளைக் காணுகிறபோது, வாசகனின் மனதிலே மூண்ட சந்தேக நெருப்பு சுவாலைவிட்டு எரிகிறது. ஆனந்தன் - அருந்ததி உறவின்மீது ஒரு பாரிய பாலியல் சந்தேகம் விஸ்வரூபம் எடுக்கிறது. இதற்குக் காரணம் கவிஞர் நீலாவணனின் இரட்டை அர்த்தங்கள் நிறைந்த கவிதைமொழிதான்.

இந்தக் கட்டத்தில் காவியம் இப்படித் தொடர்கிறது.

“மூர்த்தி கந் தோரால் வந்தான்
முகம் கறிச் சட்டியானான்.
ஆத்திரம் கொப்பளிக்க
ஆனந்தன் இந்த வாரம்
ராத்திரி வேலை யாமோ?
பகலெலாம் இருந்தான் போலும்!
நேர்த்திதான் என்று பல்லை
நெறுநெறு சத்தம் செய்தான்”

பின்பு வீட்டில் பெரிய களேபரமே நடக்கிறது.

“என்னிலே பிழைதான்! பேயன்!
இனியவன் இந்த வீட்டில்
உண்ணவும் கால்வைத்தானேல்
ஒரேவெட்டு! கவனம்......”

என்று ஆனந்தனைக் குறித்து ஆத்திரப் படுகிறான். மூர்த்தி மூண்டெழுந்த கோபத்தில்

“தேவடியாளே உன்னைத்
தீர்க்கிறேன் என்றான் நின்றோர்
காவடியாட்டம் போட்டான்”

அருந்ததிக்கு நாலுச் சாத்துச் சாத்தினான். கீழ்சாதி நாயே! என்று திட்டினான்.

“அத்தான் ஏன் என்னை வீணாய்
அடிக்கிறீர்...”

என்று கேட்ட அருந்ததிக்குப்

“பொத்தடி! என்று மூர்த்தி
புறப்பட்டான் கோல்பேசிக்கு”

வீட்டைவிட்டு வெளியேறிக், ‘கோல் பேசி’ற்குச் சென்ற மூர்த்தி இரவு,

“பத்தரை மணிக்கு வந்தான்
பலமான குரலில், இல்லாள்
சத்தத்தை அறிந்து காதைச்
சரியாகப் பிடித்துக் கேட்டான்”

இங்கேதான் காவியக் கதையின் சிக்கல் அவிழ்கிறது. கவிஞர் நீலாவணனின் புனை வாற்றலும் கவிதைமொழியும் இக்காவியத்தில் உச்சம் கொள்கின்ற இடம் இதுதான்.

அருந்ததி - ஆனந்தன் சம்பாஷணையை மூர்த்தி காதுகொடுத்துக் கேட்கிறான்.

“வானந்தான் இடிந்துவந்தென்
வாழ்விலே விழுந்ததின்று!
ஆனந்தா! இந்த வீட்டில்
அடிவைக்க வேண்டாம் ; போய் வா!
ஏனென்ன நடந்த? தென்றான்!
எனக்கொன்றுந் தெரியா தென்றாள்!
மோனத்தில் நிமிடமொன்று
முடிந்தது முறைத்துப் பார்த்தான்”

“போகலாம் வெளியே என்று
பொருமினாள்! செருமிக் கொண்டு
சாகலாம்! நாயே! என்று
சலித்தா வா றுள்ளே வந்த
வேகத்தில், மூர்த்தி காலை
விறாந்தையில் இடறி வீழ்ந்தான்!
போகிறான் ஆனந் ஹோட்டல்
புதுக்கணக் காரம்பிக்க”

மனைவி அருந்ததி மீது கணவன் மூர்த்திக்கு ஏற்பட்ட சந்தேக முடிச்சு தானாகவே அவிழ்கிறது. ஆனந்தனுடனான அருந்ததியின் வஞ்சகமற்ற ஊடாட்டம் உள்ளங்கை நெல்லிக்கனியாகிறது. அருந்ததி **“அருந்ததி”** யாகவே (நட்சத்திரமாகவே) ஜொலிக்கிறாள். முகம் கறிச்சட்டியான மூர்த்தி தெளிவடைகிறான்.

இக்காவியத்தில் நீலாவணனின் படைப் பாளுமை என்னவெனில், தனது புனை வாற்றலாலும் கவிதை மொழியாலும் அருந்ததி - ஆனந்தன் ஊடாட்டத்தின்மீது பாரிய பாலியல் சந்தேகத்தை வாசகரிடத்திலே ஏற்படுத்திய நீலாவணன் - காவியக் கதையிலே சிக்கலை ஏற்படுத்திய நீலாவணன் - மிகவும் நுட்பமாக அருந்ததியையே உண்மைக்கு உண்மையாய்ப் பேச வைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அச்சிக்கலைத் தீர்த்துவைத்துக் காவியத்தை முடிக்கிறார். காவியம் இவ்வாறு முடிகிறது.

“நீலவான் மீதில் நின்ற, நிலவெங்கோ மறைய, விண்மீன்
கோலத்தின் நடுவே, யூன்றிக் குறிப்பாகப் பார்த்தான் மூர்த்தி
பூலோகமெங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை
ஆலாலமுண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள். வாழ்க”

இக்காவியத்தின் மகுடம் இதன் **“வடமீன்”** எனும் தலைப்புத்தான்.

◆ ◆ ◆

“நீலாவணன் காவியங்கள்” நூலுக்கு முன்னுரை எழுதிய (அமரர்) சண்முகம் சிவலிங்கம் அவர்கள்,

"அருந்ததி என்ற பெயரில் சப்தரிஷி மண்டலத்தில் ஒரு நட்சத்திரம் உண்டு என்பதை நான் அறிவேன். அது அரிதாகவே தெரிவதால் கற்புடைய பெண்ணுக்கு அதனை ஒப்பீடு செய்யும் ஐதீகத்தையும் அறிவேன். கலியாணங்களின்போது அம்மி மிதித்து அருந்ததி காட்டும் சடங்கு பற்றியும் அறிவேன். கலியாணப் பெண் அருந்ததிபோல் கற்புள்ள பெண்ணாய் வாழவேண்டும் என்ற குறிப்பு அந்தச் சடங்கில் உள்ளதையும் அறிவேன். இவ்வாறு பௌராணிகத்தில் கற்பின் தேவதையாக அருந்ததி நட்சத்திரம் காட்சி தருவதும் அறிவேன்.

எனினும் அருந்ததி நட்சத்திரத்துக்கு **"வடமீன்"** என்றும் ஒரு பெயர் உண்டு என்பதை உன் காவியத்திலிருந்துதான் அறிந்தேன். அருந்ததி என்ற பெயருடைய அந்தப் பெண்ணிலிருந்து அருந்ததி நட்சத்திரத்தைப் பிரித்துக் காட்ட "வடமீன்" என்ற பெயரைப் பாவித்த உன் நுட்பம் எனக்கொரு நூதனம்! அதுமட்டுமல்ல காவியத்தின் கடைசிப் பாடலில் அருந்ததி நட்சத்திரத்தை **"வடமீன் நங்கை"** என்று உருவேற்றி இருப்பது உன்னால் தமிழுக்குக் கிடைத்த ஓர் அன்பளிப்பு. அதுமட்டுமல்ல. **"பூலோகம் எங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை"** என்ற அடி அருந்ததி நட்சத்திரத்துக்கு தமிழில் கிடைத்த மிக அழகிய கவித்துவப் புகழ் மொழியும் ஆகிறது.

இந்தப் பீடிகைகளோடு உன் "வடமீன்" காவியத்தின் கதைச்சிக்கலை உன் கடைசி வரியிலே அவிழ்க்கும் உன் புனைவு நுட்பத்தை மட்டுமன்றி கதையின் சிக்கல் தீரும்போது கதையும் முடிகிறது என்பதைக் காட்ட வருகிறேன். கற்பின் திறமும் தெய்வீகமும் உடைய வடமீன் நங்கை **"ஆலாலம் உண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள்"**, அந்நியனின் படுக்கையில் அல்ல என ஈடில்லா முறையில் நீ இணைத்த அந்த வரிகளில் மூர்த்தியின் தெளிவு வாசகனின் தெளிவுபோல முற்றுப்பெறுகிறது.

வாசகனுக்கு இந்தத் தெளிவு தோன்றும் போது அந்த அருந்ததி என்ற பாத்திரம் புதிய அர்த்தம் கொள்கிறாள். அனாதை, ஒரு மாப்பிள்ளையை யாசித்துக் கொக்குப்போல வாடிக்கொண்டு நின்றவன், கணவனுடன் கொழும்பின் பட்டின வாழ்வையும் கொஞ்சம் பழகிக் கொண்டவள். பல்லினை இழுத்து மூடும் பவ்வியம் பெற்றுக்கொண்டவள். கதையின் முடிவில் பெண்ணியத்தின் அனுதாபம் பெறும் பெரும் பெண்ணாகிறாள். அந்தவகையில் நீ பெண்ணியத்தார் கவனம் கொள்ளவேண்டிய ஒரு பெரும் படைப்பாளியுமாகிறாய். உன் கடைசிப்பாடலை அதன் கவர்ச்சிக்காக மீண்டும் ஒருமுறை மேய்கிறேன்" என்று நீலாவணனைச் சிலாகிக்கிறார்.

"நீலவான் மீதில் நின்ற, நிலவெங்கோ மறைய, விண்மீன் கோலத்தின் நடுவே, யூன்றிக் குறிப்பாகப் பார்த்தான் மூர்த்தி பூலோகமெங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை ஆலாலமுண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள். வாழ்க"

◆ ◆ ◆

'சிலப்பதிகாரம்' காப்பியம் இயற்றிய இளங்கோவடிகள் காப்பியத்தின் முதல் காதையான அறுபத்தியெட்டு வரிகளைக் கொண்ட மங்கலவாழ்த்துப் பாடலின் இருபத்தியேழாவது வரியிலே,

"தீதிலா வடமீனின் திறம் இலந்திறம்" என்று கண்ணகியை ஏத்துகிறார்.

"வடமீன்" வடமொழி வைதீக மரபில் செல்வாக்கு மிகுந்ததொரு தொன்மம். பெண்ணை உயர்வு செய்யும் ஒரு தொன்மம் எனத் தி.சு.நடராசன் (தமிழ்நாடு) தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் மரபில் அதனை 'அருந்ததி' என்கிறோம். விண்ணுலகப் பொருளொன்றினை கற்புடைப் பெண்டிருக்குக் - கண்ணகிக்கு - உவமையாக்கும்போது அல்லது உருவகப் படுத்தும்போது (வடமீன் நங்கை) கற்புடைப் பெண்டிரை வானுறையும் தெய்வத்துள் வைத்துப் பார்க்கும் - பெண்ணைப் போற்றும் - தமிழர் தம் பண்பாடும் துலாம்பரமாகிறது.

'வடமீன்' காவியத்தின் தலைவிக்கு அருந்ததியெனும் பெயரைக் கொடுத்து அருந்ததியைக் கவிஞர் நீலாவணன் காவியத்தின் கடைசிப் பாடலிலே 'வடமீன் நங்கை'யாக அர்த்தப்படுத்தும்போது 'சிலப்பதிகாரம்' செய்த இளங்கோவடிகளின் புனைவாற்றலும் கவித்திறமும் சொல்லாட்சியும் கவிஞர் நீலாவணனிலும் ஊடுபாய்கிறது.

○○○

சோ.ப வின் மொழிபெயர்ப்பு நூலான “Heaven with Hell” பற்றியதொரு பார்வை

Heaven with Hell

‘நரகொடு சொர்க்கம்’ என்பது தமிழ் நாடகப் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் கோரிக்கைக்கு ஏற்ப எழுதப்பட்டு, அங்கு 1999இல் மேடையேற்றப்பட்ட நாடகம். இந்த எழுத்துரு தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அதன் ஆங்கில வடிவம் “Heaven with Hell” என்ற நூலாகச் சோ.ப வின் மொழி பெயர்ப்பில் வெளிவந்திருக்கிறது.

ஸ்கொட், டொச், ஜேர்மன் போன்றவை ஓரளவு ஆங்கிலத்தோடு கட்டமைப்பு ஒற்றுமை கொண்ட சில மொழிகள். தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை தமிழுடன் வாக்கிய அமைப்பில் (Syntax) ஒற்றுமை கொண்ட மொழிகளில் சில. ஆங்கிலத்தையும் தமிழையும் எடுத்து நோக்கினால் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவை தமிழில் அமையும் ஒழுங்கும் ஆங்கிலத்தில் அமையும் ஒழுங்கும் மிகமிக வேறுபடுவது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் எளிமையான சில பந்திகள்கூட கணினி மூலம் மொழி மாற்றம் செய்யப்படும்போது, “ஆங்கிலம் - தமிழ்” இடையிலான மாற்றம் பெருமளவு சரிவருவதில்லை.

அதை விடவும் ஒரு மொழியில் காலம் காலமாகப் பாவிக்கப்பட்டுவரும் மரபுத் தொடர்கள் நீதிமொழிகள், பழமொழிகள், மூதுரைகள், வழக்கில் இருக்கும் சொற்கூட்டங்கள் போன்றவை அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களால் ரசிக்கப்படுமளவு - புரிந்து கொள்ளப்படுமளவுக்கு இன்னொரு கலாசாரத்துக்கும் இன்னொரு மொழிக்கும் கடத்துவது இலகுவானதில்லை. மிகப் பழமை வாய்ந்த மொழியான தமிழின் தொன்மங்கள் ஊடு சொல்லப்படும் செய்திகளை மொழி பெயர்க்கும்போது அடிக் குறிப்பிடுவதாயினும் மிகப் பெரிய விளக்கம் சொல்ல நேரும். இன்னும் ஒரு படி மேலே பார்த்தால் குழந்தை ம.சண்முகலிங்கம் போன்ற கலைத்துவம் மிகுந்த படைப்பாளிகள் மொழியோடு நிறையவே விளையாடக் கூடியவர்கள். அவர்களின் படைப்பு மொழிக்கு இடையேயும் மேலேயும் கீழேயும் பல விடயங்கள் ஓடிவரும் அல்லது மறைந்து நின்று சங்கதி சொல்லும்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடக எழுத்துருக்களை வாசிக்கும்போதே சில பல விடயங்கள் ரசிக்கும். அதை அவரே நெறியாள்கை செய்து மேடையேற்றும்போது “ஓகோ… இப்படியும் இதற்கு ஒரு விளக்கமா?” என்று மேலும் சில விடயங்களைப் புரிந்து கொண்டு மனம் அதிசயிக்கும். ‘இதை இப்படி அழகாகச் சொல்ல முடியுமா, என்ன?’ என்று மூளை வியக்கும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எல்லோரும் அவரது படைப்புக்களை முழுமையாக விளங்கி ரசிப்பர் என்பதும் இல்லை. அவரவர் அறிவு, அநுபவம், உலகம் பற்றிய பார்வை, கலையார்வம், நுண்மதி, நாடகமும் அரங்கியலும் சார்ந்த பரிசயம் போன்ற பல விடயங்கள் அந்த ரசனை முழுமை பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும்.

இன்னொரு வகையில் சொல்லப் போனால் ரசிகரும் ஒரு கலைஞராக இருப்பது சிறந்தது எனலாம். அந்த வகையில் ஒரு தேர்ந்த ரசிகராக முதலில் இருந்தே அவரால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட விமர்சகராக இருப்பவர் கவிஞர் சோ.ப என்பதை இந்தச் சூழலில் வாழும் நாடக ஆர்வலர் அறிவர்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடக எழுத்துருக்களை மொழிபெயர்க்க எவரும் தயங்கும் நிலைமை இருக்கையில் அதைத் துணிந்து, நம்பிக்கையுடன் தொடர்ந்து செய்து வருபவர் சோ.ப என்பதும் மனங்

கோகிலா மகேந்திரன்

கொள்ளத்தக்கது. அந்த வகையில் இப்பொழுது “Heaven with Hell” வந்திருக்கிறது.

“முன்திரை மூடிக்கிடக்கிறது. இரண்டாகப் பிரிந்து மெல்ல ஒதுங்கி இருபக்கத்தேயும் சுருங்கிக் கொள்ள இன்னமும் அதற்கு மனம் வரவில்லை. வேளை வரவில்லை.” என்று நாடகம் தொடங்கும் முன்னரான “நெறியாளர் எழுத்துருவில்” அவர் எழுதுகிறார். இது திரைக்கு மட்டுந்தானா? திரை சடப்பொருள்! இவர் சொல்வது வயோதிபருக்குப் பொருத்தமா? கூட்டுக்குடும்பத்திற்கும் இதற்கும் தொடர்புண்டா? மூத்த சந்ததிக்கும் இளைய சந்ததிக்குமான உறவு எங்கோ ஞாபகம் வருகிறதா?

“It is unwilling to part in the middle and move both ways” என்று சோ.ப கூறுகிறார்.

நாடகம் தொடங்கி ஒரு சில நிமிடங்களுக்குள் ஒலிக்கும் “ஐயே, மெத்தக்கடினம். உமதடிமை..” என்ற இசை நாடகப்பாடல், என்ன எண்ணத்தைப் பார்வையாளர் மனதில் தூண்டும்?

“Lord, Your service is really hard” என்று சோ.ப மொழி பெயர்க்கிறார். தொடர்ந்து வரும் ஒரு வரி “பாருமே.. கட்டிக்காருமே.. உள்ள சேருமே அது பூருமே..” இதை எப்படித்தான் மொழி பெயர்த்தாலும் இந்த அழகும் வராது. கருத்தும் வராது. அந்த இடங்களில் மொழி பெயர்ப்பாளர்கள் விட்டு விட்டு, நாடகத்தின் தொடர்ச்சியில் கவனம் செலுத்துவார்கள்.

“அம்மாளாச்சி தேர், கோபுரம்” போன்ற சொற்களை அப்படியே ஆங்கிலத்தில் எழுதிவிட்டு இலக்கமிட்டு அடிக்குறிப்பிடுகிறார். ராசா, மாமா, மாமி போன்ற விளிப்புச் சொற்களை அப்படியே ஒலிப்பெயர்ப்பு உதவியுடன் ஆங்கிலத்தில் போடுகிறார். கிளாக்கரும் கிளாக்கர் மாமியும் தாம் வெளிநாடு செல்ல உதவும்படி மகனைக் கெஞ்சும்போது ராசா, குஞ்சு, மோனை போன்ற சொற்களை அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

“குஞ்செல்லே!” என்பதை “My darling” என்று ஆங்கிலக் கலாசாரப் பின்னணியில் மொழி பெயர்க்கிறார் சோ.ப.

“பல்லி சொன்னது போலை சொல்லுங்கோ” என்று கிளாக்கர் மாமி கோப்பபடுவதாக ஒரு இடம் வரும். “Like a gecko predicting the worst” என்று மொழிபெயர்ப்பு வருகிறது. எமது வழக்கில் பல்லி நல்லதுக்கும் சொல்லும். ‘உச்சத்துப் பல்லிக்கு அச்சமில்லை’ என்பார்கள். கெடுதிக்கும் சொல்லும். அது கேட்பாரின் அப்போதைய மனநிலையைப் பொறுத்தது. பஞ்சாங்கத்தில் உள்ள பல்லிசொற் பலனில் நன்மையும் உண்டு, தீயபலனும் உண்டு. சமபலனும் உண்டு. விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் பல்லி தனது தேவைக்கு அழுவதைப் பலனோடு ஒப்பிடுவது மூடநம்பிக்கை. இதை எல்லாம் அடிக்குறிப்பில் எழுத முடியுமா, என்ன? இது போன்ற இடங்கள்தான் கலாசார வேறுபாடு உடைய மொழிகளுக்கிடையில் மொழி பெயர்ப்புச் செய்வதில் உள்ள சிக்கல்.

பல இடங்களில் சோ.ப அவர்கள் தமிழில் சொல்லப்படுவதன் உள்ளர்த்தத்தை மட்டும் கவனித்தும் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்காமல் அதே விடயத்தை ஆங்கிலேயர் எப்படிச் சொல்வார்களோ அப்படிப் போடுகிறார். உதாரணமாக, ‘கவலைப்பட்டு வருத்தக்காரராய்ப் போனீங்களெண்டால் உங்களுக்குத் தான் கஷ்டம்…’ என்று கவிதா பாத்திரம் கூறுவதை, “If you fret and fume, you will fall sick. Then it will be a bigger problem” என்று கூறுவார். கிளாக்கர், “மனம் கேக்குதில்லை” என்று சொல்வதை, “The mind is always back to square one” என்று எழுதுவார். இது போன்ற பல இடங்கள் ரசித்துப் பாராட்டக்கூடியவை. “Let him beg, borrow or steal”, “Bloody cur..” போன்ற வேறு பல இடங்களில் இத்தகு மொழிபெயர்ப்பினைக் கண்டு மகிழலாம்.

“தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்பது எமக்குத் தெரிந்த வசனம்தான். ஆயினும் அதைப் பிரயோகத்தில் கொண்டு வருவது கடினம். உறங்கி எழுவதற்கு ஒரு அமைதியான இடம் என்பது மனிதரின் அடிப்படைத் தேவை. “வீட்டை மோட்சமாகவும் ஆக்கலாம். நரகமாகவும் ஆக்கலாம்” என்று வைகுந்தநாதன் என்ற பாத்திரத்தினூடு குழந்தை அவர்கள் சொல்லும் செய்தியே நாடகத்தின் கருப்பொருள் எனலாம். தனது கருத்துக்களை வைகுந்தநாதன் பாத்திரத்தினூடு உறுதியாகவும் தெளிவாகவும் முன்வைக்கும் நாடகாசிரியர் இன்னோர் இடத்தில் “மனந்தான் வெறிச்சோடிப் போச்சு – மனமே சொர்க்கம், மனமே நரகம்” என்கிறார். அதுவும் சரிதான்.

முதியோரைப் பொறுத்தவரை தாமும் தம்பாடும் என்று தமது வீட்டிலே, தமது நாட்டிலே சுதந்திரமாக வாழ்வது சொர்க்கம். பிள்ளைகளைப் பிரிந்து தனியே வாழ்வது நரகம். வெளிநாட்டுக்குப் பிள்ளைகளோடு போய்விட்டால், பேரப்பிள்ளைகள் அருகிலிருப்பது சொர்க்கம். அந்நிய கலாசாரமும்,

சுதந்திரமின்மையும், அறை ஒன்றில் அல்லது முதியோர் இல்லத்தில் அடைபட்ட வாழ்வும் அந்நியர் இவர்களை மிகக் குறைவாக நோக்குவதும் நரகம். இவ்விடயத்தைப் பலர் - புலம்பெயர்வின் பின் பல விதமாகப் பல்வேறு பட்ட இலக்கிய வடிவங்களினூடு சொல்லி வருகிறார்கள். ஆயினும் ம.சண்முகலிங்கம் அவர்கள் அதைச் சொல்லும் முறை தனி அழகு.

“சிறுகக் கட்டிப் பெருக வாழ்தல்” என்பது வீடு பற்றிய தமிழர் கோட்பாடு. தாம் பிறந்து, வளர்ந்த வீட்டிலிருந்து பிடுங்கி வீசப்படுவது தாங்க முடியாத துன்பம். போரால் இளந்தலை முறை வீட்டை விட்டு, நாட்டை விட்டு ஓட, அவ்வாறு ஓட முடியாது, தாம் பாடுபட்டுக் கட்டிய வீட்டைத் துறக்க முடியாது - துன்ப துயரங்களைச் சகித்துக் கொள்ளும் மனிதர்களின் கதை “நரகொடு சொர்க்கம்” முதியவர்கள் தனித்தீவுகளாக வாழாது ஒன்று சேர்ந்து இயங்கி, சமூகம் பயனுற வாழலாம் என்பது நாடகாசிரியர் சொல்லும் கடைசிச் செய்தி / தீர்வு?

தமிழ் மூலத்தைப் பார்க்காது ஆங்கில நூலைத் தனியாக வாசித்த முடிகிறபோது இந்தக் கருப் பொருள் தொடர்ச்சி கெடாது வந்திருப்பது மொழி பெயர்ப்பாளரின் வெற்றி எனலாம்.

ஜேம்ஸ் தொம்சன் அவர்கள் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பிரயோக அரங்கியலின் பேராசிரியர். 2000ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் எமது பிரதேசங்களில் அவர் நடத்திய மிகச் சிறப்பான பிரயோக அரங்கியல் தொடர்பான பட்டறை மிகப்பிரசித்தமானது. நாடக ஆர்வலர்களான நாங்கள் அனைவரும் கலந்து கொண்ட, பல நாள்கள் நடைபெற்ற அப்பட்டறையின் மொழி பெயர்ப்பாளராக இயங்கியவர் சோ.ப அவர்கள். இந்த நூலுக்கான தனது முன்னுரையில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுடனான தனது ஊடாட்டம் தொடர்பாகவும் குறிப்பிடும் தொம்சன் இந்த மொழி பெயர்ப்பை “Expert translation” என்கிறார். இவர்கள் இருவருடனுமான தனது அந்தக் கால உரையாடல்களை மிக நன்றாகவே நினைவில் வைத்திருக்கும் தொம்சன் இந்த நூலை ஆங்கிலத்தில் மட்டுமே வாசித்து முன்னுரை எழுதியுள்ளார் என்பதை நாம் நினைவில் கொள்ளலாம்.

“வீடும் போச்சு, வெளியும் போச்சு, வயலும் போச்சு, வாய்க்காலும் போச்சு, ஊரும் போச்சு, உறவும் போச்சு..” என்று நாடகாசிரியர் சொல்வது இன்றைய திகதிவரை பொருந்தி வருகின்ற மொத்த இலங்கைத் தமிழினத்தின் இழவிரக்கக் கூற்று. அவரது மொழியில் மோனையும் மண் வாசனையும் நிறைந்து வருகின்றது.

“முன்னைத் தவமிருந்த தாய்நிலம். மூண்டாவது சந்ததிக்கு அந்நிய தேசம்;அவலம் தான்” என்ற அவரது நிமித்தக் கூற்று... இன்னும் இன்னும் அவலம் நோக்கிய பாதையில் நாடு போவதற்கான சமிக்ஞைகளே தென்படுகின்றன.

ம.சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்ற கி.மு. காலத்தை (கிளாலிப் பயணத்தின் முன்) மொழி பெயர்த்து விளக்க வேண்டுமெனில் தமிழர் சரித்திரம் தொடர்பான ஒரு நூலே எழுத நேரும்.

சோ.ப அவர்கள், மொழிபெயர்ப்பாளர் குறிப்பில் தானே குறிப்பிடுவது போல, மிகக் கடினமான இந்தப் பணியைத் தனது எண்பதாவது வயதுக்கு மேல் நிறைவு செய்திருக்கிறார் என்பது தமிழ் மக்கள் ‘நன்றி’ சொல்ல வேண்டிய விடயம் என்றே நான் கருதுகிறேன்.

‘சிதம்பரம் போகாமல் இருப்பேனோ – இந்தச்
ஜென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ..’

என்ற ‘நந்தனார்’ இசை நாடகப் பாடல் இந்த நாடகத்தில் ஒலிக்கும் ‘சிதம்பரம்’ என்பது அந்தப் பாத்திரங்களைப் பொறுத்தவரை ஏதோ ஒரு வெளிநாடு என்று கொள்ளலாம். ‘சிதம்பரம்’ எமது திருக்கோயில்களில் முதலாவது இடத்தில் வரும் சிறப்புடையது. வாழ்வில் ஒரு முறையாவது ‘சிதம்பரம்’ போகவேண்டும் என்று நந்தனார் மட்டுமில்லை, சைவர்கள் பலரும் விரும்புவதுண்டு. அப்படிப் போகாவிட்டால், இந்த ‘ஜென்மம் வீண்’ என்று கொள்ளலாம் என்று கருதுவர்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களும் சோ.ப அவர்களும் சமுதாயத்திற்குத் தாம் விட்டுச் செல்லும் ‘இலக்கிய எச்சங்கள்’ மூலம் தமது சென்மத்தைப் பயனுள்ளது என்பதை எப்போதோ நிறுவிவிட்டார்கள்.

அவர்கள் இடையில் “துப்பல் சொல்லிப் போட்டு விட்ட...” (நாடகத்தில் வரும் சொற்கூட்டம்) விடயங்களை இன்னும் செய்து முடிக்கும் மன உறுதி கொண்டவர்கள்.

இந்த நாடகத்தை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மேடையேற்றும் நாளை எதிர்பார்க்கிறேன் என்று தொம்சன் கூறுவதை நாமும் வழி மொழியலாம்.

○○○

எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

ஒரு பொன்னான செல்வம்

தமிழ்த் திரையுலகம் பல மசாலாக்களை உருவாக்கியுள்ளபோதிலும், அவ்வப்போது புதிய புதிய பரிமாணங்களையும் அது பெற்று வந்துள்ளது. அவ்வகையில், மணிரத்னத்தின் பொன்னியின் செல்வன் இரண்டு பாகங்களும் தமிழ்த்திரையுலகுக்கான புதிய பரிமாணங்களாக விளங்குகின்றன. பொன்னியின் செல்வன்-1 பற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன். அதன் இரண்டாம் பாகமும் குறிப்பிடத்தக்கவகையில் திரை வடிவம் பெற்றுள்ளது.

பொன்னியின் செல்வன் இரண்டு பாகங்களும் சர்வதேச தரத்தில் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. மணிரத்னத்தின் முழு ஆளுமையையும் இவை நன்கு வெளிப்படுத்திநிற்கின்றன. "செயற்கரிய செய்வார்" என்பதை அவர் தாராளமாக நிரூபித்துள்ளார். கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலிலும், நாவலாசிரியருக்கு உரிய புனைவுகள் தாராளமாகப் புகுத்தப்பட்டுள்ளன. மணிரத்னமும், ஓர் இயக்குநருக்குரிய சுதந்திரத்தைத் தம்மளவில் பயன்படுத்தியுள்ளார். மணிரத்னம், பொன்னியின் செல்வன் இரண்டு பாகங்களிலும் திரைப்படத் தரத்தைப் பேணியுள்ளார்.

பொன்னியின் செல்வன் 2 இலும் நடிக, நடிகைகள் போட்டிபோட்டுக்கொண்டு தமது திறமைகளை நன்கு வெளிப்படுத்தியுள்ளனர். ஜெயம்ரவி (அருள்மொழிவர்மன்), கார்த்தி (வந்தியத்தேவன்), விக்ரம் (ஆதித்ய கரிகாலன்), பிரகாஷ்ராஜ் (சுந்தரசோழன்), சரத்குமார் (பெரிய பழுவேட்டரையர்), பார்த்திபன் (சின்ன பழுவேட்டரையர்), பிரபு (பெரிய வெள்ளார் பூதி விக்கிரமகேசரி), விக்ரம் பிரபு (பார்த்திபேந்திர பல்லவன்), ஜெயராம் (ஆழ்வார்க்கடியான் நம்பி), ஐஸ்வர்யா ராய் (நந்தினி, மந்தாகினி), திரிஷா கிருஷ்ணன்(குந்தவை), ஐஸ்வர்யா லக்ஷ்மி (பூங்குழலி), சோபிதா (வானதி), ஜெயசித்ரா (செம்பியன் மாதேவி), வித்யா (வானவன் மாதேவி), சாரா அர்ஜுன் (இளம் நந்தினி), வினோதினி (வாசுகி) என ஒரு நட்சத்திரப் பட்டாளமே இப்படத்தில் இடம்பெற்றுள்ளது. பெண் பாத்திரங்களைப் பொறுத்தவரை, ஐஸ்வர்யா ராய், திரிஷா, ஜெயச்சித்ரா, சாரா அர்ஜுன் போன்றோருக்கே நடிப்பதற்கு அதிக வாய்ப்பு கிடைத்துள்ளது.

பொன்னியின் செல்வனைப் பார்த்தபோது, இயல்பாகவே சிவாஜிகணேசன் நடித்த ராஜராஜசோழன் திரைப்படமும் ஞாபகத்துக்கு வந்தது. அத்திரைப்படத்தில் ராஜராஜசோழனாகப் பாத்திரமேற்று நடித்த சிவாஜிகணேசனின் கம்பீரமும், நடிப்பும் ராஜராஜசோழன் பற்றிய ஒரு படிமத்தை ரசிகர் மனத்தில் ஏற்படுத்தியிருந்தது. அதே பாத்திரம் ஏற்றிருந்த ஜெயம்ரவியிடம் அதனைக் காணமுடியவில்லை. வேண்டுமானால், சிவாஜி ஏற்றிருந்த பாத்திரம், மாமன்னன் ராஜராஜசோழனுக்குரியது. ஜெயம்ரவி ஏற்றிருந்த பாத்திரம் இளவரசன் அருள்மொழிவர்மனுக்கு (பிற்கால ராஜராஜசோழன்) உரியது. ஆகவே, மாமன்னனிடம் காணப்படக்கூடிய கம்பீரத்தை இளவரசனிடம் எதிர்பார்க்கத் தேவையில்லையே என்று சமாதானம் கூற முற்படலாம். ஆனால், "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதை, நாம் மறந்துவிட முடியாதல்லவா?

சிவாஜியின் ராஜராஜசோழன் பலவகையிலும் சிறந்த படம். ஆனால், அப்படத்தை முன்னர் நான் பார்த்தபோது, அப்படத்தின் கதையமைப்புத் தொடர்பாக எனக்கு ஒரு மனக்குறை இருந்தது. அப்படத்தின் கதையமைப்பை ஒரு குடும்பக்கதையாக அமைத்துவிட்டார்கள் என்பதே என் மனக் குறையாக இருந்தது. பின்னர், பல ஆண்டுகளின் பின்னர், சிவாஜிகணேசன் பற்றி வெளிவந்த ஒரு சிறந்த நூலைப் பார்க்கக் கிடைத்தது. அந்நூலில், சிவாஜிகணேசன் ராஜராஜசோழன் திரைப்படம் பற்றித் தெரிவித்த கருத்து, எனக்கு ஆச்சரியத்தையும், மனநிறைவையும் ஏற்படுத்தியது. அப்படம் பற்றி என் மனத்தில் இருந்த அதே கருத்தையே சிவாஜிகணேசனும் வெளிப்படுத்தியிருந்தார். ராஜராஜசோழன் படம் ஒரு குடும்பக்கதையாகவே அமைந்துவிட்டது

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

என்று அவர் தெரிவித்திருந்தார். ஏ.பி. நாகராஜன் பல சிறந்த படங்களை இயக்கிய சிறந்த இயக்குநர். அவர் இயக்கிய படங்களில் உச்சமாக நான் கருதுவது, தில்லானா மோகனாம்பாள். வெளிநாட்டார் யாராவது சிறந்த தமிழ்ப்படம் ஒன்றைப் பார்க்க விரும்பினால், தில்லானா மோகனாம்பாளைக் காட்டுமாறு எம்.ஜி.ஆரே கூறியிருக்கிறார். அத்தகைய திறமைசாலியான ஏ.பி. நாகராஜன் ராஜராஜசோழன் திரைக்கதையில் கோட்டை விட்டுவிட்டார். அதே படத்தை பி.ஆர். பந்துலு இயக்கியிருந்தால், இன்னும் அதியற்புதமாக அப்படம் அமைந்திருக்கும் என்பது, எனது தனிப்பட்ட கருத்து.

பொன்னியின் செல்வன் திரைப்படத்தில், எழுத்தாளர் ஜெயமோகனின் வசனங்கள் பொருத்தமாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளன. வழமையாகத் தான்தோன்றித்தனமாக இசையமைத்துப் பழகிவிட்ட ஏ.ஆர். ரஹ்மான், பொன்னியின் செல்வன் 2 இலும் இயக்குநரின் தேவைக்கேற்பப் புதிய அக்கறையோடு இசையமைத்துள்ளார். ஆனால், பொன்னியின் செல்வன் 1 இலும், 2 இலும் பாடகிகள் என்ன பாடுகிறார்கள் என்பதை அறியக் காதுகளை அதிகம் கூர்மையாக்கவேண்டியுள்ளது.

மொத்தத்தில், பொன்னியின் செல்வன் இரண்டு பாகங்கள் தொடர்பாகவும் தயாரிப்பாளர், இயக்குநர், கலைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் அத்தனை பேரும் ரசிகர்களின் பாராட்டுக்கு உரியவர்கள். பொன்னியின் செல்வன், தமிழ்த் திரையுலகின் ஒரு பொன்னான செல்வம்.

நல்ல ஒரு கலை அனுபவம்

அண்மையில், எனக்கு ஒரு நல்ல கலை அனுபவம் ஏற்பட்டது. கண்டி திரித்துவக் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தின் 104 ஆவது முத்தமிழ் விழா, கல்லூரி மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. அக்கல்லூரியின் அதிபர் அருட்தந்தை அரலிய ஜயசுந்தர தலைமையில் நடைபெற்ற அவ்விழாவின் பிரதம விருந்தினராக மனமகிழ்ச்சியுடன் நான் கலந்துகொண்டேன். அவ்விழாவில் திரித்துவோதயம் என்ற வருடாந்த மலரும் வெளியிட்டுவைக்கப்பட்டது. அம்மன்றத்தின் பொறுப்பாசிரியையாக எனது மாணவி திருமதி சர்மிளாதேவி துரைசிங்கம் திறம்படச் செயலாற்றிவருகிறார்.

இக்கல்லூரியின் முத்தமிழ் விழாவினைச் சிறப்புற அமைப்பதில், கல்லூரி அதிபர், உப அதிபர் கிறிஷாந்தன்அந்தனிதாஸ், இணை அதிபர் ஆனந்த மாரசிங்க, அருட்தந்தை ஷெல்டன் சமாதானம், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிமானிகள் ஆகியோரோடு, கல்லூரியின் பழைய மாணவர்களும் பெரும் பங்காற்றியிருந்தனர்.

கல்லூரி மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் என்னை மிகவும் கவர்ந்தன. மாணவர்களது இசையாற்றல், நடன ஆற்றல் என்பன சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டன. நிகழ்ச்சியில் இடம்பெற்ற வீணை இசையும் மனத்தை வெகுவாகக் கவர்ந்தது. ஆசிரியர் ஒருவரும், ஆசிரியை ஒருவரும் இணைந்து, பாரதிதாசனின் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற பாடலை மிகச் சிறப்பாகப் பாடினார்கள்.

ஒரு பரீட்சார்த்த முயற்சியாகப் பேராசிரியர் சி. மௌனகுருவின் இராவணேசன் கூத்தின் ஒரு பகுதியை மாணவர்கள் தம் சுய திறமையோடு நடித்துக்காட்டினர். தாளக்கட்டுத் தவறாமல், தமது நடிப்பாற்றலை அவர்கள் வெளிப்படுத்தினர். அவர்களுக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களும் பாராட்டுக்கு உரியவர்கள்.

இவ்விழாவில் இன்னொரு சிறப்பையும் நான் அவதானித்தேன். பொதுவாக இருமொழி கலந்த பல பாடசாலைகளில், இத்தகைய தமிழ் விழாக்களில் சிங்கள மாணவர்கள் கலந்துகொள்ளும்போது, பொதுவாகத் தமிழில் சில பாடல்களைப் பாடுவதோடு, ஆக மிஞ்சினால் தமிழ் இசைக்கேற்ப ஒரு நடனம் ஆடுவதோடு திருப்தி அடைந்துவிடுவர். ஆனால், இம்முத்தமிழ் விழாவில், சிங்கள மாணவர்கள் ஒரு தமிழ் நாடகத்தையே நடித்துக்காட்டினார்கள். அதுவும், அந்நாடகத்தில் பெண் பாத்திரங்களை ஏற்றிருந்த மாணவர்கள், அசல் பெண்கள் போலவே தோற்றமளித்தனர். அந்தளவுக்கு, ஒப்பனை அதி சிறப்பாக இருந்தது!

கண்டி திரித்துவக் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தின் 104ஆவது முத்தமிழ் விழா, என்னை மிகவும் கவர்ந்தது. சிறந்த கலை அனுபவத்தை எனக்கு நல்கியது. கலை ஆர்வம் மிகுந்த அக்கல்லூரிச் சமூகத்தைப் பாராட்டியே ஆகவேண்டும்.

○○○

டொக்டர் முருகானந்தனின் அனுபவப் பகிர்வு: "டாக்டரின் தொணதொணப்பு"

டாக்டரின்
தொணதொணப்பு

ஸ்ரீரஞ்சனி

டொக்டர் முருகானந்தன் அவர்களின் அனுபவப் பகிர்வுக்கு, 'டாக்டரின் தொண தொணப்பு' என்ற தலைப்பு மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பென நான் நினைக்கிறேன். நோய்களுக்குரிய மருந்துகளை மருத்துவர்களின் பரிந்துரைப்பின்படி எடுக்காமல், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல செயற்பட்டுவிட்டு, நோயின் தாக்கம் கடுமையான பின்னர் அதுபற்றி வருந்துபவர்களைப் பற்றி மனதுக்குள் தொணதொணப்பதைத் தவிர வேறு எதைத்தான் மருத்துவர்களால் செய்யமுடியும்?

தொணதொணப்பு என்ற சொல் என் சொல்லகராதியில் இருந்து மறைந்து போயிருக்கிறதே, இப்படி எத்தனை சொற்கள் போய்விட்டனவோ என்றொரு வருத்தம் எனக்குள் ஏற்பட்டிருந்தாலும், மீளவும் நான் யாழ்ப்பாணத்தில் இருப்பதைப் போன்றதொரு சந்தோஷமான உணர்வை 'டாக்டரின் தொணதொணப்பு' எனக்குத் தந்தது. எங்களின் சில நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் எங்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை இனம்காண்பதற்கும், அவற்றி லிருந்து நாங்கள் விடுபடுவதற்குரிய வழிகளைத் தேடுவதற்குமான ஒரு கையேடாகவும் இதனைக் கருதலாமென நான் நினைக்கிறேன்.

மேலும், டொக்டர் முருகானந்தன் அவர்கள் ஓர் இலக்கியவாதியாகவும் இருப்பதால் இந்தப் பகிர்வுகளில் இலக்கியச் சுவையும் நிறையவே ததும்புவதைப் பார்க்கலாம். குறிப்பாக 'நான் அப்படியான பொம்பிழை எண்டால்' என்ற பதிவு ஒரு சிறுகதை போலவேயிருக்கிறது. 'நிறம் மாறும் போஸ்டர்களாக அவள் முகம்' போன்ற சில தலைப்புக்கள் கவித்துவமாக இருக்கின்றன. அத்துடன் நோயாளர்களின் உடல்மொழிகள் மற்றும் கூற்றுக்கள் ஊடாக அவர்களின் மனங்களையும் டொக்டர் ஆராய்வது வாசிப்புக்கு ரசனையூட்டுகிறது. உதாரணத்துக்கு, 'வெளிநாட்டு மாப்பிளையின் ஊர்ப் பொம்புளை' என்ற பதிவில் இடம்பெற்றிருக்கும் பின்வரும் உரையாடல்களையும் சிந்தனை ஓட்டங்களையும் பாருங்கள். அவை மருத்துவர் மேற்கொள்ளும் அனுமானங்களை மட்டுமன்றி அவரின் உளவியல்ரீதியான அணுகுமுறைகளையும் காட்டுகின்றன.

"ஒண்டும் விருப்பமில்லையாம். வயிறும் ஊதிக்கிடக்கு. சோம்பிச் சோம்பிக் கிடக்கிறா. என்னெண்டு புரியுதில்லை" அம்மா சலிப்புடன் சொன்னா.

அவளின் சிறு வருத்தத்தையும் சகிக்க முடியாத இவள் சொந்த அம்மாவாக இருக்க முடியாது. மாமியாராகத்தான் இருக்க வேண்டும்.

"சாப்பாட்டைக் கண்டால் இப்படியும் ஒருத்திக்கு ஓங்காளம் வருமே... எனக்கெண்டால் ஒண்டுமா விளங்குதில்லை..." அவள் இழுத்து இழுத்து பேசியது நல்லதுக்கல்ல என மனம் குருவி சாத்திரம் கூறியது.

வெறும் குற்றம் சாட்டும் தொனி அல்ல. உள்ளார்ந்த வியப்பும் அல்ல!

சந்தேகிக்கும் பார்வை!

புதிதாக வந்த மருமகளை சற்றும் நம்பாமை தொனித்தது.

திரும்பிப் பார்த்தபோது மருமகளின் முகம் ஆற்றாமையால் சட்டெனக் கறுத்தது. எனது மனதில் ஆழமாக இரத்தம்சீறக் கீறியது போலிருந்தது.

'அடப்பாவி கலியாணம் கட்டி ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் மருமகள் மீது இத்தகைய ஏடாகூடமான சந்தேகமா?' ஆத்திரமாக வந்தது.

இனியும் முடியாது அவளிடம் பேசித்தானே ஆக வேண்டும்.

மாமியாரிடம் அல்ல!

இவ்வளவு நேரமும் பேசா மடந்தையாக இருந்த நோயாளியிடம்.

"பீரியட் எப்படி?" எனப் பொதுவாகக் கேட்டேன்.

பீரியட் எப்ப வந்தது? என்று கேட்கவில்லை.

மாமியாரின் சொற்களால் மனம் கறுத்த சூழ்நிலையில் நானும் அவளை எனது வார்த்தைகளில் நோகவைக்க விரும்பவில்லை. எனவே பொதுவாகக் கேட்பது போல எனது வினாவை எழுப்பினேன்.

இன்னொன்று,

'சலம் போகைக்கை எரியுதோ' சிறுநீர்த் தொற்றாக இருக்குமோ என்ற எண்ணம் எழுந்ததில் கேட்டேன்.

'ஒரு எரிவும் கிடையாது. பைப் திறந்தது போல வீச்சாகப் போகிறது' என்றாள்.

காலையில் வந்த நோயாளி தான் குளிப்பதற்கு பைப்பைத் திறந்ததும், சிறுநீர் சிந்துவதுபோல முக்கி முனகிக்கொண்டு வந்ததாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அவர் புரஸ்ரேட் நோயாளி.

இப்படியான ஒப்பீடுகளும் எழுத்தை ரசிக்க வைக்கின்றன.

மேலும், வெளிநாடுகளில் வாழும் முதியோர் மட்டும்தான் மன அழுத்தத்துடன் வாழவில்லை, இலங்கையிலும் இப்போது இதே கதைதான் என்பதை மிகவும் துல்லியமாகவும் மனதை உலுக்கும் வகையிலும், 'எனக்குச் சாக மருந்து தாங்கோ' சொல்கிறது. மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என ஊருக்கு அஞ்சி, முதியோர் இல்லங்களுக்கு முதியோரை அனுப்பாமல் வீட்டில் வைத்திருந்து துன்புறுத்துபவர்களையும் டொக்டர் இதில் சாடுகிறார். முதியோர் இல்லங்களில் வேலைசெய்பவர்களுக்கு, முதியோரைக் கவனிப்பதுதான் வேலை என்பதால் அங்கிருக்கும் முதியோர் ஒப்பீட்டளவில் மிகுந்த கவனிப்புடன் பராமரிக்கப்படுகிறார்கள் என்பதே உண்மை. இவ்வாறே ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து குடித்து மதுவுக்கு அடிமையாகும் துர்ப்பாக்கியம் மேலைத் தேசங்களில் வாழும் குடும்பங்களில் மட்டுமன்றி எங்களின் நாட்டிலும் நிகழ்கிறது என்பதைக் காட்டுகிறது, 'ஆஸ்த்மாவும் மதுவும்'.

தயிர், வாழைப் பழம் போன்றவற்றைச் சாப்பிட்டமையால் அல்லது முழுகினதால்தான் தடிமன் வந்திருக்கிறது என்றோ அல்லது அஸ்மாவால் சிரமப்பட வேண்டியிருக்கிறது என்றோ ஒருவரைக் குற்றம்சாட்டுவது எவ்வளவு பிழையான விடயமென்பதையும் உணவுக்கும் அவற்றுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் இந்தப் பகிர்வை வாசிக்கும் வாசகர்கள் உணர்ந்துகொள்ள முடியும். அதேபோல தண்ணீர், பழங்கள் என்பனவற்றைப் பிள்ளைப்பெற்ற பெண்ணுக்குக் கொடுக்காமல் விடுவதால் வரும் மலச்சிக்கலும் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. அதை வாசித்த போது, வெறும் ரஸ்க் பிஸ்கற் உடன் பிரசவித்த என்னைப் பார்க்கவந்திருந்த அம்மாவிடம் "எனக்குச் சரியாய்ப் பசிக்குது, எனக்குச் சாப்பாடு வேணும், சமிபாட்டுத் தொகுதிக்கும் இனப் பெருக்கத் தொகுதிக்கும் ஒரு தொடர்பு மில்லை." எனக் கூறி அவவை வீட்டுக்குத் திருப்பியனுப்பியது எனக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பிரசவம் சிக்கல்கள் நிறைந்த பிரசவமாக இருந்ததாலும், இரத்தமேற்ற வேண்டிய தேவையிருந்ததாலும் எனக்கு உதவுவதாக நினைத்து அம்மா ரஸ்க் பிஸ்கற் உடன் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்திருப்பா. அதேபோல "தாய்ப்பாலுக்கூடாகக் குழந்தைக்குமெல்லோ சாராயம் போகும், மருந்துக்கும் நான் அதைக் குடிக்கமாட்டன்" என்றபோது என் நலனுக்கு அது நல்லதெனெ நம்பிப் பழைய சாராயமாகத் தேடிவாங்கி வைத்திருந்த அப்பாவுக்கு வந்த ஏமாற்றமும் நினைவுக்கு வந்தது.

மேலும், பல்வேறு நோய்கள் பற்றிய விளக்கங்களுடன், முக்கியமாக நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புக்கள் இதில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அண்மையில் கலந்துகொண்டிருந்த பட்டறை ஒன்றின்போது, நீரழிவு நோய் எதனால் ஏற்படுகிறது, அதற்காகப்

பரிந்துரைக்கப்படும் மருந்துகள் எவை, அவை உடலில் தொழிற்படும் விதங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்றெல்லாம் விளங்கப்படுத்தி விட்டு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா என அந்தச் செவிலியர் கேட்டார். அப்போது அங்கிருந்த ஒருவர், ''நாலைஞ்சு வருஷத்துக்கு குளிசை எடுத்துப்போட்டு பிறகு சாப்பாட்டாலை கட்டுப்படுத்தலாம்தானே'' எனத் தன் கருத்தைக் கேள்வியாகக் கேட்டபோது மொழிபெயர்ந்த எனக்கே என்னடா என இருந்தது. அவ்வகையில் நோய் மற்றும் அதற்கான மருந்துகள் பற்றிய போதுமான அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமென்பதையும் இந்த நூல் கூறவிழைகிறது எனலாம்.

அத்துடன் படிப்பு, படிப்பு என்று பிள்ளைகளை விரட்டும் பெற்றோர், அதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் அழுத்தங்களையும் பாதிப்புக்களையும் உணர்வதற்கும் இந்த அனுபவப் பகிர்வு நிச்சயமாக உதவும். மேலும், கூடஇருப்பவர்களைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காமல் ஒருவர் செய்யும் செய்கையின் பாதிப்பைக் கேலியாகவும் அதேவேளையில் அழகாகவும், 'மருந்தால் வருத்தம்' என்ற பதிவில் டொக்டர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஒரே உடம்பு உழைவும் இருமலுமாகக் கிடக்கு. மருந்து எடுத்தும் மாறவில்லை'' என்றவள் பேசி முடிவதற்கிடையில் பக்கென இருமத் தொடங்கினாள். திடுக்கிட்ட நான் சட்டென கதிரையை தள்ளி சற்று அப்பால் நகர்ந்து கொண்டேன்.

பரந்த மனசு அவளுக்கு. தனக்கு கிடைத்தது மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற பொதுநல நோக்கு!

உயிர்கொல்லி கொரனோ வைரஸ் வந்தும் கூட இருமும் போதும் தும்மும் போதும் சளித் துகள்கள் பராவாது துணியால் மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற அரிவரிப் பாடத்தைக் கூட இன்னமும் படித்துக் கொள்ளாதிருக்கிறாள்.

இவள் மட்டுமல்ல சமூகத்தில் இவள் போன்ற பலர் நிரம்பிக் கிடக்கின்றனர். பஸ்சில், கடைகளில் கூட்டங்களில், தியேட்டர்களில் உணவகங்களில் ... எங்கெல்லாம் மனிதர்கள் நிரம்பிக் கிடக்கிறார்களோ அங்கெல்லாம் துணியால் மூடாமல் தும்மியும் இருமியும் கிருமிகளை வாரி இறைக்கும் வள்ளல்களை நிறையவே காணலாம்.

மேலே கூறிய சம்பவம் போன்ற சம்பவங்களுக்கு நாங்களும் நிச்சயம் முகம்கொடுத்திருப்போம். கொரோனா வந்து மூன்று வருடங்களாகியும் சிலருக்கு இன்னும்தான் முகக் கவசத்தை எப்படி ஒழுங்காக அணிவதென்றோ, தும்மும்போதும் இருமும்போதும் ஏதோ ஒருவகையில் வாயையும் மூக்கையும் மூடவேண்டுமென்றோ தெரிவதில்லை அல்லது அவற்றைப் பற்றி அவர்கள் கரிசனை கொள்வதில்லை. ஒருவர் தும்மும்போது துகள்கள் எவ்வளவு தூரம் பாயும் என்பதைக் கண்களால் பார்க்கக்கூடிய காட்சிப்பொருள் ஒன்று இங்குள்ள ஒன்ராறியோ சயன்ஸ் சென்ரரில் உள்ளது. பொத்தான் ஒன்றை அழுத்தியதும் சிறுமி வடிவிலான அந்தக் காட்சிப்பொருள் தும்மும். அப்படித் தும்மும்போது அந்தச் சிறுமியின் வாயிலிருந்து பாயும் நீர்த்துளிகள் நீண்ட தூரம் கீற்றுக்களாகச் சிதறிச் செல்லும். அதனை முதல் முறையாகப் பார்த்தபோது நம்பமுடியாமல் இருந்தது. ஒருவர் தும்மும்போது, மணித்தியாலத்துக்கு 100 மீற்றர் வேகத்தில் வெளியேறும் துகள்கள் மூன்று முதல் ஆறு அடி தூரத்துக்கே பொதுவாகச் செல்லுமாயினும், சூழலுக்கேற்ப 25 அடிக்கு மேலான தூரம்வரைகூடச் செல்லலாமென்பது ஆய்வுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. தும்மல் அவ்வளவுதூரம் செல்கிறது, ஆனால் அதனூடாக வெளியேற்றப்படும் கிருமிகளோ காற்றில் கலந்து இன்னும் பலமடங்கு தூரத்துக்குச் செல்கின்றன. எனவே தன்னிடமிருக்கும் கிருமிகளை மற்றவர்களுக்குப் பரப்பாமல் இருத்தல் ஒருவரின் தார்மீகக் கடமை எனலாம்.

இன்னொரு குறிப்பிடத்தக்க விடயமென்னவென்றால், டொக்டர் என்றாலும் அவரும் மனிதர்தானே, சிலவேளைகளில் அவரின் அனுமானங்கள் பிழைத்து விடுவதுமுண்டு என்பதை 'டொக்டர் பிழைவிடுறார்' என்ற பதிவில் டொக்டர் சொல்லியிருப்பது அவரின் சமநிலையான பார்வையும் நல்ல பண்பையும் காட்டுகிறது.

இந்த நூலில் சில எழுத்துப் பிழைகள், உடலின் தோற்றம் பற்றிய கேலிகள் போன்றவை இருக்கின்றனதான். இருப்பினும் ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கும் 28 பதிவுகளைக் கொண்டிருக்கும் நிறைவான இந்த நூலை நான் வாசிக்க வேண்டுமென்று எனக்கு அனுப்பிவைத்த டொக்டருக்கு என் மனமார்ந்த நன்றி பல.

○○○

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

மலையகம் 200: தமிழ்ச்சங்கத்தில் தொடர் நிகழ்ச்சி

கொழும்புத் தமிழ்ச்சங்கம், மலையகம் -200 என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட உரைத்தொடரில் ஐந்தாவது நிகழ்வாக 19-05-2023 அன்று திரு. சதீஷ் செல்வராஜ் 'சோவியத் புரட்சி மலையக கலை இலக்கியச்சூழலில் ஏற்படுத்திய தாக்கம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்வுக்கு மருத்துவர் தி. ஞானசேகரன் தலைமை தாங்கினார்.

●●●

பண்பாட்டின் ஆளுமைகள் – விருது வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைகழக நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற வீணை மைந்தன் புதிய மூன்று நூல்களின் வெளியீட்டின் போது கனடா உதயன், மற்றும் ரொரன்ரோ மனித நேய அமைப்பு ஏற்பாட்டில் கனடிய பாராளுமன்ற அங்கீகாரத்துடனான 'பண்பாட்டின் ஆளுமை' விருது வழங்கல் இடம்பெற்றது. யாழ்ப்பாண மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என், சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெற்ற இவ் வபவத்தின் முதன்மை விருந்தினராக யாழ்,பல்கலைகழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா அவர்களும் சிறப்புவிருந்தினராக கனடா உதயன் பிரதம ஆசிரியரும் ரொரன்ரோ மனித நேய அமைப்பின் தலைவருமான திரு ஆர். என்.லோகேந்திரலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தாயகத்தில் ஆற்றிவரும் ஆக்கத் திறனான கலைவழி சுகநலக்கல்விப் பணிகளைப்பாராட்டி வைத்தியநிபுணர் சி. சிவன்சுதன் அவர்களுக்கும், தாயகத்தில் ஆற்றிவரும் விழிப்புலனற்ற பிள்ளைகளுக்கான வாழ்வகப்பணி,உட்படுத்தல் கல்விக்கான பணிகளைப் பாராட்டி கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் அவர்களுக்கும், தாயகத்தில் ஆற்றி வரும் அர்ப்பணிப்பான கிராமிய வலுவூட்டல் பணிகளைப்பாராட்டி உள வளத்துணையாளர்,எழுத்தாளர் செ.யோசப்பாலா அவர்களுக்கும் தாயகத்தில் ஆற்றி வரும் தனித்துவமான இசையமைப்பு,காண்பிய படைப்பாக்கப்பணிகளைப்பாராட்டி ஆக்க இசைக்கலைஞர் கு.அற்புதராஜ், அற்புதன் அவர்களுக்கும் தாயகத்தில் ஆற்றிவரும் நிறைந்த தேடலுடனான தமிழியல் மீள் பதிப்பாக்கப் பணிகளைப்பாராட்டி ஆசிரியர்,ஆய்வாளர் சி.ரமேஷ் அவர்களுக்கும் தாயகத்தில் ஆற்றி வரும் பால்நிலைச் சமத்துவ அடையாளத்துடனாக தனித்துவ இசைப்பணியைப் பாராட்டி நாதஸ்வரக்கலைஞர் திருமதி தையல் நாயகி சுந்தரம் அவர்களுக்கும் பண்பாட்டின் ஆளுமைகள் விருது வழங்கப்பட்டது

●●●

வாசகர் பேசுகிறார்

மே தினமானது இத்தனை திருப்பங்களைக் கண்டிருப்பதை தெளிவுபடுத்திய ஆசிரியர் பக்கத்துக்கு நன்றி. மனித வாழ்வின் முடிவானது எப்படியிருப்பினும், அது இறைவனின் விருப்பத்திற்கே என்னும் மனப்பக்குவத்தினை "மெசேஜ்" ஆகத்தரும், எழுத்தாளர் உ.நிசார் அவர்களின் "மீட்சி" சிறுகதை சிறப்பு.

"எனக்குள்ளே இருக்கும் அழகும், எனது பெறுமதியும் : தட்டிக்கழிக்க முடியாதவை" என்னும் வைர வரிகள்...... உலகில், இளமை நிலையாமை,வாழ்க்கை நிலையாமை போன்றவற்றை ஒவ்வொருவரும் தெரிந்து(உணர்ந்து)கொள்ள வேண்டும் எனினும், இறுதிவரை வாழ்ந்தேயாக வேண்டும் என்னும், அறிவியல் நிர்ப்பந்தத்தை, அழுத்தமாகத் தெரிவிக்கும், "நான் இன்னும் கணக்கெடுக்கப்பட வேண்டியவன்" (மொழிபெயர்ப்புக் கவிதை) சிறப்பு. கவிஞர்.என்.நஜ்முல் ஹுசைன் அவர்களுக்கு நன்றி.

–ஸ்ரீராம் விக்னேஷ்–

•••

பெறுமதியான பல ஆக்கங்களை தாங்கி மக்கள் மத்தியில் வாசிப்பு ஆர்வத்தைத்தூண்டுகின்ற தங்கள் சஞ்சிகையின் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறேன்.

நான் வாசிப்பின் மேல் கொண்ட ஆர்வத்தின் விளைவால் வாசிப்பு என்னை எழுதத் தூண்டியுள்ளது. அதில் தங்கள் சஞ்சிகையின் பங்கும் ஓரளவு இருக்கத்தான் செய்கிறது.

– பா. சிவதர்சன்

•••

இந்த நாள் இனிதாகட்டும். மாதாந்தம் தவறாது வரும் ஞானம் சஞ்சிகையின் மூலம் பலதையும் பலரையும் அறிந்துகொள்ள முடிகிறது. அதில் எனது கவிதைகளுக்கும் இடமளித்து ஆதரவு தரும் ஞானம் சஞ்சிகைக்கு எனது நன்றிகள்.

- கனகசபாபதி செல்வநேசன்

•••

மே மாத ஞானம் இதழ் கிடைத்தது. மே தினக் கொண்டாட்டம் எவ்வாறு உருவானது என்ற ஆசிரியர் தலையங்கம் மிகப் பயனுடையது. அத்தலையங்கத்தை வாசித்த பின்னரே மே தினக் கொண்டாட்டத்தின் பின்னணியை அறிந்து கொண்டேன். சிறுகதைகள் யாவுமே சிறப்பாக இருந்தன. குறிப்பாக மொழிபெயர்புக் கதையான தண்ணிரின் மேல் தடால் ஓசை என்ற சீன மொழிபெயர்ப்புக்கதை என்னை மிகவும் கவர்ந்தது. அந்தக் கதையை எழுதிய சீன எழுத்தாளர் ஐவெய் பற்றிய குறிப்பும் பயனுடையது. இப்படி மொழிபெயர்ப்புக் கதைகளை பிரசுரிக்கும்போது மூல எழுத்தாளர் பற்றிய குறிப்புகளைத் தருவதால் பிறமொழி எழுத்தாளர்கள் பற்றி அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வாசகருக்குக் கிடைக்கிறது. மொழிபெயர்பாளர் சு. முரளிதரன் சிறப்பாக கதையை மொழிபெயர்த்திருந்தார். வாழ்த்துக்கள்.

– இரா.அ. இராமன் கண்டி

•••

நாட்டியகலாநிதி கார்த்திகா கணேசர் ஞானத்தில் அவ்வப்போது பல தகவல்தரும் கட்டுரைகளை எழுதிவருபவர். சென்ற இதழில் அவர் எழுதிய காளமேகம் கட்டுரை சுவையானது. காளமேகம் 'நிந்தா ஸ்துதி' பாடுபவர் எனபதை பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயம் உள்ளவர்கள் அறிவார்கள். ஆனாலும் கட்டுரையாசிரியர் தந்துள்ள 'பார்ப்பான் மாடு தின்பானாம்' கவிதை பலரும் அறிந்திராதது. பேராசிரியர் துரை மனோகரனின் பத்தியில் அவ்வப்போது பலுசுவையான சமகால நகழ்வுகளை அறிய முடிகிறது. சென்ற இதழில் என்னதான் செய்வது? என்ற தலைப்பில் அவர் எழுதிய பத்தியில் - நாட்டில் பயிர்களை நாசம் செய்யும் குரங்குளை ஏற்றுமதி செய்யலாம். நாட்டையே நாசமாக்கும் பேரினவாதக் குரங்குகளை என்னதான் செய்வது?" என்ற வரிகள் எவ்வளவு யதார்த்தமானவை! அந்த வரிகள் என்னுள் பல சிந்தனைகளைத் தூண்டியது. பாராட்டுக்கள்

– ஐ. ராமசாமி, சுன்னாகம்

•••

(15) பராக்கிரமபாகு தொடர் – 1965 –77


50
ශ්‍රී ලංකා මහ බැංකුව
S/80 62897
රුපියල් පනහයි
FIFTY RUPEES
ஐம்பது ரூபாய்

இந்த சிலையின் முக்கியத்துவமானது, இந்தச் சிலையின் உருவம் தாங்கிய தொடர் நாணயத்தாள்களை 1965ஆம் ஆண்டு தொடங்கி தொடராக வெளியிடக் காரணமாய் அமைந்தது. இதிலே 2,5,10,50 மற்றும் 100 ரூபாய்த்தாள்கள் வெளியிடப்பட்டன. இந்தத் தொடரிலே முன்னர் 5 ரூபாய் நாணயத்தாளிலே காணப்பட்டவாறு சிலையின் முழு உருவம் பொறிக்கப்பெறாது சிலையின் மேல் அரைப்பாகமே பொறிக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டு தொடங்கி 1977ஆம் ஆண்டுவரை 12 ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்த நாணயத் தாள்கள் சிற்சில மாற்றங்களுடன் தொடர்ந்தும் வெளியிடப்பட்டன. உதாரணமாக 1968ஆம் ஆண்டு வெளியிட்ட தாள்களில் பெறுமதி தவிர்ந்த அனைத்து விபரங்களும் சிங்கள மொழியில் மாத்திரமே அமைந்திருந்தன. பிற்கால வெளியீடுகளில் மூன்று மொழிகளும் உள்ளடக்கப்பட்டன. இந்தத் தாள் தொடரானது இலங்கை நாணய வரலாற்றிலே King Parakramabahu The Great Series என்று அழைக்கப்பெறும்.

2
CENTRAL BANK OF CEYLON
122105

5
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF CEYLON
277488
1974-08-27
FIVE RUPEES

10
இலங்கை மத்திய வங்கி
543099
1977-08-26
TEN RUPEES

(16) இலங்கையின் முதலாவது இரண்டு ரூபாய் நாணயம்

CEYLON
இரண்டு ரூபாய்
TWO RUPEES
1968


GROW MORE FOOD

1968ஆம் ஆண்டு UNOவின் இரண்டாவது உலக உணவு மாநாட்டை முன்னிட்டு பராக்கிரமபாகுவின் உருவம் பொறிக்கப்பட்ட 2 ரூபாய் நாணயம் நினைவு நாணயமாக வெளியிடப்பட்டது (Commemorative Coin). இதுவே இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது இரண்டு ரூபாய் நாணயமாகும். பொலனறுவை இராசதானி காலத்திலே பாரிய நீர்ப்பாசனங்களை அமைத்து உணவு உற்பத்தியிலே தன்னிறைவடையக் காரணமாக இருந்த முதலாம் பராக்கிரமபாகுவின் பணிகளை நினைவு கூர்ந்து 'அதிக உணவு பயிர்டுக' என்ற வாசகம் இந்த நாணயத்திலே பொறிப்பட்டிருந்தது. முதலாம் பராக்கிரமபாகு காலத்திலே அரிசி பிற நாடுகளுக்கும் மன்னனால் ஏற்றுமதி செய்யப்பட்டது.

(17) நிர்வாக மாவட்ட 10 ரூபாய் குத்திகள் – 2013

POLONNARUWA
2013

இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக 2014ஆம் ஆண்டு குறித்த மாவட்டங்களைச் சிறப்பிக்கும் மாவட்டத்துக்குரிய சின்னங்களைப் பொறித்து 10 ரூபாய் குத்திகளை இலங்கை மத்தியவங்கி வெளியிட்டது. இவை 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்டபோதும் 2013 என்றே நாணயங்களிலே குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த வரிசையிலே பொலனறுவை மாவட்டத்தைக் குறிக்கும் நாணயத்திலே பராக்கிரமபாகுவின் சிலையுலும் அமைந்திருந்தது.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/60/2023



இலங்கையின் நாணய வரலாற்றிலே கடந்த 60–70 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் நாணயத்தாள்களிலும் நாணயங்களிலும் பொறிக்கப்பெறும் இந்தப் பொலனறுவை உருவம் யாரைக் குறிக்கின்றது என்பதற்கு பலவிதமான கருத்துக்கள் உள்ளன.

(1) முதலாம் பராக்கிரமபாகு

இது முதலாம் பராக்கிரமபாகுவைக் குறிக்கின்றது என்ற பொதுவான கருத்து இருந்தாலும் இலங்கை நாடு முழுவதையும் ஒரு குடையின்கீழ் ஆண்ட வீர மன்னன் ஒருவன் முனிவன் கோலத்தில் இருக்க முடியாது என்பதால் பலரும் இந்த உருவத்தைப் பராக்கிரமபாகு என்று ஏற்றுக்கொள்வதில்லை.

(2) அகத்திய முனிவர்

குறுமுனிவரின் தோற்றம் கையிலே ஓலைச் சுவடியை ஏந்தியிருக்கும் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையிலே இதனை அகத்திய குறுமுனி என்கின்ற கருத்தையும் ஆய்வாளர்கள் முன்வைப்பர்.

(3) போதிசத்துவர் – கபிலவஸ்த்து – கபில முனிவர்

இந்தச் சிலையை அகத்திய முனிவர் என்று கூறுவதைப் போன்றே போதிசத்துவர், அல்லது கபிலவஸ்த்து அல்லது கபில முனிவனை இந்தச் சிலை குறிக்கின்றது எனக் காரணங்களைக் காட்டி சில ஆய்வாளர்கள் தம் முடிவுகளை முன்வைப்பர்.

(4) கருவூர்த் தேவர்

இராஜராஜனின் ஆட்சிக் காலத்திலே பொலனறுவை தலைநகரமாக இருந்தமையாலும் அவனுடைய குருவாக திருவிசைப்பா பாடிய கருவூர்த்தேவர் இருந்தார் என்பதாலும் கருவூர்த் தேவரையே இச்சிலை குறிக்கின்றது என்ற கருத்தும் உள்ளது.

(5) புலஸ்திய ரிஷி

புலஸ்த்தி (பௌலஸ்திய வம்சம்) என்னும் ரிஷி வாசம் செய்ததால், புலஸ்த்தி மருவி பொலனறுவை என்னும் பெயர் பெற்றதை ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வர். மேலும் இந்த சிலைக்குப் பின்புறமாக 'பு ல த ஸ' என்னும் சொல் கொண்ட சாஸனத்தை ஆய்வாளர்கள் கண்டு பதிவுசெய்துள்ளார். புராணங்கள், மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றிலே கூறப்பெற்றுள்ள புலஸ்திய ரிஷியின் மகன் விஸ்ரவ ரிஷி ஆவார், விஸ்ரவ ரிஷியின் மகனே இராவணன். அதாவது புலஸ்த்திய ரிஷியின் பேரன் இராவணன். இக்காரணங்களால், பொலனறுவையில் அமைந்துள்ள இச்சிலையை புலஸ்திய ரிஷியின் சிலையே என்ற முடிவை மேலும் சில ஆய்வாளர்கள் முன்வைப்பர்.

ஆக இலங்கை நாணய வரலாற்றிலே பாரிய தாக்கம் செலுத்திவரும் இந்தக் கற்சிலை உருவமானது யாரைக் குறிக்கின்றது என்ற ஆணித்தரமான முடிவு இல்லை என்றே கூறல்வேண்டும்.



1968ஆம் ஆண்டு வெளியான 100 ரூபாய் நாணயத்தாள். இதிலே பெறுமதியைத் தவிர மிகுதி விபரங்கள் சிங்கள மொழியில் மாத்திமே உள்ளன. பின்னர் 1969ஆம் ஆண்டு வெளியிட்ட இதே 100 ரூபாய் நாணயத்தாளிலே விபரங்கள் சிங்களம - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்

ISSN 2478-0340
9 772478 034009

PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195